பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

விலை ரூபா 15.00

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 20 வியாழக்கிழமை (03.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 189

-3 JUN 2010

## முன்னர் நியமித்த ஆணைக்குழு அறிக்கைகளுக்கு என்னவாயிற்று...?

# சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தவே

# மஹிந்த அரசின் நல்லிணக்கக் குழு!

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 03

சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தவே மஹிந்த ராஜபக்ஷ அரசு நல்லிணக்க ஆணைக் குழுவை நியமித்திருக்கிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மனித உரிமை குற்றச்சாட்டு தொடர்பில் சர்வதேசத்துக்குப் பதிலளிக்கும் முகமாக முன்னாள் நீதியரசர் சீ.ஆர்.டி சில்வா தலைமையில் ஆணைக்குழுவொன்றை அரசு நியமித்துள்ளது. அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிண்டன் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் சந்தித்தபோது சர்வதேச விசாரணை தேவையில்லை, சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளோம் என்று கூறினார்

இது தவறு என நான் கூறமாட்டேன். 2007 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவின் அரசு முதன் முறையாக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை எதிர்கொண்டது. அந்தச் சம்பவங்களை விசாரிப்பதற்கு உதலாகம ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்கள் புத்தளத்தில் கைது!

கொழும்பு,ஜூன்3

புத்தளம் பிரதேசத்தில் தமிழ் இளைஞர்கள் இருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

மத்துகமை பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி இருவரும் புத்தளம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளை நடத்துமாறும் அதுவரையில் தடுப்புக் காவலில் அவர்களை வைக்குமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ஒ-சி)

## இந்திய - இலங்கை எதிர்க்கட்சிகள் சந்திப்பு

கொழும்பு,ஜூன்3

இந்திய மற்றும் இலங்கை எதிர்கட்சித் தலைமைகள் கொழும்பில் நேற்றுச் சந்திப்பொன்றை நடத்தியுள்ளன.

இந்தச் சந்திப்பானது எதிர்கட்சி அலுவலகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது. இந்தியாவின் பிரதான எதிர்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் டில்லி சட்டமன்றச் சபையின் எதிர்கட்சித் தலைவர் ஜகதீஸ்முகி தலைமையிலான குழுவினர் இலங்கை எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு ஒரு நட்பு ரீதியான சந்திப்பு எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சந்திப்பின்போது இலங்கையில் 7 மாகாணங்களில் எதிர்க்கட்சித் தலைவர்களாக செயற்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் 7 பேரை டில்லிக்கு அழைத்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை இந்திய எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (ஒ-சி)

## உரிய தீர்வுத் திட்டம் முன் வைக்கப்பட்டால் கூட்டமைப்பு ஆதரவாக வாக்களிக்கும்

### கட்சிக்குள் பிளவு என்பது கேலிக் கூத்து என்கிறார் அரியநேத்திரன்

கொழும்பு,ஜூன்3

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எந்தவொரு பிளவும் கிடையாது - இப்படி அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மஹிந்த அரசால் தமிழர் பிரச்சினைக்கு உகந்த தீர்வு முன்வைக்கப்படுமாக இருந்தால் அத்தீர்வை நடைமுறைப்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்குப் பெற்றுக் கொடுக்கும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு ஓரிரு நாள்களுக்கு முன் பேட்டி வழங்கி இருந்தார்.

எப்போதும் எதிர்ப்பு அரசியலையே முன்னெடுத்து வந்த கூட்டமைப்புக்குள் சம்பந்தரின் இக்கருத்தினால் பிளவுநிலை வெடித்துள்ளது என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசிக்காமல் அவர் இப்படி ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிட்டார் எனக் கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் அதிருப்தியின் உச்சத்துக்கே சென்று விட்டார்கள் என்றும், எந்த நேரமும் அவர்கள் கூட்டமைப்பை விட்டு விலகக் கூடும் என்றும் அந்த ஊடகங்கள் தவறான தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாம் உலகப் போரில் வீசப்பட்ட குண்டு நேற்று வெடித்ததில் மூன்று பேர் பரிதாபப் பலி

### ஜேர்மனியில் சம்பவம்

கொழும்பு,ஜூன்3

இரண்டாம் உலகப்போரின் போது ஜேர்மனியின் மீது வீசப்பட்டு, வெடிக்காத நிலையில் காணப்பட்ட குண்டு ஒன்று நேற்று வெடித்ததில் மூவர் உயிரிழந்தனர். மேலும் அறுவர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் மத்திய ஜேர்மனியில் உள்ள கோயெட்டி ஜென் நகரில் இடம்பெற்றுள்ளதாகச் சர்வதேசச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி குண்டு அங்கு காணப்படுகிறது என அண்மையிலேயே (24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் மருமகனின் சொத்துகள் முடக்கப்படும்?

கொழும்பு,ஜூன்3

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா எம்.பியின் மருமகன் தனுன திலகரத்ன இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் ஆஜராகாவிட்டால் அவரது அசையும் மற்றும் அசையாச் சொத்துகளை முடக்கவேண்டி ஏற்படலாம் என கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஹைகோர்ப் கேள்வி மனு தொடர்பான வழக்கின் இரண்டாவது சந்தேக நபரான தனுன திலகரத்ன நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகியுள்ளார்.

சந்தேக நபர் 'தேடப்படுகின்றார்' என அறிவிக்கும் சுவரொட்டிகளை அச்சிட்டு வெளியிடவும் இரகசியப் பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

சந்தேக நபரின் அசையும் மற்றும் அசையா சொத்துகள் தொடர்பான விவரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஒ-சி)

## மலேஷியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் இலங்கைத் தூதரக அதிகாரிகளைச் சந்திக்க மறுப்பு

கொழும்பு, ஜூன்,03

மலேஷியாவில் சட்டவிரோத குடியேற்ற வாசிகளுக்கான முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழ் அகதிகள் இலங்கைத் தூதரக அதிகாரிகளைச் சந்திக்க மறுத்து விட்டார்கள்.

ஈழத் தமிழ் அகதிகள் 75 பேர் அவர்களுக்கு வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் பெற்றுத் தர வேண்டும் என்று பிரதானமாக வலியுறுத்தி கடந்த ஒருவாரத்துக்கும் மேலாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்கள்.

மலேஷிய அரசு அவர்களுக்கு வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் பெற்றுக் கொடுக்க இணங்கி உள்ளது.

அதையடுத்து அவர்கள் போராட்டத்தை நேற்றுமுன்தினம் முடித்துக் கொண்டனர்.

இந்நிலையில் மலேஷியாவுக்கான இலங்கைத் தூதரக அதிகாரிகள் அவர்களைச் சந்திக்கப் பகீரத முயற்சி எடுத்து வருகின்றனர்.

ஆனால், தூதரக அதிகாரிகளைச் சந்திக்க முடியாது என்று அகதிகள் திட்டவட்டமாக அறிவித்து விட்டார்கள் என மலேஷியாவுக் கான இலங்கைத் தூதுவர் கலாநிதி டி.டி.ரணசிங்க தெரிவித்தார். (ஒ-சி)

## அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நெடுங்கேணிக்கு விஜயம்

கொழும்பு,ஜூன்3

பொருளாதார அபிவிருத்தித்துறை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் ஆகியோர் வவுனியாவின் மீள்குடியேற்ற கிராமமான நெடுங்கேணிக்கு நேற்று விஜயம் செய்தனர்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் 'என்றிப்' திட்டத்தின் கீழ் நெடுங்கேணியில் புதிதாக கட்டப்படவுள்ள கமநல திணைக்கள அலுவலகத்துக்கான அடிக்கல் நடுவதற்காகவே அமைச்சர் பஸில் அங்கு விஜயம் மேற்கொண்டார்.

உலக வங்கியின் குழுவினர், வட மாகாண (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வர்த்தக நடவடிக்கையில் காட்டும் அக்கறை இனப்பிரச்சினைத் தீர்விலும் காட்ட வேண்டும் இந்தியா

## நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் வலியுறுத்து

கொழும்பு, ஜீன், 03

''நாட்டின் அபிவிருத்திக்கும், வர்த்தக உடன்பாடுகளுக்கும் இந்தியா அளிக்கும் பங்களிப்பை வரவேற்கின்றோம். ஆனால், அதே பங்களிப்பை நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்திலும் இந்தியா வழங்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாக உள்ளது.''

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரபா கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யுத்தம் நிறைவு பெற்றாலும் அது ஆரம்பமான காரணம் எஞ்சியுள்ளது. யுத்தத்திற்கு முன்பிருந்த நிலையைவிட தமிழர்கள் பின்நோக்கி தள்ளப்பட்டுள்ளார்கள். பல இலட்சக்கணக்கானோர் உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் இடம் பெயர்ந்துள்ளனர். அகதி முகாம் வாழ்க்கை தொடர்கின்றது. மீள் குடியேற்றம் இடம் பெற்றாலும் மந்தநிலையிலேயே நடக்கின்றது குடியேற்றப்பட்டவர்களின் வாழ்க்கைத்தரம் மோசமாகவுள்ளது.

அவசரகால சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலை பற்றி எவருக்கும் அக்கறையில்லை. வடக்கு, கிழக்கு பகுதிகளின் சிங்களக் குடியேற்றம் திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ் மொழிக்குரிய அந்தஸ்து அரச நிறுவனங்களில் முறையாக அமுல்படுத்தப்படுவதில்லை.

எமது மக்களின் நிலைமை, எதிர்காலம் என்பன கேள்விக்குறியாகியுள்ளன. வெறுமனே அபிவிருத்தி என்ற செயற்பாட்டை நாம் இரசித்துக்கொண்டிருந்தால் நாடு அபிவிருத்தியடைந்த பின்னர் நாம் மூன்றாந்தரப் பிரஜைகளாக மாறிவிடும் அபாயம் உள்ளதை அனைவரும் அறியவேண்டும்.

அதனாலேயே நாட்டின் அபிவிருத்தியுடன் சேர்ந்து எமது இனப்பிரச்சினையும் தீர்த்து வைக்கப்படவேண்டும். இந்தியவம்சாவளியினரின் குறிப்பாக மலையகத்தில் வாழும் தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை தரம் உயர்த்தப்படவேண்டும்.

இந்திய அரசு இலங்கையில் முதலீடு செய்வதிலும், வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதிலும், இந்திய இலங்கை கலாசாரங்களைக் கட்டியெழுப்புவதிலும், இலங்கைக்கான ஏனைய நாடுகளின் தலையீட்டை முறியடிப்பதற்கும் காட்டும் அக்கறையை எமது இனப்பிரச்சினைத் தீர்வில் இலங்கைக்கு பாரிய அழுத்தத்தை கொடுப்பதில் காட்டவில்லையென்பது மனவருத்தத்திற்குரிய விடயமாகும். இந்திய வம்சாவளி தமிழர்கள் இன்று அதிகமாக இலங்கையில் வாழ்கின்றார்கள் என்பதை இந்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் - இப்படி பிரபா கணேசன் எம்.பி. கூறியுள்ளார். (ஒ-சி)

# என்.டி.ரி.வி. ஒளிபரப்பிய விவரணக் காட்சியை வாபஸ் பெறுமாறு கோருகிறது இலங்கை அரசு!

கொழும்பு, ஜூன் 03

இந்தியாவின் முன்னணித் தொலைக் காட்சி ஊடகங்களில் ஒன்றான என்.டி.ரி.வியால் மூன்று முதல் ஆறு லட்சம் வரையிலான மக்கள் முட்கம்பிகளிலான தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை போன்ற விவரணக் காட்சி ஒளிபரப்பப்பட்டது. இதனை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

'பிளட் ஒன் வோட்டர்' என்ற தலைப்பில் என்.டி.ரி.வி. ஒளிபரப்புச் செய்த விவரணச் சித்திரத்தில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன என இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் எழுத்து மூலம் குறித்த தொலைக்காட்சிச் சேவைக்கு அறிவித்துள்ளார்.

எனவே, குறித்த விவரணக் காட்சியை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மூன்று முதல் ஆறு லட்சம் வரையிலான மக்கள் முட்கம்பிகளிலான தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பேராசிரியர் செனோய் வெளியிட்ட கருத்து அபத்தமானது எனவும், 30 ஆயிரம் பேர் மட்டுமே தற்போது இடம்பெயர் முகாம்களில் எஞ்சியுள்ளனர் எனவும் தூதுவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேராசிரியர் செனோயின் இந்தக் கருத்து அவரது கல்வித் தகைமைகளுக்கு இழுக்கை ஏற்படுத்தும். இதில் முற்றிலும் சோடிக்கப்பட்ட பொய்களை அவர் வெளியிட்டுள்ளார் என்று தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

விவரணச் சித்திரத்தில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட பல காட்சிகள் மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒளிப் பதிவு செய்யப்பட்டவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விவரணச் சித்திரத்தில் கருத்து வெளியிட்டுள்ள சில தமிழக மீனவர்கள் அப்பட்டமான பொய்களைத் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறிப்பாக இலங்கை இராணுவத்தினர் 300 தமிழக மீனவர்களைப் படுகொலை செய்துள்ளனர் என வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாதென அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய கடற் பரப்பிற்குள் பிரவேசித்து இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களை தாக்குகின்றனர் எனச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் நகைப்புக்குரியதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார ரீதியாக நன்மை அடையும் நோக்கில் ஆஸ்திரேலியாவில் அடைக்கலம் கோரும் இலங்கைத் தமிழர்கள் சிலர் வெளியிட்டுள்ள கருத்து ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தங்களது புகலிடக் கோரிக்கையை நியாப்படுத்தும் வகையில் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

என்.டி.ரி.வியின் செய்தி ஆக்கத் திறன் குறித்து இலங்கை மிகுந்த நன்மதிப் கொண்டுள்ளதாகவும், என்.டி.ரி.வியின் சென்னைப் பிரிவு வெளியிட்டுள்ள இந்த விவரணச் சித்திரம் உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கொண்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு விஜயம் செய்ய உள்ள சமயத்தில் இவ்வாறான ஆக்கங்களை ஒளிபரப்புச் செய்வது எற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையான தகவல்களை வெளியிடுவதற்குத் தமக்குச் சந்தர்ப்பம் அளிக்குமாறு அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-சி)

# புதிய இடைக்கால நிர்வாகம்

கொழும்பு,ஜுன் 03

இலங்கை கிரிக்கெட்டுக்காகப் புதிய இடைக்கால நிர்வாக சபையொன்றை விளையாட்டுத்துறை அமைச்சர் சீ.பீரத் நாயக்க நேற்று நியமித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக சபையின் தலைவராக டி.எஸ்.டி. சில்வாவும் செயலாளராக நிஷாந்த ரணதுங்கவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

சபையின் பொருளாளராக சுஜீவ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.


**கோழிக்குஞ்சு விநியோகம்**

ஒறிஜினல் (Orginal No.1 Broiler) புரொய்லர் குஞ்சு 07.06.2010 அன்று விநியோகிக்கப்படும். முற்பதிவு செய்யவும்.
*எமது கிளை நிறுவனம்* (சுட்டி பாம், வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம் 021 321 6290)
நல்லூர் பாம் சென்ரர்,
19 முருகேசர் லேன், நல்லூர்.
எமது T.P.: 021 222 6944 (98619)


## கண்ணீர் அஞ்சலி



எமது சபையின் தலைவர் திரு. சி.மாதவகுமார் அவர்களின்அன்புச் சகோதரன்

### சின்னத்துரை நித்தியானந்தன்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய
பரிபாலன சபையினர்.

*நந்தாவில்,*
*கொக்குவில்.* (99044)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வேணுகோபாலன் இராமன் ஆச்சாரி

பிறப்பு: 22.09.1975
இறப்பு :26.05.2008

துன்பங்கள் நெஞ்சை விட்டு
போகவில்லை ஐயா
உம் நினைவால்
அன்பினால் உம் இதய அறையில்
கட்டிப்போட்டீரே
இன்று உம் அன்பிற்கு ஏங்கிக்
காத்திருக்கின்றோம்.
ஓரிரு ஆண்டுகள் போனாலும்
உம் நினைவு எம்மை விட்டு
போவதில்லை.

தகவல்:
அம்மா, அக்கா,
அத்தான்
மருமக்கள்.

*ம.பேரின்பநாயகம்(அத்தான்)*
கஸ்தூரியார் வீதி,
முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (99056)

## மரண அறிவித்தல்

### *திருமதி துரை பத்மாவதி*



கலட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரை பத்மாவதி அவர்கள் நேற்று (02.06.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - செல்லம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னர் - பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரையின் அன்பு மனைவியும், புஸ்பராணி, லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் இராசரட்ணம் மற்றும் புஸ்பரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், தேவராசா (வயறிங் செல்வம்),விஜயராணி, கலாராணி, இந்திராணி, தேவராணி, உஷாராணி, உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், கங்காதேவி, பானுமதி, இராசலிங்கம், குலசிங்கராசா, சௌந்தரராஜன், நாகேஸ்வரன், குணசேகரன், நந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2010) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*34/13, ராமநாதன் வீதி,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.* (சி/568088)

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வேணுகோபால் ஆச்சாரி இராமன் ஆச்சாரி



*தோற்றம்*
*22★09★1975*

*மறைவு*
*26★05★2008*

சகோதரனே
நீ மறைந்து இரண்டு ஆண்டுகளா?
நம்பமுடியவில்லை
எத்தனை மாற்றங்கள்
நீ மறைந்து போனதும்
எம் வாழ்வில்

சகோதரன்
வே.பரமானந்தன்
குடும்பத்தினர்.

*நிரந்தர முகவரி:*
*306, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(99057)


**CIMA Accountant** ஆக வேண்டும் என கனவு காண்கிறீர்களா?
உங்கள் கனவிற்கு A/L or O/L பெறுபேறுகள் தடையா?
நீங்கள் உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவில் கற்கவில்லையா?
**CIMA** ற்கு ஆங்கிலம் ஒரு தடையா?

**CIMA UK**

100% சித்தி

வங்கிகள் மூலமான கடன் வசதிகள்

**Job Gurantee Skill Migration, Australia,Canda,UK**

நீங்கள் 16 வயதை கடந்திருந்தால் மட்டும் போதுமானது.
வர்த்தகப்பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவு மாணவர்களிற்கு விசேட பிரிவு.
CIMA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையம் (Listed College), பரீட்சை நிலையம்

**MCS**
* ICDL - International Computer Driving License
* DIE - Diploma in English (Duration 06 Months)
} Free

Supported By UNDP/JRRP

Call 772395895

பதிவுகளுக்கு 05-06-2010 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மேல் சபையினால் பயன் ஏற்படுமா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் யோசனைகளில் செனட் சபையை உருவாக்கும் திட்டமும் அடங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி ராஜபக்ஷ எதிர்வரும் 8ஆம் திகதி புதுடில்லி செல்லும்போது கையளிக்கும் அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளில் செனட் சபையும் அடங்கும் என்று கூறப்படுகிறது.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா உட்பட ஜனநாயக நடைமுறைகள் அமுலில் உள்ள நாடுகளில் கீழ் சபையான நாடாளுமன்றத்துக்குப் புறம்பாக மேல்சபை என்று அழைக்கப்படும் செனட் சபையும் இயங்கி வ்ருகிறது. பிரிட்டனில் இதனை பிரபுக்கள் சபை என்றும், இந்தியாவில் ராஜ்ய சபை என்றும் அழைக்கிறார்கள். அமெரிக்காவில் மேல்சபை செனட் என்றும் அழைக்கப்படுகிறது.

மேற்கண்ட நாடுகளில் இவை ஓரளவு சிறப்பாக இயங்கி வருகின்றன. ஏனெனில், இந்த நாடுகளில் மேல் சபைக்குத் தெரிவுசெய்யப்படுவோர் பெரும்பாலும் அனுபவ முதிர்ச்சி உடையவர்கள்; இன பேதங்களுக்கு அப்பால் சிந்தித்து செயற்படக்கூடியவர்கள்; அரசியல் பேதங்களுக்கு அப்பாற்பட்டவர்கள்; பெரும் கல்விமான்கள்; அறிஞர்கள்.

இந்தியாவில் இரண்டாவது சபையான ராஜ்ய சபை கட்சி ரீதியில் பிளவுபட்டு அதிகாரமற்ற மற்றொரு நாடாளுமன்றம் போன்று செயற்பட்டாலும் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளின் இரண்டாவது சபைகள் சிறப்பாகவே இயங்கி வருகின்றன.

இந்த இரண்டாவது சபை இலங்கைக்குப் பொருந்துமா? இனப்பிரச்சினைத் தீர்வில் பங்களிக்குமா? என்பதே இன்று எழும் கேள்வி.

பிரிட்டிஷார் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கியபோது அரசமைப்பின் ஓர் அங்கமாக செனட் சபையும் இருந்து வந்தது. கீழ் சபையான நாடாளுமன்றத்தில் அவசரமாக இயற்றப்படும் சட்டம் ஒன்றை ஆர அமர விவாதிப்பதற்கு செனட் சபை ஓர் முக்கிய அமைப்பாக அப்பொழுது கருதப்பட்டது.

இரண்டாவது சபை ஒன்று சிறுபான்மை சமூகங்களுக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும் என்று பிரிட்டிஷ் காரர்கள் அப்பொழுது நம்பினார்கள். ஆனால், காலக்கிரமத்தில் செனட்சபை இலங்கை அர்சியலில் இருந்து ஒழிக்கப்பட்டது. பயன் அற்ற, பெரும் செலவுதரும் அமைப்பு என்று அப்பொழுது காரணம் தெரிவிக்கப்பட்டது. அதே சமயம், நாடாளுமன்றத்தைப் போன்று செனட் சபையிலும் பெரும்பான்மையினர் சிங்களவர்களாக இருந்ததால் தமிழர்களுக்கு அதனால் பயன் ஏதுமில்லை என்றும் தமிழர் தரப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டு வந்தது.

ஆகவே, பயனற்றது என்று தமிழ் மக்களினால் கருதப்பட்ட மேல்சபை இனப்பிரச்சினைத் தீர்வுகளில் ஒன்றாக மீண்டும் இலங்கை அரசியலுக்குள் நுழையப் போகிறது.

மாகாணம் ஒன்றுக்கு 5 உறுப்பினர்கள் விகிதம் 45 உறுப்பினர்களையும், மாகாண சபை ஆளுநர்களையும் இரண்டாவது சபையான செனட் சபை கொண்டிருக்கும் என்று கூறப்படுகிறது.

அப்படியானால் நாடாளுமன்றத்தில் போன்று செனட் சபையிலும் சிங்களவர்களே பெரும்பான்மையாக இருக்கப்போகிறார்கள். கீழ் சபையான நாடாளுமன்றம் போன்று மேல் சபையிலும் இனவாதக் குரல்கள்தான் ஒலிக்கும். எனவே, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரமற்ற மாகாண சபைகளோ அல்லது செனட் சபைகளோ தீர்வாகாது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை இவை பூர்த்திசெய்யமாட்டா. தமிழ் மக்கள் அனைவரும் ஏற்கக்கூடிய ஒரு தீர்வு மூலமே இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

### இலங்கைத் தமிழர் விவகாரத்தில் கலைஞரின் சாதகமான நிலை

# மஹிந்தவின் இந்தியாவுக்கான விஜயத்தின்போது கருணாநிதி பட்டறிவைப் பயன்படுத்த வேண்டும்

### கூட்டமைப்பின் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்3

இலங்கையில் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் போதிய மனநிறைவு அளிக்கவில்லை.

- இவ்வாறு தமிழக முதல்வர் கருணாநிதி கூறியிருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கான பயணம் இடம்பெறும் நேரத்தில் கலைஞர் கருணாநிதி தனது முழுமையான பட்டறிவைப் பயன்படுத்தவேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு:-

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசின் நடவடிக்கைகளில் மனநிறைவு இல்லை என்ற அடிப்படையில் தமிழக முதல்வரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான கலைஞர் கருணாநிதி தலைமையில் கூடிய தி.மு.க அதி உயர் பீடம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

யுத்தத்துக்குப் பின்னரான ஒரு வருடப் பகுதியில் தமிழ் மக்களை சரியான முறையில் மீளக் குடியேற்ற, அவர்களுக்கான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக்கொடுக்க இலங்கை அரசு தவறிவிட்டது என்பதையும், இந்திய மத்திய அரசு இது தொடர்பில் எடுத்த நடவடிக்கைகள் போதாது என்பதையும், இந்தியாவால் கொடுக்கப்பட்ட உதவிகளும் அவர்களை சரியான முறையில் சென்றடையவில்லை என்பதையும் தமது தீர்மானத்தில் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள். உண்மை நிலை அது மாத்திரமல்ல, அதிலும் விடக் கொடியது என்பதை வன்னியின் மீள் குடியேற்றங்களைச் சென்று பார்வையிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அறியக்கூடியதாக உள்ளது.

இருப்பினும், இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் செய்யும் சமயத்தில் தமிழ் மக்கள் படும் வேதனைகளை புதுடில்லியின் கவனத்துக்கு கலைஞர் கொண்டு வந்துள்ளமையை வரவேற்பதுடன், அவருக்கு எமது நன்றி அறிதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வடக்கு - கிழக்கு இன்னும் இராணுவ ஆக்கிரமிப்பில்**

இன்று விடுதலைப்புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டனர், யுத்தம் முடிவடைந்துவிட்டது, பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று இலங்கை அரசு கூறுகின்றது.

ஆனால் வடக்கு - கிழக்கு இன்னும் சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பில்தான் உள்ளது. இராணுவத்துக்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் தமிழ் பிரதேசங்களில் சுவீகரிக்கப்படுகின்றன.

அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியேற முடியவில்லை. யுத்தம் முடிவடைந்து ஒரு வருடமாகியும் சாதாரண சூழல் இன்னும் தோற்றுவிக்கப்படவில்லை.

இதேபோன்று இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்திலும் எந்த முன்னேற்றமும் இல்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களும் பிரிக்கப்பட்டுவிட்டன.

அதிகாரங்களைத் தமிழ் மக்களுடன் பகிர்ந்து கொள்வதில் அரசு எவ்வித நாட்டமும் இன்றிச் செயற்பட்டு வருகின்றது.

யுத்தம் முடிவடைந்துவிட்டாலும், இனப்பிரச்சினை என்பது இன்னும் கொழுந்து விட்டு எரியும் நெருப்பாகவே இருக்கின்றது.

இந்த நிலையில், தமிழ் மக்கள் கௌரவத்துடனும், சுதந்திரத்துடனும், வாழக்கூடிய வகையில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளவும், தமது மண்ணைப் பாதுகாத்து, மொழியைப் பாதுகாத்து தமிழர் தலைநிமிர்ந்து வாழும் நிலையை உருவாக்கவும் கலைஞர் தனது முழுமையான பட்டறிவைப் பயன்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-சி)

### நிவாரணப் பொருள்களுடன் சென்ற

## கப்பல்கள் மீது இஸ்ரேல் தாக்கு; இலங்கை அரசு கடும் கண்டனம்

கொழும்பு,ஜூன்3

காஸாவை நோக்கிச் சென்ற உதவி நிவாரணக் கப்பல்களின் மீது இஸ்ரேலியப் படையினர் தாக்குதலை நடத்தியமைக்கு இலங்கை அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சம்பவத்தின் போது உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கும் இலங்கை அரசு தனது அனுதாபத்தை வெளியிட்டுள்ளது.

காஸாவுக்கு உதவிப் பொருள்களை ஏற்றிச்சென்ற துருக்கி நாட்டு உதவிக் கப்பல்கள் மீது கடந்த திங்கட்கிழமை இஸ்ரேலிய கமாண்டோப் படையினர் தாக்குதலை நடத்தியமையால் 15 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

பாலஸ்தீனத்தில் உள்ள காஸா பகுதிக்கு துருக்கியைச் சேர்ந்த 6 கப்பல்களில் உதவிப் பொருள்கள் ஏற்றிச் செல்லப்பட்டன. அந்தக் கப்பல்களில் சுமார் 600பேர் வரையில் பயணித்துள்ளனர். இந்நிலையிலேயே இஸ்ரேலின் கப்பற்படை கமாண்டோப் பிரிவினர் அக்கப்பல்கள் மீது அதிரடித் தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் முழு வீச்சில்

யாழ்ப்பாணம், ஜூன் 3

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கெனத் தென்பகுதியில் இருந்து மேலதிக தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டுள்ளனர்.

தற்பொழுது கேரதீவில் இருந்தும், சங்குப்பிட்டியில் இருந்தும் வீதி அகலிப்பு மற்றும் வீதித்திருத்தப் பணிகள் ஆரம்பமாகி முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கான சகல கட்டட உபகரணங்கள் மற்றும் பொருள்களும் அங்கு வந்து சேர்ந்துள்ளன. மேலதிக தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தி விரைவாக - எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் - நிர்மாணப் பணிகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கேரதீவு - சங்குப்பிட்டி ஊடாகப் போக்குவரத்து எதிர்வரும் நவம்பரில் ஆரபமாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(50-224)

### நாளை

| | |
|---|---|
| வைகாசி 21 | 04.06.2010 வெள்ளிக்கிழமை |
| திதி | : ஸப்தமி பி.ப. 1.53 |
| நட்சத்திரம் | : சதயம் பி.இ. 2.43 வரை |
| சுபநேரம் | : 05.52 - 07.22 |
| ராகுகாலம் | : 10.22 - 11.52 |

## மீள்குடியேறியோருக்கு வாழ்வாதார உதவி

கோப்பாய்,ஜூன் 3

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு வாழ்வாதார உதவிகளை வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுள்ளது.

'மனிதநேய கூட்டமைப்பு' அமைப்பினால் அச்செழு, ஊரெழு, புத்தூர் கிழக்கு பகுதிகளிலும் -

சேவாலங்கா அமைப்பினால் கோப்பாய் மத்தி பகுதியிலும் சர்வோதய அமைப்பினால் உரும்பிராய் தெற்கு, அச்சுவேலி மேற்கிலும் - உதவிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (1-72)

## மிருசுவில் வடக்குப் பொதுச் சந்தை நேற்றுமுதல் மக்கள் பாவனைக்கு

சாவகச்சேரி,ஜூன்3

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் மிருசுவில் உப பணிமனை எல்லைப்பரப்பில் உள்ள (மிருசுவில் வடக்கில்) பொதுச்சந்தை நேற்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பொதுமக்கள் பாவனைக்காக சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு க.கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மிருசுவில் வடக்குப்பகுதி கிராம அலுவலர் வி. நாகதேவன், மிருசுவில் வடக்கு அ.த.க. பாடசாலை அதிபர் ரி.சோதிலிங்கம், நெல்லிக்கிணற்றடி கந்தசுவாமி தேவஸ்தான பிரதமகுரு வி.தில்லையம்பலம், சாவகச்சேரி பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் என். ஜெயபாலசுந்தரம் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பொதுச்சந்தை வியாபாரத்தை, வெற்றிலையைச் சம்பிரதாயபூர்வமாகப் பெற்று சாவகச்சேரி பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ந. ஜெயபாலசுந்தரம் தொடக்கிவைத்தார்.

மிருசுவில் வடக்கு சந்தை நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக நீண்டகாலமாக இயங்கவில்லை. இதனால் பொதுச்சந்தையில் இருந்த கட்டடங்கள் சேதமாகிக் காணப்பட்டன. தற்பொழுது மிருசுவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் ஒன்று சேர்ந்து சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதியுடன் திருத்தம் செய்து மீள ஆரம்பித்துள்ளனர்.

இதனால் இந்தப் பகுதியில் பொதுமக்கள் இந்தப் பொதுச்சந்தையில் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதுடன் - நீண்ட தொலைவில் உள்ள கொடிகாமம் சந்தைக்குச் செல்லவேண்டியு நிலை ஓரளவுக்குத் தவிர்க்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. பொதுச்சந்தையில் மீன், தேங்காய், மரக்கறி என்பன விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. (50-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
ஸ்ரீசண்முகன் ஸ்ரீ விமலகாந்தன் அவர்களின்
அன்புத் தந்தை

**தம்பிப்பிள்ளை ஸ்ரீ சண்முகன்**

*29.05.2010* அன்று இறைபதம் எய்தியமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் சி.டிகுகுமார்
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் பாலு சின்னத்தம்பி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி/568077)

யா/ ஊரெழு கணேச வித்தியாசாலை. ஆசிரியர் கழகம்.

## மரண அறிவித்தல்கள்



### *பாலு சின்னத்தம்பி*

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலு சின்னத்தம்பி நேற்று (02.06.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், விமலாஜினி, நகுலன் (நகுலன் ஸ்ரோர்ஸ்), கர்ணன், குகன், சூரியகுமார், டிகுகுமார் (ஆசிரியர் - ஊரெழு கணேசா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (சி/568076)

தகவல்:
குடும்பத்தினர்.

### *இராசலிங்கம் சின்னத்துரை*



32, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியா, திருச்சி, கே.கே. நகரை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் சின்னத்துரை நேற்று (02.06.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(99054)

### திருமதி லூர்து மரியலுவிசா மேரியோசை



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லூர்த்து மரியலுவிசா மேரியோசை 01.06.2010 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான பாவிலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் செபஸ்ரியன் - றோசமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் மேரியோசையின் அன்பு மனைவியும் மரியநாயகம், பேதுறுப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அம்புரோஸ் ஆகியோரின் சகோதரியும் அனற்ஜோதிமலர், யூலியற் (எழுதுநர், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி), நெல்சன் (ஆசிரியர், யா/ மானி. மெமோறியல் ஆங். பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயராசா (ஏலிம் சிறுவர் இல்லப் பணியாளர்), குணசீலன், சிவாசினி ஆகியோரின் அன்பு மாமியாரும் யேசன், ஜதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.06.2010) வியாழக்கிழமை மானிப்பாய் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு பி.ப. ஒரு மணியளவில் நாரந்தனை புனித பேதுருவானவர் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மெமோறியல் லேன்,*
*மானிப்பாய் வடக்கு.* (99055)

தகவல்:
குடும்பத்தினர்.

## வாழைச் சேனையில் அமுக்கவெடிகள் மீட்பு

கொழும்பு, ஜூன், 03

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச் சேனைப் பிரதேசத்தில் இருந்து 17 அமுக்க வெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் பொலிஸார் இவ் அமுக்கவெடிகளை கண்டு பிடித்துள்ளார்கள்.

இந்த அமுக்கவெடிகள் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் புலி முக்கியஸ்தர் ஒருவரிடமிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இவை மீட்கப்பட்டிருக்கின்றன என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஒ-சி)

## மேல் மாகாண சபையின் 22ஆவது ஆண்டு பூர்த்தி

கொழும்பு,ஜூன் 03

மேல்மாகாண சபையின் 22ஆவது ஆண்டு பூர்த்தி நேற்றுக் கொண்டாடப்பட்டது.

கொழும்பு விஜயராம மாவத்தையிலுள்ள சௌசிறிபாயவில் இந்நிகழ்வு இடம் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் மேல்மாகாண சபையின் 22ஆவது வருடகால பதிவுகள் என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஸ மற்றும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டீ.யூ.குணசேகர ஆகியோர் பிரதம அதிகளாக கலந்துகொண்டுள்ளனர். (ஒ-சி)

## மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன்3

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இவ்வருடம் (2010) மாணவ தலைவர்கள், உதவி மாணவ தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம், கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பி.சுப்பிரமணியம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சின்னங்களை சூட்டினர். (ஒ-207)

## மரண விசாரணை அதிகாரிகள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன்3

சாவகச்சேரி நீதிமன்ற நியாயாதிக்க பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கென இரு திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நீதி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிக்கு கைதடி, நாவற்குழி தெற்கைச் சேர்ந்த செல்வி சசிகலா நாகராசாவும், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிக்கு கொடிகாமம், கோயிலாமனையைச் சேர்ந்த செல்வி தவமலர் இராஜேந்திரமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் முன்னிலையில் சத்தியப் பிரமானம் செய்து பதவிகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (ஒ-207)

## தனங்களப்பு மக்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன்3

தென்மராட்சி பிரதேசத்தில் மீள் எழுச்சித் திட்ட மையக் கிராமங்களில் ஒன்றான தனங்களப்பு பகுதியில் பொதுமக்கள் பங்கேற்பிலான கிராமியக் கணிப்பீடும் தேவை இனங்காணலும் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 9 மணிக்கு தனக்களப்பு சுண்டிக்குளம் பிள்ளையார் கோயில் முன்றிலில் நடைபெறும்.

இந்நிகழ்வில் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொள்ளவிருப்பதால் அப்பகுதி மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இப் பிரிவு அதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

**டிப்பர் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள LB -xxxx தொடரிலக்கமுடைய ISUZU 2.25 Cube டிப்பர் உடன் விற்பனைக்குண்டு.

தொ.பே: 0779947442

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்

திருமதி அன்னலட்சுமி இராஜசிங்கம்

அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி சின்னத்துரை சிவகாமிப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/568084)

**நலன்புரி கழகம்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## விழி நீர் சொரியும் அருவிகள் நெஞ்சை விட்டு அகலா ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



**பஞ்சரத்தினம் ஜனார்த்தனன்**

தோற்றம்: *16★02★1977*

மறைவு: *27★05★2001*

திதி: ஷஷ்டி

ஓர் உதயத்தில் அஸ்தமனம் ஆனவனே
ஒவ்வோர் உதயத்திலும்
உன் ஞாபகங்கள் நினைவுகள்
எம் உயிர் உள்ளவரை
எம் நினைவுகள் உன்னோடுதான்.

ஐ.பஞ்சரத்தினம்,
3/3, பத்திரகாளி கோயிலடி,
யாழ்ப்பாணம். (99052)

உன்னைப் பிரிந்து தவிக்கும்:
அப்பா, அம்மா மற்றும் சகோதரிகள்,
மச்சான்மார், உறவினர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### *பொன்னுத்துரை சோமசுந்தரம்*



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சோமசுந்தரம் நேற்று (02.06.2010) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஆசைப்பிள்ளை தம்பதியிரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், சுந்தரேஸ்வரன், கமலாதேவி, அமரர் இரத்தினேஸ்வரன், வசந்தகுமாரி (ஜேர்மனி), ஞானேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வதனசோதி, அரியசீலன், இராமேஸ்வரன், சாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் சரஸ்வதி மற்றும் தையல்நாயகி, ஆனந்தகணேஸ், தட்சணாமூர்த்தி, சுப்பிரமணியம், அமரர் ராசேஸ்வரி, சறோஜாமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், இராசதுரை, ரேவதியம்மா மற்றும் ராசேஸ்வரி, சடாசிவம், யோகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சுப்பிரமணியம் மற்றும் பத்மாவதி, செல்லத்துரை, தவராசா ஆகியோரின் சகலனும், அனுசியா, காயத்திரி, ஞானுஜா (கனடா), சஜினா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (99053)

தகவல்:
குடும்பத்தினர்.

### *சின்னத்துரை நித்தியானந்தன்*

(முன்னாள் விவசாயப் போதனாசிரியர்)



கொக்குவில் கிழக்கு, றெயில் றோட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நித்தியானந்தன் நேற்று (02.06.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கண்மணி அம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், கந்தசாமி - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், சீதாலட்சுமியின் அன்புக் கணவரும், கோமதியின் அன்புத் தந்தையும், சிவராசாவின் மாமனாரும், சிகோஜினியின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சுகுணாவதி மற்றும் குகதாசன் (கனடா), பாலகுருநாதன் (கனடா), மாதவகுமாரன், குலத்திலகர் (கனடா), சந்திரவதனா குலரஞ்சிதசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீபாலன், மனோரஞ்சிதம், சத்தியதேவி, மஞ்சுளாதேவி, இராஜேஸ்வரி, குலரஞ்சிதசிங்கம், பகவத்சிங்கம், கிரிஜா, குணசிங்கம், இராசபரணம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் (இருபாலை றோட், கோண்டாவில் கிழக்கு) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இருபாலை றோட்,*
*கோண்டாவில் கிழக்கு.* (99043)

தகவல் : சி. மாதவகுமாரன்
(சகோதரர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை குடாநாட்டு மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்

## மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அமைச்சர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

குடாநாட்டில் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை மத்திய சுற்றாடல் அதிகார சபை நடத்தவேண்டும்.

சுற்றுச் சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர் பிரியதர்ஷனயாப்பா இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் அனுர பிரியதர்ஷனயாப்பா யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே. கணேஷ், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், புவிச்சரிதவியல், சுரங்கவியல் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துடிரயாடியபோதே அவர் மேற்கண்டவாறு பணிப்புரைவிடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

குடாநாட்டில் சட்டவிரோத மணல் அகழ்வு, சுண்ணாம்புக்கல் அகழ்வு எனப் பல்வேறு துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுமக்களுக்கு இயற்கை வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை வடமாகாண சுற்றாடல் அதிகார சபை நடத்த வேண்டும்.

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் எனப்பொதுமக்கள் கூடுகின்ற பொது இடங்களில் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும்.

இத்தகைய நிகழ்வுகள் நடத்தப்படுவதன் மூலம் பொதுமக்கள் மத்தியில் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படும்- என்றார். (50-9)

### ஒழுவில் வீதியை புனரமைக்கக் கோரிக்கை

ஊர்காவற்றுறை, ஜூன் 3

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்திற்கும், கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்திற்கும் இடையிலான ஒழுவில் வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதி தற்போது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயணம் செய்யும் போது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மழைகாலம் வருவதற்கு முன் இதனைப் புனரமைத்து மாணவர்கள், சிறுவர்கள் அச்சமின்றி பயணங்களை மேற்கொள்ள உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-325)

# பண்டத்தரிப்பில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் புதிய தொலைத் தொடர்புக் கோபுரம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் சி.டி.எம்.ஏ. தொலைபேசி வலையமைப்பை விஸ்தரிக்கும் வகையில் பண்டத்தரிப்பு பகுதியில் சுமார் 60 மீற்றர் உயரமான புதிய தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மாதகல், இளவாலை, சில்லாலை, வடலியடைப்பு, விளான், பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில் சி.டி.எம்.ஏ. தொலைபேசி வலையமைப்பை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காரைநகர் பிரதேசத்துக்கான 'சி.டி.எம்.ஏ. தொலைபேசி வலையமைப்பை விஸ்தரிக்கும் முகமாக ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் இம்மாதமளவில் சுமார் 70 மீற்றர் உயரமான தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.அலுவலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (50 - 16)

# கடற்றொழில் திணைக்களத்துக்கு பண்ணையில் புதிய கட்டடம்



யாழ்ப்பாணம்,ஜூன்3

யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்கெனப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டக் காரியாலயக் கட்டடம் இம்மாதம் நடுப்பகுதியில் திறந்து வைக்கப் படவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்கென பண்ணைப் பகுதியில் ஸ்ரீலங்கா ரெலி கொம் நிறுவனத்துக்கு அருகில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வந்தது.

இக்கட்டட நிர்மாணப் பணிகள் யாவும் பூர்த்தியாகியுள்ள நிலையில் இம்மாதம் 14 ஆம் திகதியளவில் இக்கட்டடம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (50 - 16)

# அறநெறிப் பாடசாலை மாணவருக்கான இந்து சமய போது அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 3

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மாணவர்களுக்கான சுட்டிலக்கம், பரீட்சை மண்டபம், நேரசூசி தொடர்பான விவரங்கள் அந்தந்த அறநெறிப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் விகிதாசார அடிப்படையிலேயே எதிர்வரும் காலத்தில் அவர்களின் அறநெறிப் பாடசாலைகளுக்கான உதவிகள் வழங்கப்படும் என்பதால் விண்ணப்பித்த அனைத்து மாணவர்களையும் பரீட்சைக்குத் தோற்றுமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பரீட்சைக்கான நேர அட்டவணை வருமாறு;

தரம் 2,3,4 ஆம் வகுப்புகளுக்கு காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையும், தரம் 5,6,7 ஆம் வகுப்புக்களுக்கு முற்பகல் 10.30 மணி தொடக்கம் 11.30 மணி வரையும், தரம் 8,9,10,11 ஆம் வகுப்புகளுக்கு நண்பகல் 12 மணி தொடக்கம் ஒரு மணி வரையும் பரீட்சை நடைபெறவுள்ளது. (50-201)




# சொந்த மண்ணை விட்டுப் புலம் பெயர்ந்து சென்றாலும் பண்பாட்டை பாதுகாப்பதில் நம்மவர்கள் தோற்கவில்லை

## இசை அரங்க நிகழ்வில் ஆறு.திருமுருகன் பாராட்டு

நல்லூர், ஜூன் 3

சொந்த மண்ணைவிட்டு புலம் பெயர்ந்து சென்றாலும் தமது பண்பாட்டைப் பாதுகாப்பதில் நம்மவர்கள் தோற்கவில்லை என ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

டென்மார்க்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கரவெட்டியைச் சேர்ந்த செல்வி அபர்ணா குகதாசனின் இசை அரங்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்த மண்ணின் சிறந்த இசைக் கலைஞர்கள் பலர் நாட்டுச் சூழல் காரணமாக நாட்டைவிட்டு இடம் பெயர்ந்துள்ள நிலையில் குகதாசன் தம்பதியினர் தமது சிறுவயதில் இங்கிருந்து அனுபவித்த இந்த நாட்டின் கலைகள் குறித்து சிந்தித்ததன் பயன்தான் அபர்ணா மிகவும் சிறிய வயதில் இசைத் துறையில் சிறந்தவர்கள் எனக் கூறப்படும் இந்தியக் கலைஞர்களிடம் கற்று தனது சந்தேகங்களைத் தெளிந்து இசைத்துறையில் கலைமாணி, முதுமாணி பட்டங்களைப் பெற்று உன்னதமான இசை நிகழ்ச்சியொன்றை எம்முன் நிகழ்த்தியுள்ளார். தனது சொந்த மண்ணில் தனது பிள்ளையும் பாட வேண்டும் என்ற ஆர்வம் பெற்றோர்களிடம் காணப்பட்டது. பல்வேறு வித்துவான்கள் பாடிய இந்த அரங்கில் பாடவேண்டும் என்ற அவர்களது குறிக்கோள் இன்று நிறைவேறியுள்ளது. மேலை நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் தங்களது பிள்ளைகள் கல்வியுடன் மேலதிகமாக ஏதோ ஒரு துறையில் மேல்நிலை எய்த வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதற்காக இசை, நடனத் துறைகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துகின்றார்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள எமது பிள்ளைகள் அந்த நாடுகளின் வாழ்க்கை முறைக்குள் தம்மை உட்படுத்திக் கொள்வதால் எமது சந்ததியின் எதிர்காலம் எமது பண்பாடு, கலைகள் அழிந்த ஒன்றாக மாறிவிடும் என்ற அச்சம் எம்மவர்களுக்கு உண்டு. ஆனால் அங்கேயுள்ள எமது அடுத்த தலைமுறையினர் எமது கலைகளையும், பண்பாடுகளையும் நேசிப்பவர்களாகவே உள்ளார்கள் என்பதன் அடையாளம் செல்வி அபர்ணா- என்றார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா உரை நிகழ்த்தும்போது தெரிவித்தவை வருமாறு;

வெளிநாட்டில் உள்ள எமது பிள்ளைகள் இசைத் துறையில் பெரிதாக நாட்டம் கொள்வதில்லை. நடனக்கலையிலேயே அதிக அக்கறை காட்டுகிறார்கள். சிறுவயதிலேயே இசையுடன் இணைந்து அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள அபர்ணா இசை, பண்பாட்டு ஊற்றுக் கண்களின் பிறப்பிடமான தமிழ் நாட்டின் அண்ணாமலை, சென்னைப் பல்கலைக்கழகங்களில் இசைத்துறை ஜாம்பவான்களாக விளங்கிய போதனாசிரியர்களிடம் பயின்று இன்று தனது அரங்கேற்றத்தை எம்மத்தியில் நிகழ்த்தித்தான் ஒரு சிறந்த இசைக்கலைஞர் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். அதன் மூலம் அந்தப் பேராசிரியர்களின் ஆளுமையை அவர் பெற்றிருக்கிறார்- என்றார்.

யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் ந.வி.மு.நவரத்தினம், முன்னாள் இசைத்துறைக் கல்விப் பணிப்பாளர் எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினார்கள். (50-111)



'பாசிக்' நிறுவனத்தால் மணல்காடு இடைத்தங்கல் முகாமில் வாழ்ந்துவரும் இனங்காணப்பட்ட 155 மீனவர்களுக்கு வலை உபகரணங்கள் அண்மையில் குடத்தனை தென்னிந்திய திருச்சபை வளாகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

நிகழ்வில் கலந்துகொண்ட பயனாளிகளை முதலாவது படத்திலும், கடற்றொழில் நீரியல்வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் பயனாளி ஒருவருக்கு வலைத் தொகுதியை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள் : கர்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி கூறுகின்றோம்

கச்சாய் தெற்கு, கொடிகாமம் என்னும் முகவரியைச் சேர்ந்த சிவகுமார் தமிழ்ரேகா ஆகிய நான் சாவகச்சேரியிலிருந்து அரசடியில் இறங்கும்போது என்னுடைய தங்க ஆபரணம் ஒன்று தவறிவிட்டது. இந்த தங்க ஆபரணத்தை தென்மராட்சி சிற்றூர்திச் சங்கத்தைச் சேர்ந்த 30-4842 என்னும் இலக்கத்தையுடைய சிற்றூர்தியின் உரிமையாளர் சி.பாஸ்கரன் அவர்கள் கண்டெடுத்து தென்மராட்சி சிற்றூர்திச் சங்கத்தினூடாக எனக்கு மீளவும் கிடைப்பதற்கு உதவியாக இருந்த சிற்றூர்தி உரிமையாளருக்கும், சங்கத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கச்சாய் தெற்கு,கொடிகாமம். குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1195 நீலம்

01-06-2010

இடபம்

14 20 27 32



ஜக்பொட் பரிசு ரூபா. 5,622,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 204,517 | 20/- | 4,090,340/- |
| 2 இலக்கங்கள் | 18,840 | 40/- | 753,600/- |
| 1 இல. + லக்கினம் | 18,605 | 60/- | 1,116,300/- |
| 2 இல. + லக்கினம் | 1,698 | 200/- | 339,600/- |
| 3 இலக்கங்கள் | 486 | 1000/- | 486,000/- |
| 3 இல. + லக்கினம் | 55 | 10,000/- | 550,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,622,200/- | - |
| மொத்தம் | | | 7,935,840/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 244,209 | | 8,435,840/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,079,075/-

2010 ஜூன் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100.000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 401297490-7-38 |
| அனுராதபுரம் | 401302002-2-00 |
| மாத்தறை | 401288210-2-06 |
| கண்டி | 401298587-1-34 |
| கொழும்பு | 401305782-3-21 |

## கசிப்பு உற்பத்தி செய்த நபருக்கு ரூ.75 ஆயிரம் அபராதமும், சிறையும்

கசிப்பு உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் கோடா, உபகரணங்கள் வைத்திருந்த குற்றத்துக்காக கற்பிரபுரம் வாசிக்கு 75ஆயிரம் ரூபா அபராதமும் மூன்று மாத சிறைத்தண்டனையும் சாவகச்சேரி நீதி மன்றம் விதித்தது.

கோடா உபகரணங்களை வைத்திருந்தமைக்காக சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் கடந்த திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டார்.

இவர் குற்றத்தை ஒப்புக்கொண்ட அந்நபருக்கு கோடா வைத்திருந்தமைக்காக 50ஆயிரம் ரூபாவும், உபகரணங்களை வைத்திருந்தமைக்காக 25 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதுடன் மூன்று மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகையைச் செலுத்தத்தவறின் ஒரு மாத கால சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காக மீசாலை அம்மன் கோயிலடி வாசிக்கு 40ஆயிரம் ரூபா அபராதமும், செலுத்தத்தவறின் மூன்று மாதம் சிறைத் தண்டனையும் விதிக்கப் பட்டது. (50-207)

## காலம் பொன்னானது

தெய்வீகம் உன்னுள்ளே இருக்கிறது. நீ செய்யவேண்டியது அதை வெளிப்படுத்துவது மட்டுமே. இல்லாத ஒன்றை வெளியில் கொண்டுவர முடியாது. இருக்கின்ற ஒன்று இல்லாமல் போக முடியாது. எல்லாவிடயங்களும் இங்கேயே இப்பொழுதே இருக்கின்றன. ஆகவே எந்தவித தேடுதலுக்கும் எந்தவித சாதனைகளுக்கும் தேவை இருக்கவில்லை. நீ செய்கின்ற எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணமாகச் செய். என்னுடைய வேலை கடவுளுடைய வேலை என்று வேறுபடுத்தாதே. ஒரு வித்தியாசத்தை உண்டாக்குகின்ற பொழுது வேறுபாட்டின் காரணமாக அங்கே வெறுப்புக்கு இடம் கொடுக்கிறாய். வெறுப்பு வந்து விட்டால் அங்கே தெய்வீகம், தூய்மை, ஒருமை என்பவற்றுக்கு இடம் இல்லை. கடவுளை உன் இதயத்தில் அரசோச்ச வைப்பாயானால் அங்கே வேறு தப்பான எதற்குமே இடம் இருக்காது. ஆனால் இன்றைய ஆத்மீகக் குறிக்கோள் உள்ளவன் தனது இதயத்தை ஒரு சங்கீதக் கதிரையாகக் கருதுகிறான். அவர்கள் ஒரு சுவாமியில் இருந்து இன்னொரு சுவாமிக்கும் போகிறார்கள். ஒரு சாதனையிலிருந்து இன்னொரு சாதனைக்கு மாறுகிறார்கள். இத்தகைய கேளிக்கை விளையாட்டுக்களால் என்ன பயன். எல்லாம் (வாழ்க்கையையும், நேரத்தையும்) வீணாக்குபவைதான். ஒரு இதயம் ஒரு எண்ணம், ஒரு கடவுள், ஒரு இலக்கு, அல்லா, இயேசு, புத்தர் என்று எதை உச்சரித்தாலும் எல்லாம் ஒன்றையே குறிப்பன.

கடவுள் எல்லா நேரங்களிலும் உன்னில் இருந்தாலும், உன்னோடு இருந்தாலும், உன்னைச் சுற்றிவர இருந்தாலும் நீ அவரை வெளியிலே தேடி உன்னுடைய ஏராளமான நேரத்தை வீணாக்குகிறாய். நேரத்தை வீணாக்காதே. ஏனெனில் நேரம் என்பது கடவுளாகும். கடவுளின் சந்நிதியில் அவரின் துணையோடு இருக்கும் பொழுது ஏன் கவலைகளுக்கு இடம் கொடுக்கிறாய்.



சாயி சிந்தனை


# சகஜ யோகா

வழங்கும்



ஸ்ரீ மாதாஜி நிர்மலா தேவி
சகஜ யோகாவைத் தோற்றுவித்தவர்

"அகத்துள் உறைந்திருக்கும் பேருண்மையை, மன அமைதியை தேடி ஓர் தியானப் பயிற்சி"

நமக்குள் ஆழ்ந்திருக்கும் குண்டலினி எனப்படும் இறைசக்தியினை விழிப்படையச் செய்வதன் மூலம் சகஜ யோகா ஒரு தனித்துவமான, எளிய தியான முறையினை வழங்குகிறது. இச் சக்தியானது நம் சக்கரங்கள் எனப்படும் சக்தி மையங்களை சமநிலைப்படுத்தி, அதற்கு சக்தியூட்டுகிறது. சிறுவர்கள் முதல் பெரியவர் அனைவருக்கும் பயனுடையது.



அமைதி, அன்பு, ஆனந்தம், உண்மை.

அனுமதி இலவசம்

இடம் :
சைவபரிபாலன சபை
66, கல்லூரி வீதி, நீராவியடி.
யாழ்ப்பாணம் தொ.பே: 021 222 7678

காலம் : ஜூன் 4
வெள்ளிக்கிழமை மாலை
4மணி தொடக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவாலைப் பொலிஸ் நிலையத்தினால் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரா மங்கள விளக்கேற்றி நடமாடும் சேவையை ஆரம்பித்து வைப்பதை முதல் படத்திலும், பொதுமகன் ஒருவரின் முறைப்பாட்டைப் பொலிஸார் பதிவு செய்வதை இரண்டாவது படத்திலும், காங்கேசன்துறைப் பொலிஸ் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி ஜீவக்குமார் ஜெயவர்த்தன குழந்தை ஒன்றுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வதை மூன்றாவது படத்திலும், இளவாலைப் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி முனசிங்க உரையாற்றுவதை இறுதிப்படத்திலும் காணலாம்.
(படங்கள்: சரவணன்)

# குடாநாட்டில் மீண்டும் டெங்கு நோய் அபாயம்
# தினமும் 10 இற்கு மேற்பட்டோர் ஆஸ்பத்திரியில் அனுமதி
## கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதாரத் திணைக்களம்

யாழ்ப்பாணம்,ஜூன் 3
குடாநாட்டில் டெங்கு நோய்த்தாக்கம் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் தீவிரமாக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் நாளாந்தம் 10 இற்கும் மேற்பட்டோர் அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் டெங்கு நோய்த்தாக்கத்துக்குள்ளாகி 2010 ஆம் ஆண்டு இதுவரை 17 பேர் மரணமானார்கள். கடந்த 2009 ஆம் ஆண்டு 6 பேர் மரணமானார்கள்.

இதனைக் கருத்திற் கொண்டு டெங்கு நோயைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களம் துரித நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது. இதன் பிரகாரம் கடந்த இரு மாதங்களாக டெங்கு நோய்த்தாக்கம் சடுதியாகக் குறைந்து காணப்பட்டது. இருப்பினும் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் குடாநாட்டில் பரவலாகப் பெய்த மழை காரணமாக டெங்கு நோயின் தாக்கம் மீண்டும் தலை தூக்கியுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

இதனையடுத்து டெங்கு நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (50-9-224-207)

# சிறுபோக வெங்காயச் செய்கையில் வலி. கிழக்கு விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம்,ஜூன் 3
வலி.கிழக்கு பிரதேசத்தில் சிறுபோக வெங்காயச் செய்கையை மேற்கொள்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

தற்போது தோட்ட நிலங்களை உழுது சீர்செய்வதிலும் பசளை இடும் பணியிலும் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சில தோட்டங்களில் வெங்காயம் நடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குடாநாட்டில் வெங்காயத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. திருநெல்வேலி சந்தையில் வெங்காயம் ஒரு கிலோ 100 ரூபா முதல் 110 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. (50-224)

# 7 மீனவர் கிராமங்களுக்கு வெளிச்ச விளக்குக் கம்பங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்3
''கமநெகும'' திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் ஏழு கடற்றொழிலாளர் கிராமங்களுக்கு வெளிச்ச விளக்குக் கம்பங்கள் அமைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் தொழில் திணைக்களப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி ''கமநெகம'' திட்டத்தின் கீழ் எழுவைதீவு, அனலைதீவு, கற்கோவளம், பொலிகண்டி கிழக்கு, சுழிபுரம், புங்குடுதீவு, காரைநகர், சாம்பலோடை ஆகிய கடற்றொழிலாளர் கிராமங்களுக்கே மேற்படி வெளிச்ச விளக்குக் கம்பங்கள் அமைக்கப்படவுள்ளன.

இப்பணிகளுக்காக அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், பணிகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (50 - 16)

# சுன்னாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி பகுதிகளில் 'பீப்பிள் லீசிங்' கம்பனியின் உப அலுவலகங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன் 3
மக்கள் வங்கியின் சகோதர நிறுவனமான 'பீப்பிள் லீசிங்' கம்பனியின் முதலாவது வருட பூர்த்தியையொட்டி கம்பனியின் யாழ். கிளை சுன்னாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் உப அலுவலகங்களை நேற்று முன்தினம் ஆரம்பித்துவைத்தது.

அந்தந்த மக்கள் வங்கிக்கிளைகளில் கம்பனியின் பிரதான நிறைவேற்று அலுவலர் டி.பி.குமாரகேவினால் இவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் கம்பனியின் பிரதம முகாமையாளர் தமிழ் மலவித்தம்மில, மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் ரி.சே.ஆனந்தராசா உட்பட பலர் கலந்துகொண்டனர். கம்பனியின் 'லீசிங்' மூலம் வாகனங்கள் கொள்வனவு செய்தவர்களுக்கு வாகனங்கள் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (50-6-207)

# புதிய கிராம அலுவலர்களாக மேலும் நால்வருக்கு நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன் 3
யாழ்.மாவட்டத்தில் புதிய நியமனங்களைப் பெறவுள்ள கிராம அலுவலர்களுக்கான பயிற்சி நெறிக்கு மேலும் நால்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி புதிய நியமனம் பெறவுள்ளவர்கள் உடனடியாக யாழ். மாவட்ட செயலகத்துக்குச் சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் கேட்டுள்ளார்.

புதிய நியமனம் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

யூ. காயத்திரி( சுதுமலை மத்தி, மானிப்பாய்), ரி. துஷ்யந்தன் (பழம் றோட், கந்தர்மடம்), ஏ.ரீ. சைலஜா (வசாவிளான் கிழக்கு- ஒட்டகப்புலம்), எஸ்.இரத்தினக் குமாரி( சங்கானை [illegible] பண்டத்தரிப்பு) (50-16)

# ஆன்மீகச் சொற்பொழிவு

வலி.வடக்கு, ஜூன் 3
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சொற்பொழிவு - 3 தொடர்பில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் 'நாகாக்க' என்னும் பொருளில் சைவப் புலவர் நித்திய தசிதரன் உரையாற்றவுள்ளார். (50-86)

# இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு, ஜூன் 3
கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் ருவென்ரி - 20 கிரிக்கெட்போட்டி ஆட்டத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. (50-86)




# வடமராட்சி வலயத்தின் 9 பாடசாலைகளில் விரைவில் கட்டட நிர்மாணப் பணிகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 3
வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட 9 பாடசாலைகளின் கட்டடப் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பணிகளை விரைவில் ஆரம்பித்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வலய கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை, ஞானாசாரியார் கல்லூரி, கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை, கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை, கம்பர்மலை அ.த.க. பாடசாலை,தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், சிதம்பராக் கல்லூரி,கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றிலேயே புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பணிகளுக்கென கட்டட ஒப்பந்தக்காரரிடம் இருந்து கேள்விகள் கோரப்பட்டுள்ளன. (50-224)

# முழுமையாகச் சேதமடைந்த நிலையில் ஊரதீவு அபிவிருத்திச் சங்கக் கட்டடம்

யாழ்ப்பாணம்,ஜூன் 3
புங்குடுதீவு ஊரதீவு கிராம அபிவிருத்தி சங்க கட்டடம் முழுமையாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றமையால் இயங்க முடியாத நிலையில் இருப்பதாக ஊரதீவு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ந.இராசதுரை கவலை தெரிவித்துள்ளார்.




இக்கட்டடமானது 1953 ஆம் ஆண்டு சோல்பரி பிரபு என்பவரினால் திறந்து வைக்கப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நினைவுக் கட்டடமாகும். இதனை புனரமைப்பு செய்து சோல்பரி பிரபு நினைவு மண்டபமாக அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களிடம் கோரிக்கைவிடப்பட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.ஏனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக கிராமத்தில் நூலக வசதி, மாலைநேரக் கற்றல் நடவடிக்கை, சிறுகைத்தொழில் பயிற்சிகளை மேற்கொள்ளமுடியாத துர்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது.

எனவே இக்கட்டடத்தினை புனரமைப்புச் செய்து கிராம மக்கள் சகல வழிகளிலும் வளர்ச்சி காண உதவுமாறு பாரம்பரிய கைத்தொழில் அபிவிருத்தி சிறு கைத்தொழில் அமைச்சரிடம் ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (50-188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

## Van West Clinic and Nursing Home

## வண்வெஸ்ட் கிளினிக் அன்ட் நேர்சிங் ஹோம்

இன்று (03.06.2010) வியாழக்கிழமை
இல.18, ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில்
பழம்பெரும் வைத்திய நிபுணர் டாக்டர் ரி.கெங்காதரன்
அவர்களின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்படவுள்ள
**வண்வெஸ்ட் கிளினிக் அன்ட் நேர்சிங் ஹோம்**
மக்களின் தேவைகளை திறம்பட நிறைவுசெய்து சிறப்புற
பணியாற்ற இறைவன் அருளினைவேண்டி வாழ்த்துகின்றோம்.

**நிர்வாகமும் ஊழியர்களும்:**

**வனிக்கா மெடிக்கல்ஸ்**
**வனிக்கா மெடிலைன்**
**(பிறைவேட்) லிமிட்டெட்**
203 (85), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**STUDY CANADA / UK**
**Schengen Countries**
**WORK VISA** Canada / Dubai — Many Categories available. Condition apply
AGENTS WANTED
**ROAM EDUCATION SERVICES**
11B 2/2, Beach Road, Mount Lavinia.
Phone : 272 5449 , 0777 48 36 63 - Ranjith
Bring Full CV , School Results + Work Experinca
Documents with you or send E-mail : inforoameducation.com
MMW

## பெருந்திருவிழா


நெடுந்தீவு, ஜூன் 03

நெடுந்தீவு, நடுக்குறிச்சி பெருக்கடி சித்திவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 19 திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் பிற்பகல் 4 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (க-111)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடி
விழிப்பு
28
★
02
★
1977



அநியாய
அழிப்பு
03
★
06
★
2007

### அமரர் சுப்பிரமணியம் சாந்தீபன் (உப தபாலதிபர்)

திதி:தேய்பிறைத் திருதியை

ஆசைத் திருமகனே எம் மனதில் அழியா ஒளி விளக்கே
முழு நிலவு போன்ற நீ எமைப்பிரிந்து சென்றதுவோ ஆண்டு மூன்று
உனை தம்பி என அழைக்க பிறந்தனரே அக்காமார் மூன்று
அவர் தம் துயர் நிறைந்த மனச்சுமையை தாங்கியதோ ஆண்டு மூன்று
சதிகாரர் வஞ்சனையால் வீணே பழி சுமந்ததுவும் ஆண்டு மூன்று
ஆண்டு மூன்று ஆனாலும் எம் துயரம் ஆறாது ஆறாது
உன் மனைவி படும் துயரம் ஒரு போதும் மாறாது மாறாது
உன் மழலைக் குழந்தைகளின் மனத்தாக்கம் என்றைக்கும் ஓயாது ஓயாது
மாமா என்றழைக்கும் மருமக்கள் ஏக்கமோ தீராது தீராது
நீறாகிப் போன எம் செல்வ மகனே -நீ
நிழலாகி நிற்கின்றாய் எம் மனத்திரையில் - ஆனால்
நிஜத்தில் நீ இறைவனிடம் கலந்து விட்டாய் - என்றும்
நீர் நிறைந்த விழிகளுடன் உன் ஆத்மா சாந்திபெற
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

மிருசுவில் வடக்கு, மிருசுவில். (99026)

## ஓராம் ஆண்டு நினைவலையில்

மலர்வு
15
06
1945



உதிர்வு
16
05
2009

### திருமதி பத்மநாதன் ஞானசக்தி (தையிட்டி)

*திதி:தேய்பிறைச் சப்தமி (03.06.2010)*

**முந்தித் தவம் இருந்து முந்நூறு நாள் சுமந்து பெற்றெடுத்த**
**எம் அன்னையை எப்பிறப்பில் காண்போம்!**

பகல் இரவாய் கண் விழித்தேன்
உன் விழிகள் கலங்கியது கண்டேன்
காலன் அவன் வருவான் என்றோ தெரியவில்லை
நிலைத்து விட்ட உன் அன்பால்
நினைவிழந்து வாடுகின்றேன்
தவிக்கின்றேன் தனிமரமாய்
நினைவிழக்க முடியாது -நாம்
நீந்துகின்றோம் கண்ணீரில்
முன்னவனை தினம் தினம் தொழுதாய் - அம்மா
முத்தான முத்துக்கள் மூன்றினைப் பெற்றெடுத்தாய்
முன் பெற்ற மகன் தனை பதின் நான்கில்
பறி கொடுத்தாய் - அம்மா
நடைப்பிணமாய் நீ துவண்டாய் - அம்மா
எங்கள் பாசமலர் நீ - அம்மா

பாசத்தின் பாதை இது என்றாய் -அம்மா
நீ பாதி வயதினில் நோயுற்றாய் -அம்மா
நாடு கடந்து சென்ற எம்மை நித்தம்
நித்தம் நினைத்தாய் -அம்மா
நினைப்பதற்கோ நேரமில்லை
காலன் அவன் கவர்ந்துவிட்டான் - அம்மா
பாவிகள் நாம் பரிதவித்து நிற்கின்றோம்
உன் அன்பை நாம் அறிவோம் - அம்மா
மறுபிறவி ஒன்று உண்டு என்றால் - அது
உண்மை எனில் நீ எங்கள் வாசலில்
வந்துதிப்பாய் -அம்மா.
நெய் விளக்கேற்றி தினம் தினம் வணங்குகின்றோம்
உன்பாதம் மலர் தூவி துதிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் இல்லத்தில் இன்று (03.06.2010) வியாழக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.

17 B, சோயா லேன்,
வீதி, வவுனியா.

(99028)

கணவர், பிள்ளைகள்,
லவக்குமரன், தனஞ்ஜெயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்வைத் துரிதப்படுத்த உதவுமாறு கிளிநொச்சிப் பகுதி மக்கள் கோரிக்கை

## ஸ்ரீதரன் எம்.பி.யிடம் நேரில் சந்தித்து மகஜர்

கிளிநொச்சி, ஜூன்3

கிளிநொச்சி மாவட்டத்தில் தருமபுரம்,



கண்ணகைபுரம், மயில்வாகனபுரம், புன்னைநீராவி, பிரமந்தனாறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமக்கான மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உரியவர்களை வலியுறுத்துமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஸ்ரீதரன் எம்.பி. குறித்த கிராம மக்களின் அழைப்பின் பெயரில் அவர்களைச் சந்தித்தபோதே அவரிடம் மக்களால் மேற்படி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எமது கிராமங்கள் ஒன்றிலும் முழுமையான மீள்குடியேற்றம் இடம் பெறவில்லை. மீள்குடியேற்றப்பட்டவர்களுக்கு தறப்பாள்கள் தவிர்ந்த எந்தவித வீட்டுத் தளபாடப் பொருள்களும் வழங்கப்படவில்லை. ஏனைய மீள்குடியேறிய மக்களுக்கு தகரம், மரந்தடிகள், சிமெந்து போன்ற பொருட்கள் வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் எமக்கு இவற்றில் எந்தப் பொருள்களும் வழங்கப்படவில்லை. சில மாதங்களுக்கு முன்னர் முழுமையாக இருந்த வீடுகளில் பெரும்பாலானவை தற்போது தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

பல மாதங்களுக்கு முன்னர் எமது மண்ணில் இருந்து இடம்பெயர்ந்த நாம் தற்போது எமது ஊர்களுக்குத் திரும்புகின்ற நிலையில் எமது தொழில் ரீதியான, முனைப்புக்களை மேற்கொள்ள உரியவர்களிடம் இருந்து தொழில் வாய்ப்புக்களையும் தொழில்களுக்கான மூலதனங்களையும், மூலப்பொருள்களையும் பெற்றுத்தர வேண்டும் போன்ற கோரிக்கைகளை அக் கிராமங்களின் மக்கள் முன்வைத்தனர்.

இதன் போது தருமபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளின் மனு கையளிக்கப்பட்டது. சங்கத்தின் தலைவர் செ.புஷ்பராசா மனுவினை நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளித்தார்.

அதன்பின்னர் மக்கள் பிரதிநிதிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினரும் முற்றாக அழிக்கப்பட்டுள்ள தருமபுரம் இலக்கம் ஒன்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் மக்களின் வாழ்விடங்கள், மீள் குடியேற்றத்துக்காக மக்கள் கொண்டு செல்லப்பட்டு இறக்கப்பட்டுள்ள தருமபுரம் மகா வித்தியாலயம் உட்பட்ட பல பகுதிகளுக்குச் சென்று மக்களிடம் நிலைப் பாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார். (50)

# கொக்குளாயிலிருந்து இடம் பெயர்ந்தவர்களை சொந்த இடம் திரும்புமாறு அறிவுறுத்து

கரைத்துறைப்பற்று,ஜூன்3

கொக்குளாயிலிருந்து 84 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து முள்ளியவளையில் வாழ்ந்து வந்தவர்களை அங்கு மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

கொக்குளாயில் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமருமாறும் முள்ளியவளையில் மீளக்குடியமர அனுமதிக்க முடியாது என்றும் அதிகாரிகள் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

தாம் நீண்டகாலம் முள்ளியவளையில் வீடுகள் அமைத்தும் பயன்தருமரங்களை நட்டும் வாழ்ந்து வந்ததாகவும் அவற்றையெல்லாம் இழந்து கொக்குளாய்க்குச் செல்ல முடியாது என்று அந்த மக்கள் கூறுகின்றனர்.

கொக்குளாயில் தமது வீடுகள் எல்லாம் யுத்தத்தின் அழிவடைந்து விட்டன என்றும் மீள வீடுகள் அமைத்த பின்பே மீளக்குடியமர முடியும் என்றும் அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

முள்ளியவளையில் இருந்து செல்வதானால் தமக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று அந்த மக்கள் கேட்கிறார்கள். (1)

# கண்டாவளை,மரிற்றியம்பற்றுப் பகுதிகளில் சேதமடைந்த வீடுகள் மீள் நிர்மாணம்

யாழ்ப்பாணம்,ஜூன்3

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மரிற்றியம்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் அழிவடைந்த, சேதமடைந்த வீடுகள் மீள் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

கடந்தகால யுத்தத்தினால் முற்றாக அழிவடைந்த சேதமடைந்த வீடுகளே இந்தத் திட்டத்தின் கீழ் மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளதாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன், கோரக்கன்கட்டு, ஊரியன் கட்டு, முரசுமோட்டை, கண்டாவளை, பெரியகுளம், கல்மடுநகர், புளியம்பொக்கனை ஆகிய கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டதில் மரிற்றியம்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வற்றாப்பளை, முள்ளிவளை மேற்கு மற்றும் கிழக்கு, புதரிக்குடா, குமுழமுனை மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட வீடுகளும் இவ்வாறு மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (50 - 224 - 14)

# கணேசபுரம் கிராம நெற்செய்கைக்கு போதிய நீர் இன்றி மக்கள் கஷ்டம்

கிளிநொச்சி,ஜூன்3

கிளிநொச்சி, கணேசபுரம் கிராம விவசாயிகளின் நெற்செய்கைக்கு போதிய நீர் இன்மையால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மீள்குடியேற்றப்பட்ட பின்னர் இக்கிராம விவசாயிகளுக்கு இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்கு 300 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் இதுவரை 200 ஏக்கர் நெற்காணிகளே உழுது பண்படுத்தப்பட்டு நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குளத்தில் போதிய நீர் உள்ள போதிலும் இப்பகுதிக்கு குறைந்தளவு நீரே வழங்கப்படுவதனால் பின் பகுதிக்கு நீர் செல்வதில் சிரமம் உள்ளதாகவும், இது தொடர்பாக விவசாயிகளிடையே முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக இப்பிரதேச கமக்கார அமைப்பினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை முறையிட்டும் பலன் ஏதும் கிடைக்கவில்லை எனக் கூறு கின்றனர்.

இடப்பெயர்வின் அகோர வலிகளைத் தாங்கியபடி விவசாயத்தில் ஈடுபட முனையும் விவசாயிகள் மத்தியில் இவ்விடயம் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (1- 405)

# கிளிநொச்சிக்கான தொலைபேசி வசதிகளை விஸ்தரிக்கிறது ஸ்ரீலங்கா ரெலிக்கொம்

கிளிநொச்சி,ஜூன்3

கிளிநொச்சி பகுதிக்கான தொலைபேசி இணைப்புக்களை வழங்கும் பணிகளை ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இதுவரை விநியோகிக்கப்பட்டு வந்த கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் விரைவில் பொதுமக்களுக்கும் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை கிளிநொச்சிப் பகுதியில் 20 இற்கும் மேற்பட்ட கேபிள் தொலைபேசி இணைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த இணைப்புக்களை மேலும் விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனைவிட சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளின் பாவனையும் வன்னியில் அதிகரித்துள்ளது. (50 - 224)




# அடிப்படை வசதியோ, நிவாரணமோ இல்லாமல் அல்லற்படுகிறார்கள் கரைத்துறைப்பற்றில் குடியேறியோர்

கரைத்துறைப்பற்று,ஜூன்3

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறைப்பற்றுப் பகுதியில் மீளக்குடியமர்ந்த 4 ஆயிரம் பேர் நிவாரண உதவிகள் ஏதும் இன்றி கஷ்ட நிலையில் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த மாதம் 16 ஆம் திகதிக்குப் பின்னர் இவர்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

மீளக்குடியமர்ந்து 15 நாளாகியும் உலக உணவுத் திட்ட நிவாரணமோ வேறு எந்தவித நிவாரணமோ தமக்குக் கிட்டவில்லை என்று அந்த மக்கள் கூறுகின்றனர்.

வவுனியா தடுப்பு முகாம்களில் அந்தக் குடும்பங்களின் உழைப்பாளிகள் உள்ளதால் வருமானமும் இன்றி அவதிப்படுவதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

கரைவலைத் தொழில் செய்ய அனுமதிக்கப்படாததால், கடற் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய பிரதேசங்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் தமக்குக்கிட்டவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

ஐந்து தடிகளும் 12 தகரங்களும் மட்டுமே வழங்கப்படுகின்றன. இந்தியா அன்பளிப்புச் செய்த சிமெந்து கூட வழங்கப்படவில்லை என்று அந்த மக்கள் கூறுகின்றனர்.

இதனால் தற்காலிக கொட்டில்கள் கூட அமைக்க முடியவில்லை என்று அந்த மக்கள் முறைபடுகிறார்கள்.

மலசல கூட, குடிதண்ணீர் வசதிகள் கூடச் செய்து தரப்படவில்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். (1)



ஆனையிறவுப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தின் பின்னர் எடுக்கப்பட்ட படங்கள் இவை. விபத்துக்குள்ளான லொறியையும், மோட்டார் சைக்கிளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கிளிநொச்சிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978, மூலம் முதலாம் பாதம், கிரகபாவம் 16 ½ உடைய முகாமைத்துவ உதவியாளராக அரச நிறுவனத்தில் பணிபுரியும் பெண்ணுக்கு, அரச தொழில் புரியும் மணமகன் தேவை.

தொடர்பு:
4029, மே/பா உதயன்.



## திருமண சேவை

1978, புனர்பூசம், செவ்வாய் அற்ற, கனடா சிற்றிசன் மணமகனிற்கு, அழகிய, படித்த மணமகள் தேவை.

துர்க்கா திருமண சேவை,
9, சங்கிலியன் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
021-321 1814, 021-4591417
Thurka 32 gmail.Conm



## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், 16/2 (196), 2 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீட்டுடன் சேர்ந்த 2 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகொள்ள வேண்டிய
தொலைபேசி எண்: 0772719162,
0772719163.


## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியவர்களுக்கு நீதிமன்றம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த 3 வாகனங்களின் சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றம் தலா 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

கொடிகாமம், பாலாவி, நீர்வேலி,வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்த வாகனங்களின் சாரதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்குகளை விசாரித்த நீதிவான் சாரதிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத்தொகை செலுத்தத்தவறின் தலா ஏழு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். மணல் ஏற்றி வந்த வாகனங்களை தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்லவும் உத்தரவிட்டார்.

(50-202)

## ஜேர்மனியில் கல்வி கற்பது தொடர்பான விரிவுரை

யாழ்ப்பாணம், ஜூன் 3

ஜேர்மனியில் கல்வி பயில்வது தொடர்பாக அந்நாட்டுப் பிரதிநிதி ஒருவர் யாழ்ப்பாணத்தில் விரிவுரை ஒன்றை நடத்தவிருக்கிறார்.

யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை பி.ப 4 மணிக்கு இந்த விரிவுரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி கல்வி பரிவர்த்தனை சேவை (DAAD) அமைப்பின் பிரதிநிதி ஹீடிஸ்ரீனர் நிகழ்த்தும் இவ்விரிவுரை, மாணவர் விண்ணப்பம் செய்தல், அது தொடர்பான நடைமுறைகள், செலவினங்கள், புலமைப் பரிசில்கள் மற்றும் ஜேர்மனியில் மாணவர்களின் நிலைமை போன்ற விடயங்கள் அடங்கியிருக்கும்.

(ப)

## பாலஸ்த்தாபன நிகழ்வு

கரவெட்டி கிழக்கு, நுணாவில் குளக்கட்டு விநாயகர் ஆலயத்தின் பாலஸ்த்தாபன நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும்.

(204-253)


## லொறி விற்பனை

42-இலக்கமுடைய கென்டர்வான் அலுமினிய வொடியுடன் விற்பனைக்கு உண்டு. ரெட்பெயிற் இன்ஜின். தொடர்பு: 146, புங்கன் குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776071675, 021 4909789



## காணி/வீடு தேவை

கொடிகாமம், சாவகச்சேரி இடையில், ஓரமாகவோ, உள்ளேயோ காணியோ, வீடோ நியாய விலையில் தேவை.
தொ.பே: 0776935338



## வீடு வாடகைக்குண்டு

அதிநவீன வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம்.
தொடர்பு: 82/2, பலாலி வீதி, திருநெல்வேலி,
தொ.பே: 0714553311



# GRATE OPPORTUNITY TO GO ABROAD
# LONDON & EUROPE

ALL PAYMENTS AFTER VISA




இன்று வெளிநாடு செல்வதில் பல தடைகள் இருந்தாலும் எதுவித சிரமமும் இன்றி அனைத்து ஏற்பாடுகளையும் உடனடியாகச் செய்து கொள்ளக்கூடிய முறையில் அனைத்து வித செலவுகளையும் VISA கிடைத்தபின் செய்துகொள்ளக்கூடிய முறையில் இயங்கும் ஒரே ஒரு நிறுவனம் எங்கள் நிறுவனமாகும். வேலை புரிபவர்கள், படிப்பிக்கின்றவர்கள், படித்து முடித்தவர்கள், வேலையற்றோர், படிக்காதோர் அனைவருக்கும் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பதுடன் VISA கிடைத்த பின்னரே பணத்தை எதிர்பார்க்கும் ஒரே ஒரு நிறுவனம்.

15 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த

மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.

## அனி இன்டர்நேஷனல் எடியுகேஷன் கன்சல்டன்ட் சர்விஸ்

269/3, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 0214921831 Tele / Fax : 0214921832
Hotline : 0772949007 / 0772949011
(98968)
E-mail : aiecs2020@gmail.com


## ஓராண்டு நினைவில்



அமரர்
நாகராசா கதிர்காமராசா

திதி: ஷஷ்டி (03.06.2010)

பிறப்பு
06.01.1968

இறப்பு
16.05.2009

ஆண்டு ஒன்று
ஆனதோ எங்களைப் பிரிந்து–
உங்கள் நீண்ட நினைவுகளுடன்
நனைகிறது எம் விழிகள்.

280, ஏ.வி.றோட்,
அரியாலை.

குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

சிவநகர், உருத்திரபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த



திருமதி கனகசபை தங்கம்மா

பிறப்பு 22.12.1941
இறப்பு 18.05.2006

திதி: தேய்பிறை ஷஷ்டி

அன்பே உருவாய் பண்பே
அணிகலனாய்
பாசமே தீபமாய் கொண்டு எம்மை
வளர்த்தெடுத்த எமது அன்பு அம்மா
ஆண்டுகள் நான்கு வந்திடினும் உமது
ஆசைமுகம் நினைவிருக்கும்.

என்றும் தங்கள் நினைவில்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திரு.திருமதி உதயகுமார்-மகிந்தா
(குடும்பம்)
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(98942)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| யோ.தமிழ்வேந்தன் | யோ.ரோகிதா | க.யோகராசா | யோ.தமிழ்நிலா |
|---|---|---|---|
| மலர்வு: 19.06.2006 | மலர்வு: 18.09.2004 | மலர்வு: 16.10.1969 | மலர்வு: 16.09.2002 |
| உதிர்வு: 13.05.2009 | உதிர்வு: 13.05.2009 | உதிர்வு: 13.05.2009 | உதிர்வு: 13.05.2009 |

திதி: சஷ்டி (03.06.2010)

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் ஆயிரம் இரவுகள் கடந்தாலும் நிஜமெதுவென அறியாது இருக்கின்றோம். நித்திய ஜோதியில் நின்முகம் காண நித்தமும் நிறைந்து நிற்கின்றோம். நிறைவல்ல இது தொடரும் நின் நினைவுகள்

இல,17/8, நாவலடி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(98896)

குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
பொன்னுச்சாமி சிவானந்தன்
(ஓய்வுபெற்ற மலேரியாத் தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்)

தோற்றம் 29.06.1941
மறைவு 05.05.2010

கடந்த 05.05.2010 அன்று கொழும்பில் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக் கிரியை நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு எம்முடன் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (04.06.2010) வெள்ளிக்கிழமை இல.83, கண்டி வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல. '83', கண்டி வீதி,
சாவகச்சேரி.

(சி/568044)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GMail ஐக் குறிவைத்து 'Phishing' தாக்குதல்

மிக வேகமாகப் பிரபல்யமாகி வருகின்ற : அதிக பாவனையாளர் களைக் கொண்ட ஜீமெயில் பாவனையாளர்களை இலக்கு வைத்து இப்போது "ஹக்கர்கள்" தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருக்கின்றார்கள்.

'Phishing' எனப்படும் புது யுக்தி மூலமாகவே ஜீமெயில் வாடிக்கை யாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டு வருகின்றது.

'Phishing' எனப்படுவது ஒருவ ருடைய தனிப்பட்ட தகவல்களை - அதாவது மின்னஞ்சல் முகவரிக் கான பயனர் பெயர் (user Name), கடவுச்சொல் (Password) மற்றும் இரகசிய ஏற்பாட்டுக்கான விடயங் களை உங்களிடமிருந்து, உங் களை ஏமாற்றிப் பெற்றுக்கொள் வதாகும்.

அந்தவகையில் இப்போது 'Phishing' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஜீமெயில் பாவனை யாளர்களைக் குறிவைக்கத் தொட ங்கியிருக்கிறார்கள் தகவல் திருடர் கள்.

தற்போது ஜீமெயிலைப் பயன்படுத்துபவர்களுக்கு ஜீமெயில் நிர்வாகத்திடமிருந்து வருவது போல ஒரு மின்னஞ்சல் வருகிறது.

அதன் பிரகாரம் -

"சில பாதுகாப்பு நடவடிக்கை களுக்காக உங்களுடைய ஜீமெ யிலுக்கான User Name, Pass word, Date of Birth , Country ஆகிய தகவல்களை உடனடியாக அனுப்ப வேண்டும். தவறினால் உங்கள் கணக்கு முடக்கப்படும்"

எனக்குறிப்பிடப்பட்டிருக்கும். அதன் ஆங்கில வடிவம் பின்வரு மாறு அமைந்திருக்கும்.

*"The Gmail Team is working on total security on all accounts and as a result of this security upgrade we require all Gmail members to verify their account with Google. To prevent your account from disability you will have to update your information by clicking the reply button and filling the space below*
*User Name:*
*Password:*
*Birth date:*
*Country:*
*Account owner that refuses to update his or her account within 72hours of receiving this warning will lose his or her account permanently*
*Thank you for using Gmail!*
*The Gmail Team"*

அந்தக் கடிதத்தைக் கண்டதும் ஏதோ ஜீமெயில் எம்மைப் பாதுகா ப்பதற்காகத்தான் இவ்வாறு ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கிறது என நினைத்து நாமும் எம்மைப் பற்றிய முழு விபரங்களையும் அறிவித்து விட்டால்........

எங்களின் கதி....?

அதோ கதி தான்.

எங்களுடைய மின்னஞ்சல் முக வரியைப் பாவித்து எங்களுக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம், நாம் அனுப்புவதைப்போலவே கடிதம் அனுப்பப்படலாம், எங்களுடைய மின்னஞ்சலோடு சார்ந்த வங்கி, கடனட்டைச் செயற்பாடுகள் மேற் கொள்ளப்படலாம். எல்லாவற்று க்கும் மேலாக எங்களுடைய மின் னஞ்சலுக்கான கடவுச்சொல் நிர ந்தரமாக மாற்றப்பட்டு மற்றொரு வரின் கட்டுப்பாட்டுக்குள் போய் விடலாம்.

தேவை தானா இது?

எனவே 'Phishing' குறித்து விழி ப்புடனிருங்கள்.

இத்தகைய மின்னஞ்சல்களைக் கண்டால் கவனமாயிருங்கள்

# Ms Word 2007 / 2010 வடிவ கோப்புக்களைப் பார்பதற்கான மென்பொருள் அறிமுகம்


காலத்துக்குக் காலம் வெளிவரு கின்ற மென்பொருள்களைப் புதுப்பித்துப் பயன்படுத்தி வருகி ன்றவர்களுக்கு ஒரு தலையிடியாக இருக்கின்ற விடயம் *Vertion Con flict* என்பது தான்.

அதாவது குறித்த ஒரு மென்பொ ருளின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பில் *(updated version)* உருவாக்க ப்பட்ட கோப்பொன்றினை அதற்கு முந்திய பதிப்பு மென்பொருளில் பயன்படுத்த முடியாத நிலை.


உதாரணமாக *Msword* இல் பொதுவாகப் பலரிடம் *Word 2003* யே பாவனையில் இருக்கின்றது.

ஆனாலும் *Word 2007 / 2010* போன்ற புதுப்பிக்கப்பட்ட பதிப்பு க்களும் பாவனையில் இருக்கின் றன.

இந் நிலையில் *Word2007/2010* இல் தயாரிக்கப்பட்ட கோப்பினை *Word 2003* இல் பயன்படுத்துவதா யின் கோப்பினைச் சேமிக்கும் போது முந்திய பதிப்புக்களிலும் பயன்படுத்தத்தக்கதாக *97-2003 Format* என்ற வடிவத்தில் சேமிப்ப தன் மூலம் தொடர்ந்து பயன்படுத் தலாம்.




ஆனால் மின்னஞ்சல் மூலம் கிடைத்த புதுப்பிக்கப்பட்ட *Docx* வ்டிவ கோப்பொன்றினை நாம் பயன்படுத்துவதானால், அந்தக் கோப்பினை *Word 2003* இல் பயன்படுத்துவதற்கேற்றவாறு மீள மாற்றி அனுப்ப வேண்டும். இத னால் அனுப்புபவருக்கும் சிரமம், பயன்படுத்துபவருக்கும் வீண் சிர மம்.




இதனைத் தவிர்க்கும் வகை யில் *Docx Viewer* என்ற மென்பொருள் ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்றது.

மிகவும் எளிமையான இடை முகத்தையும், பாவனை முறை யையும் கொண்ட இம்மென் பொருள் இணையத்தில் இலவச மாகக் கிடைக்கின்றது.


சுமார் *640Kb* கொள்ளளவுடைய இம் மென்பொருள் *322Kb* கொள் ளளவுடைய *zip file* ஆகப் பதிவிற க்கம் செய்யக்கூடிய நிலையிலும் காணப்படுகிறது.




# வின்டோஸ் 7 இல் இணைப்பு வேகத்தை அதிகரிப்பதற்கான ஒரு எளிய வழிமுறை

– என்.சஞ்சீவன், யாழ்ப்பாணம் –

வின்டோஸ் 7 இல் உள்ள இயங் குதளக் கோப்பொன்றில் சில மாற்றங்களைச் செய்வதன் மூலம் கணனி ஒன்றின் இணைய இணை ப்பு வேகத்தினை அதிகரிக்க முடியும் என்று கண்டுபிடித்திருக் கிறார்கள்.




கணனியின் *Start Button* ஐ கிளிக் செய்து, *Run* என்பதனை தெரிவு செய்த பின் அதில் *system.ini* என type செய்த பின் OKஐக் கொடுக்கும்போது அரு கில் காட்டப்பட்டுள்ள Notepad window தோன்றும்.

அதன் கடைசி வரிக்குப் பின் கீழ் வருமாறு *type* செய்யுங்கள்:

*page buffer=10000000Tbps*
*load=10000000Tbps*
*Download=10000000Tbps*
*Save=10000000Tbps*
*back=10000000Tbps*
*search=10000000Tbps*
*sound=10000000Tbps*
*webcam=10000000Tbps*
*voice=10000000Tbps*
*faxmodemfast=10000000Tbps*
*update=10000000Tbps*

*type* செய்த பின் கோப்பினைச் சேமித்து உங்கள் கணனியை ஒரு முறை *restart* செய்யுங்கள்.

இப்போது இணைய வேகத்தைப் பாருங்கள் முன்னரை விட அதிகமாக இருக்கிறதா?

வாசகர்களே!

**உதயன் தகவல் தொழில்நுட்பச் சாளரம் பகுதியில் வெளியிடுவதற்கான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆக்கங்கள் மற்றும் ஆலோசனைகளை மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பி வைக்கமுடியும்.**

உதயன் தகவல் தொழில்நுட்பச்சாளரம்,
36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

*uthayanit@gmail.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறப்புவிழா அழைப்பு

03 rd June 2010

மீண்டும் யாழ்.மண்ணில்...

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் இன்று (03.06.2010) வியாழக்கிழமை முற்பகல் 10.45 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை வரும் சுபவேளையில்

## வன் மேற்கு வைத்தியசாலை
## Van West Clinic and Nursing Home

எனும் நிறுவனத்தினை பெரியோர்களின் ஆசியுடன் ஆரம்பித்து வைக்கவுள்ளோம். இவ் வைபவத்தில் அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் வருகை தந்து வாழ்த்தி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதம விருந்தினர்:
வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் அவர்கள்
(பிராந்திய சுகாதார சேவைகள், பணிப்பாளர்.)

சிறப்பு விருந்தினர்:
வைத்திய கலாநிதி ரி.கங்காதரன் அவர்கள்
முன்னாள் காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்
(யாழ்.போதனா வைத்தியசாலை)
*Van West Clinic and Nursing Home* நிறுவுனர்

கௌரவ விருந்தினர்கள்
திரு.கே.என்.இராஜரட்ணம் அவர்கள்
(உரிமையாளர், வனிக்கா மெடிக்கல்ஸ்)

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்
(அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

இல.18, ஐயனார் கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(கெங்காதரன் வைத்தியசாலை
தட்டாதெருச் சந்திக்கு அண்மையில்)

எஸ்.தனபாலசிங்கம் தம்பதிகள்,
எம்.நவநாதன் தம்பதிகள்.
*(Prop: Apolo Nursing Home)*

(99000)


## சீருடை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 3

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் சங்க முன் பள்ளிச் சிறார்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வினை நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடத்தவுள்ளனர்.

சங்க மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் சங்கத்தினரால் நடத்தப்பட்ட அழகியற் கலை பயிற்சிநெறியில் பங்குபற்றிய மகளிர் குழு உறுப்பினர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் இடம்பெறும்.

சங்கத் தலைவர் சி.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் கலந்து கொள்வார்.

(50-204-207)


# ஆயுள்வேத திணைக்களத்தினால் கைதடி அரசினர் சித்தபோதனா வைத்தியசாலைக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆள்சேர்ப்புச் செய்தல் பற்றிய அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும்பதவிகளுக்கு ஆயுள்வேத திணைக்களத்தினால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தாதிகள் (ஆண்/பெண்):**
அரசவைத்தியசாலைகளில் தாதியாகப் பணியாற்றிய அனுபவமுள்ள ஒய்வுபெற்ற அலுவலர்கள்.

**02. ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்:**
அரசவைத்தியசாலைகளில் குறிப்பிட்ட பதவியில் 5 வருடம் சேவையாற்றிய அனுபவமுள்ள ஒய்வு பெற்ற அலுவலர்கள்.

**ஆள்சேர்ப்பு நியதிகள்**
1. விண்ணப்பதாரி 65வயதிற்குக் குறைவானவராக இருத்தல் வேண்டும்.
2. நேர்முகப்பரீட்சை மூலம் தகுதியானவர் தெரிவு செய்யப்படுவார்.
3. சம்பளம், பொதுநிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம்ஓய்வுபெற்ற அலுவலர்களுக்கான கொடுப்பனவிற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களைக் கைதடி அரசினர் சித்தபோதனாவைத்தியசாலையில் பெற்று 30.06.2010இற்கு முன்னர் ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேதத் திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மகரகம என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். கடித உறை யின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

ஆயுள்வேதத் திணைக்களம்,
பழைய கொட்டாவ வீதி,
நாவின்ன, மகரகம.

ஆர்.பீ.டபிள்யூ.குணவர்த்தன
ஆயுள்வேத ஆணையாளர்.

(சி/568065)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 * 10 * 1941



மறைவு
14 * 06 * 2009

## அமரர் கதிரன் சண்முகம்

அன்பு அப்பாவே! ஆறாத் துயரத்தில்
நீள நினைவுகளை
நெஞ்சில் பதித்துச் சென்று விட்டீர்கள்
ஆண்டொன்று கழிந்தாலும்
ஆறுமோ எங்கள் மனம்
ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகள் வந்தாலும்
உங்கள் நினைவுதான் வரும்
நீங்கள் காட்டிய பாதை எங்களை
வளமுடன் வாழ வைக்கிறது.
உங்கள் கனவு நனவாக
வாழ்ந்து காட்டுவோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (03.06.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முதலாம் வட்டாரம்,
நயினாதீவு.


**குடும்பத்தினர்.**
தகவல்: ச.சிவனேந்திரன் (சுவிஸ்).

(98568)

# விண்ணக வாழ்வின் நினைவலைகள்

**இரண்டாமாண்டு** **முதலாமாண்டு**

மண்ணில் 03 . 07 . 1927
விண்ணில் 07 . 04 . 2008





மண்ணில் 09 . 03 . 1937
விண்ணில் 16 . 05 . 2009

அமரர்
## சின்னத்தம்பி சுப்பிரமணியம்

திருமதி
## சுப்பிரமணியம் அம்பிகைநாச்சி

பேரோடும் புகழோடும் பெருமையாய் வாழ்ந்த உங்கள் நினைவுகளும்
இல்லத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டிய உங்கள் வாழ்வும் ஈராண்டு, ஓராண்டு என்ன?
ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும் அணையாத தீபமாய் ஒளிரும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

மணல் புலோலி தெற்கு,
புலோலி, வடமராட்சி.

மகன், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(98992)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சின்னத்துரை தெய்வேந்திரன்

அன்னை மடியில்: 14.01.1946
ஆண்டவன் அடியில்: 15.05.2009
திதி: 03.05.2010

எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டு ஒன்றான போதும்
ஆறாது உம் பிரிவின் துயரம்
எம் உயர்வுக்கு உறுதுணையாய்
என்றும் எம் இதயத்தில் நிறைந்தவரே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

மெடிக்கோல்ட் பிளட்ஸ்,
வாஸ்வல் றோட், கொழும்பு- 10.
0112389658

(99002)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிபர் போட்டிப்பரீட்சையில் தேறியவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதில் பெரும் தாமதம்

## கவனிக்குமா மத்திய மாகாணக் கல்வி அமைச்சு?

நுவரெலியா, ஜூன் 3

மத்திய மாகாணத்தில் புதிதாகத் தகுதி பெற்ற அதிபர்களுக்கு எப்போது நியமனம் வழங்கப்படும் எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இது குறித்து அதிபர்கள் தரப்பில் கூறப்பட்டவை வருமாறு:-

மத்திய மாகாணத்சைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் போட்டிப் பரீட்சைகள் மூலம் அதிபர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள போதிலும், அவர்களுக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை.

அதிபர் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களை அதிபர் சேவையில் உள்ளீர்ப்பதற்கான கடிதங்கள் கடந்த 2009 நவம்பர் 13 ஆம் திகதி கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டன.

எனினும், நாட்டின் அரசியல் நிலை காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மேற்படி நியமனங்கள், நாட்டின் சகல மாகாணங்களிலும் கடந்த மாதத்தில் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால், மத்திய மாகாண ஆசிரியர்களுக்கு மட்டும் இன்றுவரை இந்த நியமனங்கள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் மத்திய மாகாணக் கல்வி அமைச்சரும், கல்வி அமைச்சின் செயலாளரும் மௌனம் சாதித்து வருகின்றனர். இது வேதனைக்குரிய விடயமாகும்.

இந்த நிலையில் ஏனைய மாகாணங்களில் நியமனம் பெற்று பாடசாலைகளுக்கு கடமைக்காகச் சென்றவர்கள் சிரேஷ்ட நிலையை அடைந்தவர்களாகவே இருப்பர்.

இனிவரும் எந்த ஒரு நேர்முகத்தேர்விலும் மத்திய மாகாணத்தவர்கள் பின்னிலை வகிக்கவே இது வழிகோலும்.

அதிபர் சேவைக்குத் தெரிவான மத்திய மாகாணத்தவர்கள் சேவை உள்ளீர்ப்புக்கான சம்பளப்படி நிலைகள், சேவைமூப்பு மற்றும் கொடுப்பனவுகளின்றி வெறுமனே சாதாரண ஆசிரியர்களாகவே கடமையாற்றிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளனர்.

இந்த நிலையில், பல்வேறு தரப்பினரின் செல்வாக்குகளால் அதிபர்களாக நியமனம் பெற்ற பலர் மாகாணத்தின் பல பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்றமை மிகவும் வருந்த வேண்டிய - வேடிக்கையான விடயமாகும்.

எனவே, இந்நிலையைக் கருத்தில் கொண்டு மத்தியமாகாணக் கல்விசார் புலத்தில் கவனிக்கப்படாதிருக்கும் இவ்விடயத்தை மாகாணக் கல்வி அமைச்சரும், அமைச்சின் உயர் அதிகாரிகளும் கவனத்தில் கொண்டு செயற்படவேண்டும் - இப்படி அந்த அதிபர்கள் தெரிவிக்கின்றனர். (ளி)

# உடைந்துவிழும் நிலையில் பத்தனை ஆற்று மதில்கள்

கொழும்பு, ஜூன் 3

பத்தனை ஆற்றுக்கு மேலாகப் போடப்பட்டுள்ள வீதியின் இருபக்கப் பாதுகாப்பு மதில்களும் உடைந்து ஆபத்தான நிலையில் உள்ளன எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வீதியில் சிறுவர்கள் விளையாட்டில் ஈடுபடுவது வழக்கம் என்றும், அவ்வாறான சந்தர்ப்பத்தில் மதில் உடைந்துள்ள பகுதியில் அவர்கள் விழ நேர்ந்தால் கீழே ஓடுகின்ற ஆற்றில் மூழ்கும் அல்லது அதில் அடித்துச் செல் லும் அாயம் நிலவுகின்றது - என்றும் பிரதேச மக்களால் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது

எனவே, சம்பந்தப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் காலம் தாழ்த்தாது இந்த மதில்களைப் புனரமைக்க வேண்டும் - என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

# டெங்குநோயைக் கட்டுப்படுத்தும் பக்ரீரியாவை முதலில் கண்டி மாவட்டத்தில் விசிறத் திட்டம்

கண்டி, ஜூன் 3

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படவுள்ள பி.டி.ஐ. எனப்படும் பக்ரீரியாக்களை முதலில் கண்டி மாவட்டத்தில் பயன்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.




டெங்குநோய் வைரஸ்களைக் காவு கின்ற நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் தன்மை கொண்ட பி.டி.ஐ.பக்ரீரியாக்கள் கியூபாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன.

கடந்தவருடம் கியூபா அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் கண்டி நகரம், அக்குறணை மற்றும் கம்பளை முதலான இடங்களில் இது பயன்படுத்தப்பட உள்ளது.

ஹெலிக்கொப்டர் மூலம் இது நீர் நிலைகளுக்கு விசிறப்படும். இதற்கு அதிகளவு பணம் செலவாகின்ற போதும், டெங்குநோயால் பாதிக்கப்படும் நோயாளர்களைப் பராமரிப் பதற்கு சுகாதார அமைச்சு இதனைவிடவும் கூடுதல் பணம் செலவிட வேண்டியுள்ளதால் இத்திட்டத்தை முன்னெடுக்கும்படி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் - என மேலும் தெரிய வருகிறது. (ளி)

# பதுளையில் பெண் கொலை சந்தேகத்தில் இருவர் கைது

கொழும்பு, ஜூன்3

பதுளை-எல்ல பொலிஸ் வலயத்துக்குட்பட்ட பள்ளகெட்டுவ ரெட்ஹன்வத்தயில் உள்ள வீடொன்றில் தனியாக வாழ்ந்து வந்த 52 வயது பெண்மணி கொலை தொடர்பில் இருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என மாத்தறை பொலிஸார் தெரிவித்தார்.

குறித்த பெண்மணி அவரது வீட்டுக் கூரையில் சுருக்குமாட்டி தொங்கவிடப்பட்டிருந்தார் எனக் கூறப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் அப்பெண்ணின் சகோதரனின் இரு மகன்மார் மாத்தறை, மிரிசபொல்வத்து மோதரை என்ற இடத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமான பெண்ணின் கையடக்கத் தொலைபேசியில் பதிவாகியிருந்த அழைப்பு இலக்கங்களைப் பின்பற்றியே இவர்கள் கைதாகியுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

இவர்களில் பிரதான சந்தேகநபர் ஆறு முறை திருமணம் முடித்தவர் எனவும், கைது செய்யப்பட்ட சமயம் ஒரு மனைவியின் வீட்டில் பரணில் மறைந்திருந்தார் எனவும் பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்கள் இருவரும் பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டு தண்டனை அனுபவித்து வந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் தம்மீதான பல வழக்குகளைச் சமாளிப்பதற்காக இப்பெண்ணைக் கொலை செய்து அவரது உடைமைகளைக் கொள்ளையிட்டுள்ளனர் எனவும் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

கொலை செய்யப்பட்ட பெண்மணியின் வீட்டில் கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலை பேசியில் பதிவாகியிருந்த அழைப்புகள் பற்றிய விவரங்களை, நீதிமன்ற உத்தரவுக்கமைய குறிப்பிட்ட தொலைபேசி நிறுவனங்களிடமிருந்து பெற்றபின் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின்னரே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என மாத்தறைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ளி)

# மண்சரிவு அனர்த்தங்களுக்கு மனிதச் செயற்பாடே காரணம்

## கட்டட ஆய்வு நிலையம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன்3

மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் மாவட்டங்கள் பலவற்றில் மண்சரிவு ஏற்படுவதற்கு சட்டவிரோதமான மனிதச் செயற்பாடுகளே காரணம் என தேசிய கட்டட ஆய்வு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

பதிவாகியுள்ள சம்பவங்களில் 90சத வீதமானவற்றை இயற்கை அனர்த்தங்கள் எனக் கருதமுடியாதென தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் மண்சரிவு ஆய்வுப் பிரிவின் தலைவர் புவியியல் ஆய்வு நிடணர் ஆர்.எம்.எஸ். பண்டார கூறினார்.

பல சம்பவங்களை இயற்கை அனர்த்தங்கள் எனக் கூறுவது சிரமமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மழைக் காலங்களில் பெரும்பாலான பகுதிகளில் மண்மேடுகளே சரிந்து வீழ்ந்துள்ளன. இவற்றுக்கு மனித செயற்பாடுகளே பெரிதும் காரணமாக அமைந்துள்ளன - என நிபுணர் பண்டார மேலும் தெரிவித்தார். (ளி)

# கனியவளங்கள் மிக்க மாத்தளை மாவட்டத்தை இலங்கையில் முன்னோடி இடமாக மாற்றுவோம்

## எம்.பி. லக்ஷ்மன் வசந்தபெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

இலங்கையில் முன்னோடி மாவட்டமாக மாத்தளை மாவட்டத்தை உருவாக்குவார் என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் வசந்த பெரேரா தெரிவித்தார்.

மாத்தளை ஹோம்ஸீஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் அதிக கனியவளங்கள் மிக்க மாவட்டமாகத் திகழ்வது மாத்தளை மாவட்டமே.

எனினும், ஏனைய மாவட்டங்களுடன் அதனை ஒப்பிடும் போது இது மிகவும் வளர்ச்சி குன்றிய மாவட்டமாகவே காணப்படுகின்றது.

எனவே, இதனை அபிவிருத்தியில் இலங்கையின் முன்னோடி மாவட்டமாக மாற்றியமைப்பதே எனது இலக்காகும் - என மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் வசந்த பெரேரா தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவால் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் வசந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# பதுளையில் மாணவர் மூவர் டெங்குநோயால் பாதிப்பு

பதுளை, ஜூன்3

பதுளை தர்மதூத வித்தியாலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலை மாணவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பதுளை ஸ்பிரிங்வெளி, இரதுகொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என வைத்தியசாலைப் பேச்சாளர் தெரிவித்தார்.

பாடசாலைச் சூழலில் உள்ள சுத்திகரிக்கப்படாத அழுக்கு நிறைந்த வடிகான்கள் மூலமாகவே இந்நோய் தமது பிள்ளைகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடும் எனப் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு பாடசாலைச் சூழலில் டெங்கு பரவக்கூடிய வேறு சில இடங்கள் இருக்கின்றன என்றும் பெற்றோர் விசனம் தெரிவித்தனர். (ளி)

# பலாங்கொடை பிரதேசசபை உறுப்பினர் தனித்து இயக்கம்

கொழும்பு, ஜூன் 3

பலாங்கொடை பிரதேசசபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக நீண்ட காலம் பணியாற்றி வந்த குமார நாகன்தல தனித்து இயங்குவதற்குத் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பலாங்கொடை ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர்களினதும்,மாவட்டத் தலைமைத்துவத்தின் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்ததன் காரணமாகவே தாம் இந்த முடிவுக்கு வந்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே, எதிர்வரும் காலங்களில் பலாங்கொடை பிரதேசசபையில் சுயேச்சை உறுப்பினராக இயங்க தீர்மானித்துள்ளார் என பலாங்கொடை பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்;

பலாங்கொடை பிரதேசசபைத் தலைவரின் தலைமையில் பிரதேசசபையின் கேட்போர் கூடத்தில் மாதாந்தக் கூட்டம் நடைபெற்றது. (ளி)

# சீரற்ற காலநிலையால் மலைநாட்டில் கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம்

நுவரெலியா, ஜூன் 3

நாட்டின் கடந்த சில நாள்களாக நிலவிய மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மலைப்பாங்கானப் பகுதிகளில் கற்பாறைகள் புரண்டு விழக்கூடிய அபாயம் நிலவுகின்றது - என்று நுவரெலியா மாவட்டச் செயலாளர் டீ. பீ. ஜீ. குமாரசிறி தெரிவித்துள்ளார்.

மழை காரணமாக மத்தியமலை நாட்டின் மலைப்பாங்கான இடங்களில் மண்ணரிப்பு ஏற்பட்டு கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம் உள்ளது - என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொத்மலை, பூண்டுலோயா, அம்பகமுவ போன்ற பகுதிகளில் இந்த அபாயம் அதிகள வில் நிலவுகின்றது - என்றும் அவர் கூறினார்.

பூண்டுலோயா பகுதியில் இவ்வாறு கற்யாறையொன்று சரிந்து வீழ்ந்ததில் 17 வயதான இளைஞர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# கம்பளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் பதினெட்டு வருடங்களுக்குப் பின் தேர்த் திருவிழா

கம்பளை, ஜூன் 3

கம்பளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கடந்த 18 வருடங்களுக்கு பின்னர் கடந்த 30 ஆம்திகதி ஞாயிற்றுகிழமை தேர்த்திருவிழா இடம்பெற்றது.

ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ பரமேஸ்வர சர்மா தலைமையில் தேர்த்திருவிழா நடைபெற்றது.கம்பளை ஐயப்ப சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் அன்றையதினம் காலை விநாயகர் பூசைகளுடன் திருவிழா ஆரம்பமாகி மகேஸ்வரபூசை உட்பட விசேட பூசைகள் இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை ஆறு மணிக்கு கம்பளை ஸ்ரீ முத்து மாரியம்மன் தேவஸ்தானத்தில் இருந்து பட்டு எடுத்து வரப்பட்டு விசேட அலங்கார பூசை மற்றும் வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா நடைபெற்றது. இதில் கம்பளை நகர் மற்றும் அதனைச் சூழ வுள்ள பகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான அடியார்கள் கலந்து கொண்டனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலம் சந்தோஷம், மகிழ்ச்சி அடைவீர்கள். மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கை காட்ட முற்படுவீர்கள். கடனாக கொடுத்த பணம் திரும்ப வரும். உறவினர் ஒருவர் உங்களிடம் யோசனை கேட்டு செயற்படலாம். சில வேலைகளுக்காகக் காத்திருக்கலாம்.

### இடபம்



இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் இன்று முடிவுக்கு வரும். தொழில், வியாபார நிமித்தம் வெளியூர் பயணம் செல்லலாம். பெண்கள் குடும்ப பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். மருத்துவ சிகிச்சை பெற செல்லும் சிலருக்கு நீங்கள் துணையாகச் செல்லலாம். வயிறு, வாயு உபாதை ஏற்படும்.

### மிதுனம்



திட்டமிட்ட வேலை ஒன்றை கடைசி நேரத்தில் மாற்றி அமைப்பீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளை சந்திக்கலாம். வெளியூர்களிலிருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு அதிகரிக்கும். நோய் உபாதைகளால் உற்சாகம் குறையலாம்.

### கடகம்



தம்பதியர் இடையே ஒற்றுமை அதிகரிக்கும். உங்களின் செயற்பாடுகளை நண்பர்கள் பாராட்டுவர். எதிர்பார்த்த பணவரவுகளுடன், எதிர்பாராத வரவுகளும் வரலாம். எதிர்ப்புகளை சூழ்ச்சியாக செயற்பட்டு வெற்றிகரமாக முறியடிப்பீர்கள். உறவு பெண்கள் அல்லது ஆண்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள்.

### சிங்கம்



அயலாரின் அனுசரணை கிடைக்கும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். நாளை வருமென நினைத்த பணவரவு ஒன்று இன்றே வரலாம். பொது காரியங் களில் ஈடுபடுவீர்கள். உதிரி வருமானங்கள் கிடைக்கலாம். தொழில் ரீதியாக ஏற்பட்ட வெறுப்பு விலகி அக்கறையோடு செயற்படுவீர்கள்

### கன்னி



தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். தந்தை தொடர்பான வகையில் அன்பு தொல்லைகளைச் சந்திக்கலாம். பொறுப்பில்லாமல் செயற்படும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதல் சொல்வீர்கள். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். தேவையற்ற விடயங்களில் நேரத்தை வீணடிப்பீர்கள்.

### துலாம்



எந்த காரியத்தையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது. திடீரென சந்திக்கும் நண்பர்களுக்காக செலவுகளைச் செய்யலாம். நெருக்கடியான சூழ்நிலையில் பணியாற்றலாம். சொத்து விவகாரங்களில் பங்காளிகளுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்விற்கு வரலாம். தேவையற்ற செலவு செய்யலாம்.

### விருச்சிகம்



சொல்வாக்கைக் காப்பாற்றிச் செல்வாக்குப் பெறுவீர்கள். புதிய வேலை முயற்சிகளில் ஈடுபட்டிருப்போர், நண்பர்கள் மூலம் நல்ல வாய்ப்புகளை பெறலாம். நிதி நிலைமையில் முன்னேற்றம் காணப்படும். பிள்ளைகள் நலன் கருதி, சில நல்ல காரியங்களைச் செய்வீர்கள். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். ஆறுதலான நாள்.

### தனுசு



தடுமாற்றங்கள், மனக்குழப்பங்களைச் சந்திக்கலாம். சிலருடன் தேவையில்லாமல் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். திட்டமிட்டதற்கு அதிகமாக சில விடயங்களுக்கு கூடுதலாக செலவாகலாம். சுபபோக விடயங்களில் நாட்டம் செல்லும். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத ஒருவர் வரலாம்.

### மகரம்



உறவினர்கள் தொடர்பான விடயங்களில், நாசுக்காக நடந்து கொள்வது நல்லது. நாடி வந்த சிலருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். எதிர்பாராமல் கேட்கும் நல்ல செய்திகளால் சந்தோஷம் அடைவீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். நாவன்மை அதிகரிக்கும்.

### கும்பம்



குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். தொழிலுக்காக வாங்கிய கடன் ஒன்றை உடனே திருப்பிக் கொடுக்கலாம். பெண்கள் விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். விருந்தினர் வருகையால் செலவுகள் கூடும். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். பதற்றம் உண்டாகும்.

### மீனம்



யாராவது உங்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். கணவன் மனைவி உறவில் அன்னியோன்யம் அதிகரிக்கும். விருப்பமான உணவு வகைகளை சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். உற்சாகம் கூடும்.

# சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று

# யாழ்.மாவட்டக் கல்வித் துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.




## கீர்த்திகா சிவராசா
## விக்னேஸ்வராக் கல்லூரி

நான் விக்னேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்று வருகிறேன். ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் தோற்றி 4ஏபி2சி2எஸ் பெறுபேற்றினைப் பெற்றுள்ளேன். ஆனால் எதிர்பார்த்த பெறுபேற்றைப் பெறமுடியவில்லை.

எனது கற்றலுக்கு எனது பெற்றோர் பெரிதும் ஆதரவாக இருந்தனர். அத்துடன் எனது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களின் ஆதரவும் கிடைத்தது. நான் இப்பெறுபேற்றினைப் பெறுவதற்கு உதவிய பெற்றோர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், ஏனைய தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

ஜி.சீ.ஈ உயர்தரத்தில் வர்த்தக பாடத்தைத் தெரிவுசெய்து கொண்ட நான், அக்கறையுடன் கற்று எனது பெற்றோருக்கும், பாடசாலைச் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துக் கொடுப்பேன்.



## சுப்பிரமணியம் ஜெயசீலன்
## ஹாட்லிக் கல்லூரி

நான் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி 8ஏபி பெறுபேற்றைப் பெற்றுள்ளேன்.

எனக்கு இத்தகைய சிறந்த பெறுபேறு கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பெறுபேற்றை நான் பெறுவதற்கு மூல காரணமாய் இருந்த பெற்றோர், ஆசிரியர்கள், சகோதரர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் படிக்கும் போது கடினமானவற்றை விளங்கிக் கொள்வதற்கு கடினமான பாடங்களுக்கு அதிக நேரத்தை ஒதுக்குவேன். பாடசாலையில் மட்டும் கற்காது நூலகத்திற்கும் சென்று மேலதிக விடயங்களைத் தேடிக் கற்பேன்.



## தவகுலரத்தினம் பிரசாத்
## ஹாட்லிக் கல்லூரி

நான் எனது ஆரம்பக்கல்வியை புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையில் கற்றேன். தொடர்ந்து ஹாட்லிக் கல்லூரியில் எனது இடைநிலைக் கல்வியைக் கற்றேன். கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் 5ஏ4பி பெறுபேற்றைப் பெற்றேன். இப்பெறுபேற்றை பெற்றதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் இப்பெறுபேற்றைப் பெற உதவிய பாடசாலை ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். எனது எதிர்கால கல்விச் செயற்பாடுகளைச் சிறப்பாக மேற்கொள்வதே எனது அடுத்த இலக்காகும்.



## மகேந்திரன் கோணேஸ்வரன்
## ஹாட்லிக் கல்லூரி

நான் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி 5ஏ3பிசி பெறுபேற்றினைப் பெற்றுள்ளேன்.

நான் எனது கல்வியை கடினமாக கற்காவிடினும் முழு ஆர்வத்தோடு கற்றேன். எனது குடும்பத்தினரும் அதற்கேற்ற வசதியைத் தந்தனர்.

இந்தப் பெறுபேற்றைப் பெறுவதற்கு உதவிய ஹாட்லிக் கல்லூரி சமூகத்திற்கும், தனியார் கல்வி நிலையத்திற்கும் பெற்றோருக்கும் என்றும் கடமைப்பட்டவனாக இருப்பேன். நான் தற்போது கணக்காளராகும் இலக்கை நோக்கி வர்த்தகத்துறையில் கற்றுக்கொண்டிருக்கிறேன்.

நேர்காணல்:
எஸ்.மூர்த்தி, சுகந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்கு குடிதண்ணீர் விநியோகத்திட்டம்




வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ள தொண்டைமானாறு குடாக்கடல் நீரேரி (உப்பாறு) தொண்டைமானாற்றில் இருந்து செம்மணி வரை பரந்துள்ளது. உப்பு நீர் கலப்பின் தாக்கம் காரணமாக யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதி வல்லைச் சந்தி வரையும் மற்றும் அச்சுவேலி - செல்வச்சந்நிதி வீதி ஆகியவற்றுக்கு கிழக்கு புறமாகவும் வீதிக்கு மேற்கு கரையோரமாகவும் தரைக்கீழ் நீரில் உப்புத் தன்மை காணப்படுவதால் இந்தப் பகுதியில் உள்ள குடும்பங்களின் குடிதண்ணீர் வசதி குறைபாடு உடையதாகக் காணப்படுகின்றது. குடிதண்ணீரைப் பெறுவதற்கு அலைய வேண்டிய நிலையில் உள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ளடங்கிய வாதரவத்தை மக்களின் குடிதண்ணீர் வசதியைக் கருத்தில் கொண்டு வலி.கிழக்கில் குடிநீர் விநியோக வேலைத்திட்டம் 1979 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட் டது. புத்தூர் மேற்கில் சுன்னாகம் வீதியில் ஓரமாக உள்ள வள்ளல் மழுவராயர் கந்தையாவின் தர்மசாதனமான சத்திரத்துக் கிணறு மறுசீரமைப்பு செய்யப்பட்டு அதில் இருந்து வாதரவத்தைக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டது. 1981.01.31 ஆம் திகதி ஆர்.பிரேமதாஸ (முன்னாள் ஜனாதிபதி) உத்தியோகபூர்வமாகக் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். வாதரவத்தையில் முக்கியமான இடங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பத்துக்கு மேற்பட்ட குடிதண்ணீர்த் தொட்டிகளில் (ஒவ்வொன்றும் 400 கலன் கொள்ளளவு கொண்டது) காலையும் மாலையும் குடிதண்ணீர் நிரப்பப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இந்த நீர் விநியோகத்தை தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை நேர்த்தியாக மேற்கொண்டு வந்தது.

வாதரவத்தை குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தில் இருந்து குடிதண்ணீர் விநியோகத்திட்டம் 2007 ஆம் ஆண்டு அச்சுவேலிப் பகுதிக்கு விஸ்தரிக்கப்பட்டு அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி வல்லை, அச்சுவேலி வடக்குப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொட்டிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த வருடம் குடிதண்ணீர் விநியோகம் புத்தூர் மணற்பகுதி, புத்தகலட்டி, புத்தூர் கிழக்குப் பகுதிக்கு விஸ்தரிக்கப்பட்டு தொட்டிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. வாதரவத்தைப் பகுதியில் வீடுகளுக்கு தனித்தனியாக குழாய் இணைப்பு மூலம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் அதே வேளையில் அச்சுவேலி புத்தூர் பகுதிக்கும் வீடுகளுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளை தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை மேற்கொள்ளவுள்ளது. வாதரவத்தைக்கு மட்டும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியில் சத்திரத்துக் கிணறு பயன்படுத்தப்பட்டது. தற்பொழுது நிலாவரையில் ஆழ்துளை குழாய்க்கிணறு தோண்டப்பட்டு அதன் மூலம் நீர்விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. குழாய்க் கிணற்றில் இருந்து நீர் விநியோகம் நடைபெறும் வேளையில் குளோறின் ஊட்டப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது. தற்பொழுது தினசரி இரண்டு வேளை நீர்விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. நாளாந்தம் 92 ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. மொத்தமாக 42 குடிதண்ணீர் தொட்டிகள் ஊடாகவும் வாதரவத்தைப் பகுதிக்கு நீர்த்தாங்கி மூலமும் நீர்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வலி.கிழக்கில் குடிதண்ணீர்விநியோகம் அவசியம் தேவை என கண்டறியப்பட்ட பிரதேசத்தில் கால் பங்கு அளவுக்கே தற்பொழுது குடிதண்ணீர் விநியோகம் மேற் கொள்ளப்படுகின்றது.

ஞானஆதவன்

(வளரும்)

# இருபாலையில் ஒரு வித்தியாபீடம்

இன்று யாழ்ப்பாணத்தின் உயர் கல்விப் பீடம் என்றவுடன் நம் எல்லோர் விரல்களும் திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழகத்தை நோக்கிச் சுட்டுவது இயல்பானது. நம் மண்ணை ஒல்லாந்தர் ஆட்சி செய்த காலத்தில் கல்விக்கான உயர்பீடம் கோப்பாய் தெற்கு, இருபாலைப் பகுதியில் அமைந்திருந்தது என்பதை உங்களால் நம்ப முடிகிறதா? விடுதி வசதி, உணவு வசதி எனப் பல்வேறு வசதிகளுடன் மாணவர்களுக்குக் கல்வி அளித்த வித்தியாபீடம் இருபாலை நெல்லைநாத முதலியாராலும் அவர் மகன் சேனாதிராச முதலியாராலும் நடத்தப்பட்டது.

கூழங்கைத் தம்பிரான் ( கனகசபாபதி யோகி) என்ற தமிழறிஞர் தமிழகத்தின் காஞ்சியில் இருந்து இங்கு வந்து நம் மண்ணின் பல பாகங்களிலும் தங்கியிருந்து தமிழ் பரப்பினார். இருபாலை நெல்லைநாத முதலியார் இவரிடம் பாடங் கேட்டோருள் முக்கியமானவர்.

நெல்லைநாத முதலியார் ஞாபக சக்தியில் இணையற்றவர். இவரது ஞாபக சக்தியின் பெருமையை வெளிப்படுத்த மகா வித்துவான் சி.கணேசையர் ஒரு சம்பவத்தை எடுத்துக் காட்டியுள்ளார். ' ஈழ நாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்ற நூலில் இச்செய்தி உள்ளது.

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்டியவர் வண்ணை வைத்திலிங்கச் செட்டியார். வடதேசத்துப்( தமிழ்நாடு) புலவரான செந்திக்கவி என்பவர் செட்டியார் மீது பிரபந்தம் ஒன்றைப் பாடிப் பரிசு பெற விரும்பினார். அப்பிரபந்தத்தை அரங்கேற்றுவதற்குரிய இடமாக வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் மண்டபம் குறிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்காக யாழ்ப்பாணத்திலுள்ள பல வித்துவான்களுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன. அரங்கேற்றம் காணும் நோக்கில் எல்லோரும் மண்டபத்திற் கூடியிருந்தனர். இருபாலை நெல்லைநாத முதலியாரும் அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்ட மாத்திரத்தில் கூடியிருந்த வித்துவான்கள், பிரபுக்கள், ஏன் வைத்திலிங்கச் செட்டியார் என எல்லோரும் எழுந்து மரியாதை செய்தனர். ஆனால் வடதேசப் புலவரான செந்திக்கவி மாத்திரம் எழுந்து நின்று மரியாதை செய்யவில்லை. இறுமாந்தப்படி உட்கார்ந்திருந்தார் அவர்.

அரங்கேற்றம் ஆரம்பமானது. முடிவில் ' பாட்டுக்கள் எப்படி?' எனச் செட்டியார் நெல்லைநாத முதலியாரைப் பார்த்து ஆவலுடன் கேட்டார். முதலியார் தனது அதீத ஞாபக சக்தியைக் கையாண்டு வடதேயப் புலவரின் இறுமாப்பை அடக்க நினைத்தார். ''புலவர் பாடியவை பழைய பாடல்கள். எனக்கும் அவை ஞாபகமாக இருக்கின்றன'' என்று கூறிவிட்டு அப்பிரபந்தத்தை மீளவும் கூறிக்காட்டினார்.




உடனே வடதேசப் புலவர் திகைத்து நாணி எழுந்து நெல்லை நாத முதலியாரின் காலில் வீழ்ந்து தாம் செய்த குற்றத்தைப் பொறுக்குமாறு வேண்டினாராம்.

முதலியார், செட்டியாருக்கு நடந்தவை எல்லாவற்றையும் கூறி வடதேசப் புலவருக்குச் சன்மானம் வழங்கிக் கௌரவிக்குமாறு வழிப்படுத்தினார் என மகாவித்துவான் சி. கணேசையர் குறிப்பிடுகின்றார்.

இலக்கண இலக்கியங்களில் வல்லவராயிருந்த நெல்லைநாத முதலியார் இயற்றிய நூல்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை.

இருபாலை நெல்லை நாத முதலியாரது மகனே சேனாதிராச முதலியார். தந்தையும் மகனும் தம் மனையில் வறிய மாணவர்களுக்கு அன்னம் வழங்கிக் கற்பித்தனர் என சி.கணேசையர் குறிப்பிடுகின்றார். சேனாதிராச முதலியாரும் ஞாபக சக்தியில் சிறந்து விளங்கினார். அந்நாள்களில் அதிகளவான விடயங்களை மனப்பாடஞ் செய்து ஒப்புவிக்கும் திறம் அறிஞர்களுக்குரிய இலக்கணமாகக் காணப்பட்டது. இந்நாள்களில் இச்சிந்தனையை நவீன கல்வியாளர் ஏற்கார். கணனியின் வருகை இந்நிலை மாற்றத்திற்குப் பிரதான காரணமாகும்.

ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் சிறந்த தமிழறிஞர்களாக விளங்கிய நல்லூர் சரவணமுத்துப் புலவர், தென்கோவை அம்பலவாண பண்டிதர், நீர்வேலி பீதாம்பரப் புலவர்,ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் போன்றோர் இருபாலை வித்தியா பீடத்தில் சேனாதிராச முதலியாரிடம் பாடம் கேட்டவர்கள்.

சேனாதிராச முதலியாரின் ஞாபக சக்திக்குச் சான்றாக, வண்ணைச் சிவன் கோயிலில் வடதேசக் கவிஞரை மடக்கிய பெருமையை இவர்மேல் ஏற்றிப் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் அ. சதாசிவம்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

ஐரோப்பியர், அரச உத்தியோகத்தின் பொருட்டு இங்கு தங்கியிருந்த நாள்களில் இருபாலை வித்தியா பீடத்திலே தமிழைக் கற்றனர் என அறியமுடிகின்றது. நல்லூர் கந்தசுவாமி கோயிலில் முதன்முதலாகப் புராணப் படிப்பு நிகழ்வை ஆரம்பித்து வைத்தவரும் சேனாதிராச முதலியாரேயாவார். கூழங்கைத் தம்பிரான் வழியாகப் பரவிய தமிழ்ப் புலமை மரபு, நெல்லை நாத முதலியார், அவர் மகன் சேனாதிராச முதலியார், அவரது மாணவர் ஆறுமுக நாவலர், நாவலரது மாணவரும் மருகருமான பொன்னம்பலபிள்ளை அவரது மாணவரான மகாவித்துவான் சி.கணேசையர் எனத் தொடர்ந்து இன்றும் கிளை பரப்பி வருகின்றது. இவ்விருட்சத்திற்கான அடிப்படை இருபாலையில் அமைந்திருந்த வித்தியா பீடமேயாகும்.

ச.லலீசன்,
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனப் பயிற்சி செய்பவர்களின் கவனத்துக்கு...

ஆர்.பிரியா
யோக போதனா ஆசிரியர்,
பிரிய யோகா பயிற்சி நிலையம்.

பகுதி - 6

*'' எதை அறிய வேண்டுமோ*
*அதை நாம் அறியாதிருக்கிறோம்*
*அறியப்பட வேண்டியது ஆத்மனே''*

### உட்கட்டாசனம்

செய்யும் முறை:



நேராக நின்றுகொண்டு காலை ஒரு அடி இடைவெளி அகலமாக வைத்துக் கொண்டு படத்தில் காட்டியபடி கைகளை நேராக நீட்ட வேண்டும். உடல் பூராகவும் இளக்கமாக வைத்துக்கொண்டு படத்தில் காட்டியவாறு பாதி உட்கார்ந்த நிலையில் முடிந்த நேரம் நிற்க வேண்டும். கால் மூட்டில் இலேசாக வலி ஏற்படும்போது மெதுவாக உட்கார்ந்து விடவேண்டும்.


பயன்கள்:

ஆசனங்கள் செய்வதற்கு முன்னால், உட்கட்டாசனத்தை முதலில் செய்வதால் உடலில் உள்ள நாடி, நரம்புகளுக்கு இளக்கம் கொடுக்கும். அடிவயிறு,தொடைப்பகுதி, பிருஷ்டபாகம் இளக்கம் அடையும். பிற ஆசனங்கள் செய்ய உடல் இலகுவாக அமையும். கால்மூட்டு வீக்கம், மூட்டில் நீர்தேங்கல், வலி, உளைச்சல், வாதம் இவைகள் அனைத்தும் நீங்கும். இவ்வாசனத்தை ஒரு முறை செய்வதால் ஐந்து நிமிடம் நடந்த பயன் கிடைக்கிறது. இவ்வாசனம் ஒரு முறை செய்தால் போதும்.

*'' உங்களுக்கு நீங்கள் உண்மையாயிருங்கள்- இந்த*
*உலகத்துக்கே உண்மையானவராகிவிடுவீர்கள்.*
*உண்மையுள்ளவர் யோகத்தில் உயர்வார்- தாம்*
*எண்ணியதெல்லாம் எண்ணியவாறே பெறுவார்.''*

### பத்மாசனம்

செய்யும் முறைகள்:



இடது காலை வலது தொடையிலும் வலது காலை இடது தொடையிலும் மாற்றிப் போடவும். கால் மூட்டுக்கள் இரண்டும் தரையைத் தொடவேண்டும். குதிக்கால்கள் அடிவயிற்றுப் பகுதியை தொடும்படியாக அமைக்கவும். முதுகெலும்பை நேராக நிமிர்த்திக் கம்பீரமாக நிமிர்ந்து உட்கார வேண்டும். இந்நிலையில் இருந்து தியானம் செய்யலாம். தியானம் செய்யும் போது கைகள் சின்முத்திரையாகவும், பார்வை மூக்கின் நுனியிலும் இருக்கவேண்டும். ஆரம்ப காலத்தில் சில வினாடிகள் இருந்தால் போதுமானது. இந்த ஆசனம் சிலருக்கு வராது. அவர்கள் தினமும் தங்கள் உணவு வேளையிலும், பிரார்த்தனை வேளையிலும் நிலத்தில் உட்கார்ந்து ஒவ்வொரு காலையும் மாற்றி மாற்றிப் போட்டு வந்தால் இவ்வாசனம் இலகுவில் வந்துவிடும்.

பயன்கள்:

அடிவயிற்றுப் பகுதிக்கு இரத்தோட்டம் அதிகமாகும். நன்றாகப்பசி எடுக்கும். வாதநோய் நீங்கும். மன ஒருமைப்பாட்டுக்கு ஒரு சிறந்த ஆசனம். இதில் இருந்து ஜெப, தவங்கள் செய்யலாம். இந்நிலையில் இருந்துகொண்டு நாடிசுத்தி, பிராணாயாமம் செய்யலாம். யோகமுத்திரா, உத்தீதபத்மாசனம் போன்ற ஆசனம் செய்வதற்கு இந்த ஆசனம் பிரதானமாகப் பழகியிருக்க வேண்டும்.

*'' எந்த எண்ணம் அமைதி தருமோ*
*அதைத் தழுவிக் கொள்ளுங்கள்.*
*அமைதியைக் குலைக்கும்*
*எண்ணத்திலிருந்து*
*நழுவிச் செல்லுங்கள்- அதை*
*உதறித் தள்ளுங்கள்''*

### யோகமுத்திரா

செய்யும் முறை:

முதலில் பத்மாசன நிலையில் இருந்து கொண்டு பின்புறத்தில் கைகளைக் கட்டிக் கொள்ளவும். நாடி நெஞ்சைத் தொடும்படியாக வைத்துக் கொண்டு மெதுவாக மூச்சை வெளியே விட்டவாறு முன்நெற்றி தரையில் தொடும்படி மெதுவாகக் குனியவும். சில வினாடி இந்நிலையில் இருந்தபின் தலையை நேராக முன்போல் நிமிர்த்தவும். நிமிரும்போது மூச்சை உள்ளுக்கு இழுக்கவும். பத்மாசனம் போட முடியாதவர்கள் சுகாசனத்தில் இருந்து கொண்டும் செய்யலாம். ஒரு முறைக்கு இருபது வினாடியாக ஐந்துமுறை. செய்யலாம். தரையை நெற்றியால் தொட முடியாதவர்கள் முடிந்த அளவு முயற்சித்து விட்டு விடவும். தொடர்ந்து செய்து வந்தால் சில நாள்களில் முழுமையான நிலையை அடையலாம்.



பயன்கள்:

முதுகுத்தசை, எலும்புகள், வயிற்று உறுப்புக்கள் புத்துணர்வு பெறும். கல்லீரல், மண்ணீரல் அழுத்தமடைந்து நன்கு வேலை செய்யும். மலச்சிக்கல் நீங்கும். தாது இழப்பு, பலக்குறைவு நீங்கும். நீரிழிவு நோய் நீங்கும். தொந்திகரையும். முதுகெலும்பு நேராகும். அஜீரணம் நீங்கும். நுரையீரலிலுள்ள நோய்க்கிருமிகள் அற்றுப்போகும். பெண்களின் மாதவிடாய் நோய்கள் நீங்கும். அறுவைச் சிகிச்சை செய்திருந்தால் ஆறு மாதம் இவ்வாசனம் செய்யக்கூடாது.

*(இன்னும் வளரும்)*

இந்த ஆசனங்களை தகுந்த குருவிடம் பயின்ற பின் செய்வதே சாலச்சிறந்தது

# கெடுவான் கேடு நினைப்பான்

உடல் நலமின்றி படுத்துவிட்டது காட்டுராஜாவான சிங்கம். ஒவ்வொரு விலங்காக வந்து துக்கம் விசாரிப்பதும் போவதுமாக இருந்தன. ஓநாய்தான் ராஜாவுக்குக் கூடவே இருந்து மருந்தும், சாப்பாடும் கொடுத்து பராமரித்து வந்தது. ஓநாய்க்குப் பிடிக்காத நரி ஒன்று அந்தக் காட்டில் இருந்தது. பக்கத்துக் காட்டுக்குப் போயிருந்த அதற்கு, ராஜாவுக்கு உடம்பு சரியில்லாமல் போனது தாமதமாகத்தான் தெரிந்தது. கடைசியாக ராஜாவைப் பார்க்க வந்தது. நரி வருவதைக் கண்ட ஓநாய்'' எல்லோரும் உங்களை வந்து பார்த்துட்டாங்க ராஜா! ஆனா, அந்த நரிப் பய மட்டும் வரவேயில்லை. உங்களுக்கு உடம்பு சரியில்லாத இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கிட்டு, உங்களை விரட்டிட்டு அவன் ராஜாவாகப் பார்க்கிறான்.'' என்றது.






''அவன் எங்கே இருந்தாலும் இன்னிக்கு அவனை கொன்னுடறேன்'' என்று சத்தம் போட்டது. குகை வாசலில் நின்ற நரியின் காதில் இது விழவும், அப்படியே தப்பித்து ஓடப் பார்த்தது. ஆனால், ஓநாய் அதைத் துரத்திப் பிடித்து,சிங்கத்தின் முன்னால் கொண்டு வந்து நிறுத்தியது. '' என்ன தைரியம் உனக்கு? என்னை வந்து பார்க்கக் கூட நேரமில்லாமல் அப்படி என்ன வேலை'' என்று உறுமியபடி சிங்கம் எழ,'' இல்லை ராஜா! நான் சும்மா ஊர் சுத்தலை, உலகத்துல இருக்கிற எல்லா வைத்தியர்களையும் போய்ப் பார்த்து உங்களுக்கு என்ன மருந்து தரலாம்னு விசாரிச்சுட்டு வந்தேன். அதுதான் லேட்!'' என்றது நரி பணிவாக.

சிங்கம் நிதானித்து. ''அப்படி என்ன மருந்து சொன்னார்கள்?'' என்று கேட்டது. பக்கத்திலிருந்த ஓநாயை ஓரக் கண்ணால் பார்த்தபடி,''ஒரு ஓநாயின் தோலை எடுத்துப் போர்த்திக் கொண்டால் உங்களுக்கு உடனே குணமாகிவிடுமாம் ராஜா'' என்றது நரி.

அடுத்த நிமிடமே ஓநாயின் மீது பாய்ந்தது சிங்கம். ஓநாயின் கெட்ட புத்திக்கு வைத்தியம் செய்தது!

# பாம்பின் விஷம் குடித்தால் இறப்பு உண்டா?



எந்த ஒரு விஷத்தையும் மனிதன் குடித்தால் இறந்து போவான். ஆனால் பாம்பின் விஷத்தைக் குடித்தால் மனிதன் இறந்து போக மாட்டான். அதே நிலையில் பாம்பு கடித்தால் மனிதன் இறந்து போய்விடுகிறான். பாம்பின் விஷம் பாம்பின் செரிமானத்திற்கு உதவும் ஒரு செரிமான நீர்தான். இதை நாம் குடித்தாலும் வழக்கமான உணவுப் பொருள்களைப் போன்றே செயல் நிகழ்த்தும். ஆனால் இந்த விஷமானது இரத்தத்தில் கலக்கும் போது தான் நஞ்சாகி மனிதனின் உயிருக்கு உலை வைக்கிறது. மற்றபடி பாதிப்பு இருக்காது. நல்ல பாம்பு கடிபட்டவரின் காயம்பட்ட பகுதியை, மன வலிமை மிக்கவர்கள் தங்கள் வாயால் உறிஞ்சி விஷத்தை துப்பிவிடுவார்கள். அவர்களை அந்த விஷம் பாதிப்பதில்லை. ஆனால் அவ்வாறு உறுஞ்சுபவர்களுக்கு வாயில் புண்கள் எதுவும் இருக்கக் கூடாது. புண்கள் இருந்தால் விஷம் இரத்தத்தில் கலந்து விடும். ஏன் ஒரு நச்சுப்பாம்பு இன்னொரு பாம்பைக் கடித்தால் கூட கடிபட்ட பாம்பு இறந்து போகும்.

# ராமராஜ்யத்தில் நகைச்சுவை

அப்போது டாக்டர் ராதாகிருஷ்ணன் குடியரசுத்துணைத் தலைவராக இருந்தார். அந்தச் சமயம் ராஜ்யசபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் அவர் தலைமை தாங்கினார்.

இந்தியாவிலிருந்து ஏராளமான குரங்குகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள் என்று ஒரு பிரச்சினை எழுந்தது.

ஓர் உறுப்பினர் எழுந்து '' நமது நாட்டில் இராம ராஜ்யம் ஏற்பட வேண்டும் என்று பாடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் எல்லாக் குரங்குகளையும் இப்படி ஏற்றுமதி செய்துவிட்டால், குரங்குகள் இல்லாமல் எவ்வாறு இராம ராஜ்யம் ஏற்படக் கூடும்?'' என்று கிண்டலாகக் கேட்டார்.



அவர் பேச்சுக்குப் பதில் அளிக்கும் விதமாக ஓர் அமைச்சர்,

'' நம் நாட்டில் குரங்குகளுக்குப் பஞ்சமில்லை. போனது போக இன்னும் அதிக அளவில் குரங்குகள் நம் நாட்டில் இருக்கின்றன'' என்றார்.

சபைக்கு தலைமை வகித்துக் கொண்டிருந்த இராதாகிருஷ்ணன் எழுந்து பின்வருமாறு பேசினார்.

'' அமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் இருக்கும் உறுப்பினர்களைப் பற்றி அவ்வாறு பேசியிருக்க மாட்டார் என்று நான் நினைக்கிறேன்''

அதைக் கேட்ட சபையில் இருந்த அனைவரும் தம்மை மறந்து சிரித்தனர்.

*(சொன்னவர் : ரி.என்.சுகி.சுப்பிரமணியம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைசிறந்த தந்தைகள்

01.கணனிப் பொறியின் தந்தை - சார்ள்ஸ் பாபேஜ்
02. செல்லிடத் தொலைபேசியின் தந்தை - மாட்டின் கூப்பர்
03. பொருளாதாரத்தின் தந்தை - அடம் சிமித்
04. துப்பறியும் நாவல்களின் தந்தை - எட்கர் அலன்போ
05. தொலைபேசியின் தந்தை - அலெக்சாண்டர் கிரகாம்பெல்
06. மருத்துவத்தின் தந்தை - ஹிப்போகிரட்டஸ்
07. இயற்பியலின் தந்தை - சேர் ஐசாக் நியூட்டன்
08. சோதனை அறிவியலின் தந்தை - ஆக்கிமிடீஸ்
09. நவீன வேதியலின் தந்தை - அல்பேர்ட் ஐன்ஸ்டீன்
10. விண்வெளியின் தந்தை - கான்ஸ்டன் சியேஸ்

**யோ. பிருந்தனா**
ஏழாலை மகா வித்தியாலயம்.

## அன்னை



உந்தப்பட்ட
உயிர் அணுவை
உடலாக்கினாள்- தன்
உதிரத்தைப் பாலாக
உருமாற்றினாள்- இவள்
உயிர் வாழ அதைத் தினம்
ஊட்டினாள்
ஊர் போற்றும்
உத்தமனாய்
உருவாக்கினாள்
இத்தனையும் செய்தவளை
தாயென்பதா -இல்லை
நான் கைதொழும்
தெய்வமென்பதா?

**தாமிழினி**
பொலிகண்டி.

## தோழி

ஆயிரம் வார்த்தைகள்
பேசத் துடித்தேன்
உன்னைக் காணாத போது.....

ஒரு வார்த்தை கூட
பேச முடியவில்லை- உன்னை
நேரில் பார்த்த போது

புன்னகை மட்டும்
என் மொழியானது
ஏனடி என் தோழி.

**த.தர்சினி**
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.



## கேள்விக்கு என்ன பதில்?-75

11மொழிகளை ஆட்சி மொழியாகக் கொண்டு செயற்படும் நாடு எது?
(சரியான விடையை 12.06.2010 இற்கு
முன்னர் அனுப்பிவைக்கவும்).

கேள்விக்கென்ன பதில்?- 73இன் சரியான விடை
**சுவிற்சர்லாந்து.**

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் **'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங் கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
:-..........................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# சூரியன் ஒரு முழுக்கோளம் இல்லை



## இளவல்கள் வட்டம்

சூரியன் ஒரு முழுக்கோளம் என்கிற நம்பிக்கை அண்மையில் தகர்க்கப்பட்டிருக்கிறது. சூரியனின் கோளத்தன்மையை நாசா விஞ்ஞானிகள் அண்மையில் துல்லியமாக அளந்துள்ளனர். இப்படி அளவீடு செய்வதற்கு விண்தொலைநோக்கி பயன்பட்டுள்ளது. சூரியப் புள்ளிகள் தீவிரமாக இயங்கும் நாள்களில் சூரிய நடுக்கோட்டின் ஆரம், துருவ அச்சின் ஆரத்தைக் காட்டிலும் சற்றுப் பெரியதாக இருக்கிறதாம். சூரியனைச் சுற்றிலும் பழத்தோல் போன்ற ஒரு பொருள் உருவாவதால் துருவப் பகுதிகளில் நசுங்கிப்போன கோளமாக சூரியன் தோற்றமளிக்கிறதாம். சூரியனின் இடுப்புச் சற்று பருத்திருக்கிறது என்பதுதான் இதன் பொருள்.

இந்தப் பழத்தோல் பதுக்கம் காரணமாக சூரியன் ஒரு முழுமையான கோளம் இல்லை என்கிற கருத்து உறுதிப்படுகிறது. சூரியனின் தீப்பிழம்புகளை ஆராய்வதற்காக 2002இல் விண்தொலைநோக்கி ஏவப்பட்டது. எக்ஸ் கதிர்களையும், காமா கதிர்களையும் பயன்படுத்தி இந்த விண்தொலைநோக்கி அளவீடுகளைச் செய்துள்ளது. விண்மீன்களில் சூரியன் மட்டுமே மிக அதிகமான ஈர்ப்பு விசையைப் பெற்றிருக்கிறது. சூரியனின் கோளவடிவம் 0.001 சதவீதம் என்று இது நாள் வரையில் நம்பப்பட்டு வந்தது. நிமிடத்திற்கு 15 சுற்றுகள் வீதம் சுழலக்கூடிய விண்தொலைநோக்கியின் துளை வழியாக சூரிய வட்டத்தையும், தீப்பிழம்புகளையும் கண்காணித்தபோது, சூரியன் முழுமையான கோளம் இல்லை என்கிற உண்மை தற்செயலாக அறியப்பட்டுள்ளது.

இந்த பழத்தோல் பதுக்கம் காந்தப்பண்புகளைக் கொண்டதாம். பானையில் கொதிக்கும் நீர்க்குமிழ்களைப் போன்று பிறப்பெடுக்கும் இந்த மெள்ளமெள்ள விண்மீன்களின் அளவிற்கு உருப்பெருக்கம் அடைகின்றனவாம். பூமியைப்போல் இருமடங்கு என்றும் கணக்கீடுகள் காட்டுகின்றன. இவை முழுக்க முழுக்க காந்தப்புல பிளாஸ்மாவால் ஆனவையாம்.

மையத்தில் தோன்றும் காந்தப்புலம் மெதுவாக மேற்பரப்பை அடைகிறது. சூரியனில் ஏற்படும் காந்தப்புல மாற்றங்களால் சூரிய ஈர்ப்பு விசையில் அலைவுகள் ஏற்படுகின்றன. சூரியனின் காந்தப்புல ஏற்றத்தாழ்வுகள், பூமியின் காந்தப்புலத்தை நிச்சயமாகப் பாதிக்கக்கூடியவை.

தொடர்ந்து பல மாதங்களாக, கூகுள் குரோம் பிரவுசர் தன் சந்தையை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 9 இல் புதிய வசதிகளைக் கொண்டுவர மைக்ரோசொப்ட் முயற்சித்துக் கொண்டுள்ளது. எனவே மொஸில்லா தன் பயர்பாக்ஸ் தொகுப்பு 4ஐ, எந்த விதத்திலாவது சிறப்பாக அமைக்கவேண்டும் எனத் திட்டமிட்டு அதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இதன் கட்டமைப்பை வடிவமைக்கும் குழுவின் தலைவர் மைக் பெல்ட்ஸ்நர் இது பற்றி அண்மையில் அறிமுகம் செய்து வைத்துள்ளார்.

பயர்பாக்ஸ் தொகுப்பு 4 மூன்று இலக்குகளை முதலில் நிறுவியுள்ளது. இந்தப் பிரவுசரின் இணையத் தளங்களின் தேடல் வேகம் சூப்பர் பாஸ்ட் ஆக இருக்கவேண்டும். எச்.டி.எம்.எல். 5 மற்றும் பிற தொழில்நுட்பத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் அமைக்கப்படவேண்டும். இந்த பிரவுசரைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் தங்கள் இணையத் தேடலைத் தங்கள் விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொள்ள கூடுதல் வசதிகள் தரப்படவேண்டும். அநேகமாக டேப்கள் அட்ரஸ் பாருக்கு மேலாக அமைக்கப்படலாம். ஹோம்பேஜ் பட்டனுக்குப் பதிலாக, ஹோம்டேப் தரப்படலாம். பயர்பாக்ஸ் 4பிரவுசர் சோதனைத் தொகுப்பு வரும் ஜூன் மாத இறுதிக்குள் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது சரியாக வெளிவரும் நிலையில்,வரும் ஒக்ரோபர் அல்லது நவம்பரில் இறுதித் தொகுப்பு வெளியாகலாம்.மொஸில்லா மட்டுமன்றி, தங்கள் பிரவுசர்களைப் புதுப்பித்து புதியனவற்றைக் கொண்டுவர முயற்சிக்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் பல சவால்கள் முன்னுள்ளன. முதலாவதாக வேகம் இந்தப் பிரிவில் குரோம் மற்றவற்றை முந்திக் கொண்டு தற்போது இயங்குவதுடன், இன்னும் அதனை அதிகப்படுத்தி வருகிறது. எனவே மற்றவர்கள் இதற்கு இணையாகச் செயலாற்றவேண்டும். அனைத்து பிரவுசர்களுக்கும் பல லட்சம் வாடிக்கையாளர்கள் உள்ளனர். திடீரென அதிரடி மாற்றங்களுடன் புதிய பிரவுசர்கள் வந்தால், அவை அனைத்தையும் ஏற்றுக்கொண்டு செயற்பட அவர்கள் தயங்கலாம். மூன்றாவதாக, இப்போது பிரவுசரில் மாற்றங்களைக் கொண்டு வந்தால், அவை பெர்சனல் கணனிக்கு மட்டுமன்றி, கையடக்கத் தொலைபேசிகளுக்கும் நீடிக்கப்பட வேண்டும். இந்தப் பிரிவு வேறு வகையான தொழில்நுட்பத்தினையும் சூழ்நிலைகளையும் கொண்டிருப்பதால் நிறுவனங்கள் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. இணைய அப்ளிகேஷன்களில் தற்போது புதுமையான பல தொழில்நுட்பங்கள் வேகமாகப் புகுத்தப்பட்டு வருகின்றன. இவை அனைத்தையும் உள்ளடக்கியதாகப் புதிய பிரவுசர்கள் உருவாக்கப்படவேண்டும்.


## பயர்பாக்ஸ் 4



### கேள்விக்கென்ன பதில்?- 73 இல் பரிசு பெறுவோர்

1. செ.செந்தூரன், பிரம்படி வீதி, கொக்குவில்.
2. செ.ரவிசாந், குறிஞ்சிக்குமரன் வீதி, வீரமனை, குப்பிளான்.
3. கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமிகோயிலடி, வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**16.11.1991**

* விடுதலைப் புலிகளுடனான போரில் நாம் வெற்றி பெறுவது உறுதி என புதிய இராணுவத் தளபதியாகப் பதவி யேற்றிருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தெரிவிப்பு.
* சமாதான அமைப்புக்கள் சில ஒன்றிணைந்து கனடாவில் ஒழுங்கு செய்திருக்கும் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கான உணவு விநியோகத்தை சீர்செய்வது குறித்த மாநாட்டில் அரசு மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியவை உட்பட பல்வேறு தரப்புப் பிரதிநிதிகளும் பங்கேற்கவிருப்பதாகத் தெரிவிப்பு.

**17.11.1991**

* இலங்கையில் சமாதானத்தையும் அரசியல் ஸ்திரப்பாட்டையும் நிலை நாட்டுவது தொடர்பான வழிவகைகளைக் கண்டறிய அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றக் குழுவின் தலைவராக மங்கள முனசிங்க தெரிவு செய்யப்பட்டார்.
* விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பதில் கடிதம் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேசிய அமைச்சர் தொண்டமான் தொடர்ந்து இவ்விடயம் குறித்து எதிர்க்கட்சிகளுடனும் பேசவுள்ளதாகத் தெரிவிப்பு.

**18.11.1991**

* இனப்பிரச்சினை தீர்வு குறித்த வழிவகைகளைக் கண்டறியும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவ ரான நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்க விடுதலைப் புலிகளின் கருத்தை அறிய யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருப்பதாகத் தெரிவிப்பு.
* வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேர்தல்களை நடத்த அவசியமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு ஏதுவாக இராணுவ நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் என புதிய இராணுவத் தளபதி தெரிவிப்பு.

**19.11.1991**

* இந்திய - இலங்கை கடற்படைகள் ஒன்றோடொன்று தொடர்பு வைத்து தற்போது செயற்படுகின்றன. இது விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்கும் எமது நடவடிக்கைகளை இலகுவாக்கும் என கூட்டுப் படைத் தலைமையகத்தின்தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவிப்பு.

**20.11.1991**

* விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தமிழீழ காவல்துறை நேற்று உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் கொழும்பில் பலதரப்பினருடனும் அமைச்சர் தொண்டமான் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிப்பு.

**21.11.1991**

* மன்னார் மாவட்டம் பள்ளிக்குடாவிலும், பொலன்நறுவ மாவட்டம் சிங்கபுரவிலும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இருவேறு தாக்குதல்களில் 31 பாதுகாப்புப் படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.
* யாழ்.மாவட்டத்துக்கான உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு முதற் தடவையாக இரு கப்பல்கள் காங்கேசன் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிப்பு.

**22.11.1991**

* விடுதலைப் புலிகளுக்கு ஆதரவும் ஊக்கமும் வழங்கினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் தமிழ்நாடு அரசின் முன்னாள் உள்துறைச் செயலர் நாகராஜன் மாநிலப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிப்பு.
* ஒத்திவைக்கப்பட்ட ஆறாவது சார்க் உச்சிமகாநாடு அடுத்த மாதம் கொழும்பில் நடத்தப்படக்கூடிய வாய்ப்பு உருவாகியிருப்பதாக மாலைதீவு வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு.

**23.11.1991**

* சுமார் ஒரு மாதகால இடைவெளி யின் பின்னர், நேற்று மீண்டும் குடாநாட்டில் விமானக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிப்பு.
* யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான முழுப் பொருள்களையும் சிரமமின்றி அனுப்பவேண்டுமானால் ஆனையிறவு தரைப்பாதை பயன்படுத்த வேண்டும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சரித்த ரத்வத்தை தெரிவிப்பு.

**24.11.1991**

* விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 42 படையினரையும் சந்திக்க அவர்களது உறவினர்கள் சுமார் 75 பேர் மட்டுமே இங்கு அழைத்துவரப்படுவர்என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவினர் தெரிவிப்பு.

**25.11.1991**

* அரசுக்கு எதிரான தென்னிலங்கை அரசியல் அணிகள் சிறிமாவோ, சந்திரிகா, காமினி திஸநாயக ஆகியோர் தலைமையில் ஓரணியாகவும், அனுரா பண்டாரநாயக, அத்துலத்முதலி ஆகியோர் தலைமையில் மற்றோர் அணியாகவும் பிளவுபட்டுச் செயற்படும் சிக்கல்நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிப்பு.
* சார்க் உச்சி மாநாட்டை விரைவில் கொழும்பில் நடத்த சார்க் அமைப்பின் 7 அங்கத்துவ நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிப்பு.

**26.11.1991**

* விடுதலைப் புலிகள் இராணுவத் தினர் மீது புதிய தாக்குதல்களை நடத்தக் கூடும் எனக் கருதியே யாழ்.மாவட்டத்தில் காலவரையறையற்ற ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு.
* மாவீரர் நாள் இன்று நள்ளிரவு அஞ்சலி மற்றும் நினைவுச் சுடர் ஏற்றும் நிகழ்வுகளுடன் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிப்பு.

**27.11.1991**

* அரசுடன் சமாதான வழிமுறையில் சமரசப் பேச்சுக்களை நடத்த விடுதலைப் புலிகள் தயாராய் உள்ளதாக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு.

**28.11.1991**

* தரையில் மட்டுமல்லாமல், கடலி லும் எதிரிப்படையை நேருக்குநேர் எதிர்கொள்ள விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக விடுதலைப் புலிகள் அமைப்பின் கடற்படைத் தளபதி சூசை தெரிவிப்பு.
* தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் கொலை வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருந்ததாகத் தெரிவிப்பு.

**29.11.1991**

* வவுனியாவின் எல்லைப்புறக் கிராமம் மாமடுவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.
* பொலன்நறுவ - மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லைப் புறத்தில் கடந்த இரு மாதங்களில் மட்டும் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.

**30.11.1991**

* அமைதியை தேடும் பணியின் போது வடக்கு-கிழக்கு மாகாணசபைக்குகூடிய அதிகாரங்களை வழங்க வேண்டி நேரிடலாம் என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.
* வடமாகாணத்துக்கு மின்சார விநியோகத்தை மேற்கொள்ள விதிக்கப்பட்டிருந்த தடைகள் நேற்று முதல் கூட்டுப் படைத் தலைமையகத்தால் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

# போனில் இணையப் பாவனை தடை: இறுதித் தீர்மானம் வெள்ளிக்கிழமை!

கொழும்பு, ஜூை 03

கையடக்கத் தொலைபேசி ஊடாக பயன்படுத்தப்படுகின்ற இணையத்தளங்களை தடை செய்வது சம்பந்தமாக, நாளை வெள்ளிக்கிழமை பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவிற்கும் கையடக்கத் தொலைபேசி வழங்குநர் நிறுவனத்திற்கும் இடையில் பேச்சு இடம்பெறவிருக்கிறது என பொலிஸ் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு தெரிவித்துள்ளது.

கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களிடமிருந்து வாக்கு மூலங்களைப் பெற்று அதனை நீதிமன்றத்தில் அறிக்கையாகச் சமர்ப்பிக்கவுள்ளனர் எனவும் பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இலங்கையில் கையடக்கத் தொலைபேசி ஊடாக 40 இணையத்தளங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என பொலிஸ் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு தெரிவிக்கின்றது. (சி)

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

தபால் மூலம்

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1" Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி :10.06.2010

லங்கா அக்கடமி தொழில்நுட்பக் கற்கைகள் (PVT) Ltd
அனுமதிபெற்ற சான்றிதழ் ISO தராதரம்

கப்பலில் வேலை செய்வதற்குத் தேவையான Steward தரத்திலான CDC சான்றிதழ் பயிற்சி நெறிக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம் : 14.06.2010

மிகக்குறைந்த கட்டணத்துடன் 30 நாள்களில்



கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்கள் மூலமோ அன்றி தபால் மூலமோ உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

தொ.பே: 0262224521, 0714157002, 0774659362.
No.28, Lower Road, Orr's Hill, Trincomale

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha
01.06.2010
அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2247

வெற்றி எழுத்து K
வெற்றி எண்கள் 8 0 0 0 8 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K | 8 | 0 | 0 | 0 | 8 | 2 | ரூபா.14,612,698/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 8 | 0 | 0 | 0 | 8 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 0 | 0 | 0 | 8 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | | | | 0 | 0 | 8 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 124 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 8 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1204 |
| 5 பரிசுகள் | | | | | | 8 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 12072 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 119614 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 8 | 0 | 0 | 0 | 8 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 09 |
| 8 பரிசுகள் | | 8 | 0 | 0 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 113 |
| 9 பரிசுகள் | | 8 | 0 | 0 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1213 |
| 10 பரிசுகள் | | 8 | 0 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12030 |
| 11 பரிசுகள் | K | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 47780 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 13,124,880.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 14,628,753.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
2/42 ... வீதி கொழும்பு 0. தொலைபேசி: 2470662,4607000, Hotline: 2433631 மின்னஞ்சல் www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலகத்தின் கூடைப்பந்தாட்டம்; யாழ்.,நல்லூர் பிரதேச செயலகங்கள் சம்பியன்!


நல்லூர் பிரதேச செயலக ஆண்கள் அணி.


யாழ்.பிரதேச செயலக பெண்கள் அணி.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வந்த ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ்.பிரதேச செயலக அணியும், ஆண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணியும் சம்பியனாகின.

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்.பிரதேச செயலக அணி மோதியது.

இதில் யாழ்.பிரதேச செயலக அணி தன்னை எதிர்த்து விளையாடிய நல்லூர் பிரதேச செயலக அணியை 35:26 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டு சம்பியனாகியது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது.

இதில் நல்லூர் பிரதேச செயலக அணி, தன்னை எதிர்த்து விளையாடிய யாழ். பிரதேச செயலக அணியை 65:54 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டு சம்பியனாகியது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அதிபர் திருமதி பொன்னம்பலம் கலந்து கொண்டார். (6-23)

## யாழ். செயலகத்தின் வலைப்பந்தாட்டம்; தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியன்!

வலி.வடக்கு,ஜூன் 3

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு, யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை எந்த அணி வெற்றிபெறும் என்று தெரியாத அளவுக்கு இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்டம் ஆரம்பமாகி நிறுத்தப்படும் வரை இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றபோதிலும் இடையில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி போடவேண்டிய பந்துகளை கூடைக்கு வெளியால் போட்ட நிலையில் ஆட்டம் நிறுத்தப்படும்போது 12:10 புள்ளிகள் என 2 புள்ளிகள் முன்னிலையில் சண்டிலிப் பாய் பிரதேச செயலக அணி முன்னணியில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒரு அணிக்கு மற்றைய அணி பெரும்சவால் என்றநிலையில் காணப்பட்டது.

இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்று ஓர் அணியை மற்ற அணி மாறி மாறி வெற்றிபெற்று வந்த நிலையில் இறுதி ஐந்து நிமிட இடைவெளியில் தொடர்ந்து 6 புள்ளிகளை தெல்லிப்பழை பிரதேச செயலக அணி பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 18:11 புள்ளிகள் என காணப்பட்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 28:23 புள்ளிகள் என சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று யாழ்.மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (6-86)

## நவாலி சென்றொக் வி.க. நடத்தும் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 3

நவாலி சென்றொக் விளையாட்டுக் கழகமும் நவாலி இளைஞர்களும் இணைந்து நடத்தும் மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறவுள்ளன.




இதில் நவாலி ஜே/136,134 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 25 வயதுக் குட்பட்ட ஆண்கள், பெண்களுக்குமான போட்டிகளும்-

மாவட்ட ரீதியான சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புகின்ற போட்டியாளர்கள் போட்டிகள் நடைபெறுகின்ற தினமான எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

போட்டிகள் தொடர்பான மேலதிக விவரங்களை அறிந்து கொள்ள விரும்பு கின்றவர்கள் நவாலி, சென்றொக் விளையாட்டுக் கழகத்துடன் தொடர்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (6-9)

## பொன் விழாவை ஒட்டி விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 3

பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தின் பொன்விழாவை முன்னிட்டு நடைபெறவுள்ள போட்டிகளில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.மாவட்ட வீர, வீராங்கனைகளுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி, ஆண்களுக்கான மரதன் ஓட்ட நிகழ்வுகள், 50 வயதிற்கு மேற்பட்ட உள்ளூர் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி, உள்ளூர் இளைஞர்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டிகள் ஆகியன இடம் பெறவுள்ளன.

14 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு பண்டத்தரிப்பு பட்டினசபை கலட்டி மைதானத்தில் மெய்வன்மைப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன. (6-23)

## வீரர்கள், பயிற்றுவிப்பாளர்களுக்கு இலங்கை கிரிக்கெட் சபையின் இருநாள் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இலங்கையின் சகல மாவட்டங்களிலும் கிரிக்கெட்டில் அபிவிருத்தியை மேற்கொள்ளும் பொருட்டு இலங்கை கிரிக்கெட் சபை நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் பாடசாலை மாணவர்களுக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கும் பயிற்சி முகாம் ஒன்றினை நடத்தவுள்ளது.

இலங்கை கிரிக்கெட்சபைத் தலைவர் டி.என்.டி.சில்வா, செயலாளர் நிசாந்த ரணதுங்கா ஆகியோர் இப்பயிற்சி முகாமில் கலந்துகொள்ளவுள்ளனர்.

கிரிக்கெட் அணியிலுள்ள யாழ்.மாவட்டப் பாடசாலைகள் 18 இல் இருந்தும் வீரர்கள் நான்கு பேர், பயிற்றுவிப்பாளர்கள் இருவர் என தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

முதல் கட்டமாக கல்லூரி மாணவர்களுக்கு இரண்டு வீரர்களுக்கு வேகப்பந்து வீச்சும் இரண்டு வீரர்களுக்கு சுழல் பந்து வீச்சுப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி முகாமில் பயிற்சிகளை இலங்கை கிரிக்கெட்டின் பயிற்சியாளர் பிரிவுப் பொறுப்பாளர் மல்கம் பெரேரா தலைமையில் வரும் அனுஷிய சமரநாயக்கா வேகப்பந்து பயிற்சியையும் பியால் விஜய துங்கா சுழல் பந்து பயிற்சியையும் களத்தடுப்பு பயிற்சியை மனோஜ் விக்கிரமவும் வழங்கவுள்ளார்கள். (6-86)

## மாற்றுத் திறனுடையோரின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன் 3

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகு நடத்தும் மாற்றுத்திறனுடையோருக்கான விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன், கடவுளின் குழந்தைகள் நிறுவனப் பணிப்பாளர் டாக்டர் பி.ஆனந்த குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6)


கல்வி அமைச்சும் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனமும் இணைந்து டி.எஸ்.ஐ.நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமாகாண கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கு நடத்திய பயிற்சி முகாமின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மங்கள விளக்கு ஏற்றுவதை யும் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவரும் பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் பிரதியமைச்சர் டிலான் பெரேரா, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பாடசாலைகள் கரப்பந்தாட்ட சம்மேளனத்தலைவர் நிஹால் பெர்ணாண்டோ ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

அமைச்சர் டிலான் பெரேரா ஒரு தொகுதி உபகரணங்களை மாவட்ட கரப்பந்தாட்ட சங்க செயலாளரிடம் கையளிப்பதை படங்களில் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் அமைந்துள்ள யு.என்.ஐ.ஐசிரி கம்பஸ் கணனி நிறுவனத்தில் யாழ்.மாணவர்களுக்கு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் உடனடி அனுமதி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் யு.என்.ஐ. கணனி நிறுவனத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதிகளான ஐரோப்பிய கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் தலைவர் எஸ்.பம்விஸ், லண்டன் நொடிக்கம் கல்லூரித் தலைவர் எஸ்.ப.கரன் மற்றும் யு.என்.ஐ.ஐசிரி கம்பஸ் இயக்குநர் செ.செல்வதாசன் ஆகியோர் நேர்முகப் பரீட்சை நடத்துவதற்குதயாராக இருப்பதையும் மாணவன் ஒருவனுக்கு எஸ்.பம்விஸ் நேர்முகப் பரீட்சை நடத்துவதையும் இரு படங்களில் காணலாம். (50)

# அங்கவீனர்களுக்கு 3மாதக் கொடுப்பனவு

நாவற்குழி, ஜூன் 3


அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலக யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்களிலும் மாதாந்த உதவித் தொகை 3000 பெறுபவர்களுக்கான நிதி ஒதுக்கீட்டை அனுப்பிவைத்துள்ளது.

இந்நிதியிலிருந்து ஏப்ரல்,மே, ஜூன் மாதங்களுக்குரிய கொடுப்பனவை பிரதேச செயலகப் பிரிவு ஒன்றில் 7 பேர் வீதமாக மொத்தம் 105 பேர் பெறவுள் ளனர்.

கடந்த 2006ஆம் ஆண்டு முதல் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மாதாந்த உதவித் தொகையை வறிய, அங்கவீனமுற்ற பயனாளிகளுக்கு வழங்க பிரதேச செயலர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (1-121)

## மரண அறிவித்தல்



### திரு. சண்முகம் வேலாயுதம்

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாவும் இல 28-4/2, 1வது சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சண்முகம் வேலாயுதம் அவர்கள் 01.06.2010 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலம் சென்ற சண்முகம் வள்ளிப்பிள்ளையின் மூத்த மகனும், காலம் சென்ற திருமதி. செல்லம்மா அவர்களின் அன்பு கணவரும், மகேந்திரன் (லண்டன்), சிவநேசதேவி (கொழும்பு), வரதராஜா (ஜெர்மனி), நந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ராகதேவி, விக்னேஸ்வரன், சிவராணி, கோகிலவேணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், துரைசிங்கம் கஜன், பிரியதர்சினி, வானுஷன், வாகிஷன், சூரியா, டேபேகா, ராகுல் ஆகியோரின் அன்பு பேரனும், காலம் சென்றவர்களாகிய கந்தசாமி, ராசையா, துரைசிங்கம், பாலசந்திரன், அருணகிரி, மகாலச்சுமி, ரேவதி, செல்வலக்சுமி மற்றும் திருமதி செல்வம் மாணிக்கவாசகர் (கொட்டாஞ்சேனை) ஆகியோரின் மூத்த சகோதரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக 03.06.2010 அன்று காலை 9.00 மணி தொடக்கம் கல்கிசை மஹிந்த மலர்சாலையில் வைக்கப்பட்டு, 3.00 மணி அளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று மாலை 5.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
திருமதி. வி. சிவனேசதேவி (மகள்)
011 - 2506918

# இறுவட்டு வெளியீடு

அல்வாய், ஜூன் 3

பிரபல சொற்பொழிவாளர் பொன். சுகந்தனின் இந்துமத விரதங்கள் என் னும் தெய்வீக உரையின் இறுவட்டு வெளியீடு இன்று வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பொலிகண்டி மருதம்புலம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயதின் கும்பாபிஷேக தினமான இன்று வியாழக்கிழமை சிறப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ச.வைத்தியநாதன் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கி.கதிர்காமநாதன் இறுவட்டை வெளியீட்டுவைக்க தொழிலதிபர் ந. பாஸ்கரசோதி பெற்றுகொள்வார். (1-36)

# நீரிழிவு மருத்துவ முகாம்

வலி.வடக்கு, ஜூன் 3

'சைடஸ்' நிறுவனத்தின் ஆதரவுடன் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் துணைவி மருத்துவ நிலையத்தினால் நீரிழிவு மருத்துவ முகாம் ஸ்ரீகாமாட்சி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது.


இம் மருத்துவ முகாமில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டதுடன் இரத்தப் பரிசோதனையையும் மேற்கொண்டுள்ளார்கள்.

நீரிழிவு மருத்துவ முகாம் நடத்தப்பட்டதன் மூலம் அப்பகுதியில் உள்ள பொது மக்கள் பலர் நன்மை அடைந்துள்ளதாக மருத்துவ முகாமில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தார்கள். (1-86)

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் சண்முகரட்ண சர்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியர், புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி )



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியக்குருக்கள் சண்முகரட்ண சர்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர், சோமாஸ்கந்தக் கல்லூரி) நேற்று (02.06.2010) புதன் கிழமை அதிகாலை 3 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியக்குருக்கள் - லட்சுமி அம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தர ஐயர் -இராஜலக்ஷ்மி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகலட்சுமி அம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திருமலைசாமிசர்மா, சாரதாம்பாள் மற்றும் கமலாம் பாள், ஸ்ரீதரக்குருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடராஜசர்மா,லோகேஸ்வரசர்மா, வரதராஜசர்மா ஆகியோரின் அன்பு அத்தானும் ரவிச்சந்திரசர்மா (பிரான்ஸ்), உமா, நிர்மலா, மாலினி, கிரிஜா, ரோகினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஹம்சா (பிரான்ஸ்), பிரேமச்சந்திரக் குருக்கள், உமாசுதசர்மா, காலஞ்சென்ற வெங்கடகிருஷ்ண சர்மா (குட்டி ஐயா), ஜெகதீஸ்வரசர்மா ஆகியோரின் அன்பு மாமாவும் நடராஜசர்மா (கனடா), மங்களம்மாள், காலஞ்சென்ற வைத்தீஸ்வரஐயர் மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கௌதமன், விசாகன், சாயிஆர்த்தி, நர்த்தன சர்மா, பார்கவி, சதீஸ், பிரதீஸ், ஜெகதீஸ், ஜீவிதா, துளஸ்யா, தனுஜா, ஹம்சியா,சபானியா, அஸ்வின் ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2010) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கோப்பாய் வடக்கில் உள்ள அவரின் உதயகிரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.பிரேமச்சந்திரக் குருக்கள்

''உதயகிரி''
கோப்பாய். வடக்கு,கோப்பாய்.
தொ.பே: ரவிச்சந்திரசர்மா (பிரான்ஸ்): 0033145432957
கோப்பாய்: 0324917824, 0779583912.

# கொடிகாமம் மக்கள் வங்கிக்கிளை கணனி மயப்படுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜூன்3

மக்கள் வங்கியின் கொடிகாமம் கிளையின் நீடித்த கருமபீட செயற்பாடுகள் கணனிமயப் படுத்தப்பட்டுள்ளன.

கணனிமயப்படுத்தும் ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கிளை முகாமையாளர் எஸ்.சிறிதரன் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன்,சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (1 -207)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 077126[illegible]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 21.10.1939

உதிர்வு: 27.05.2008

திதி: தேய்பிறை ஸப்தமி 03.06.2010

### திருமதி கமலேஸ்வரி கிருஷ்ணசாமி

(கண்மணி ரீச்சர்)

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம், வியாபாரிமூலை)

ஆறுநாலு திங்கள் கடந்ததம்மா - ஆனாலும்
ஆற மறுக்கிறது எம்மனது
அன்பின் திருவுருவே ஊர்போற்றும் உத்தமி நீங்கள்
கணவருக்கு நல்லதோர் மனைவியாய்
பிள்ளைகளுக்கு என்றும் பாசத்தாயாய்
மாணவருக்கு நல்ல ஆசானாய் திகழ்ந்தவள் நீ
காலம் எல்லாம் எமக்கு துணையாய் இருப்பீர்கள்
என நாம் நினைக்க காலன்
வந்து நம்மை பிரித்தானோ
என்றும் எம் இதயத்தில் நீங்கள் வாழ்கின்றீர்கள்
இறைபதம் எய்திய உங்கள் வாழ்வு
வளம்பெற்று சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(இ-568072)

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள், பெறாமக்கள்.

'செந்தில் அகம்',
வியாபாரிமூலை,பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்

### தம்பையா காராளசிங்கம்



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா காராளசிங்கம் 01.06.2010 செவ்வாய்க் கிழமை மாலை 6 மணியளவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-முத்தம்மா தம்பதியரின் மகனும் செல்வமலரின் கணவரும் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் இராசசிங்கம், சம்பந்தர், இந்திராணி, காலஞ் சென்ற மனோன்மணி ஆகியோரது சகோத ரனும் முருகதாஸ் (ஜேர்மனி), சுனித்தா (கனடா), சிறிதேவி (கொலன்ட்), பிரதீபா (லண்டன்) ஆகியோரது பாசமிகு தந்தையும் பிரிசாந்தி (ஜேர்மனி), சிறிதரன் (கனடா), ரகு (கொலன்ட்), சுதாகரன் (லண்டன்) ஆகியோரது மாமனாரும் அபினேஷ், ரஜானி (ஜேர்மனி), சௌமியா, சஞ்சீவி (கனடா), சாருஜா, தனீஷ் (கொல்ன்ட்), சிரேகா (லண்டன்) ஆகியோரது பேரனும் கமலவேணியம்மா, புஸ்பராணி, பாலசுப்பிரமணியம், பொற்கொடி ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்பு அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (99022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்ஸலை ஒடுக்க கடும் நடவடிக்கை!

## பிரதமர் மன்மோகன் சிங் உறுதி

புதுடில்லி,ஜூன்3

நக்ஸலைட்டுகளை ஒடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நக்ஸலைட்டுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு உறுதிபூண்டுள்ளது - என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார்.

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 2 ஆவது முறையாகப் பதவி ஏற்று ஓராண்டு நிறைவு பெற்றுள்ளதையொட்டி, பிரதமர் மன்மோகன் சிங், தனது அரசின் ஓராண்டு சாதனைகள் அடங்கிய பட்டியல் புத்தகத்தை நேற்றுமுன்தினம் அறிக்கையாக வெளியிட்டார்.

அந்த சாதனைப் பட்டியல் புத்தகத்தில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு -

தீவிரவாதத்துக்கும், மதவாதத்துக்கும் எதிராக அரசு தொடர்ந்து போராடும். தீவிர வாதத்தை வேரோடு ஒழிக்க அரசு உறுதி பூண்டுள்ளது. பல்வேறு இன மக்களும் ஒற்றுமையுடன் வசிக்கும் இந்தியாவை வெறுப்புணர்வு மற்றும் மதவெறியின் மூலம் பலவீனப்படுத்துவதை அரசு ஒரு போதும் அனுமதிக்காது.

நக்ஸலைட்டுகளை ஒடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நக்ஸலைட்டுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் அந்தப் பகுதிகளில் அடிமட்ட அளவில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளவும் அரசு உறுதிபூண்டு இருக்கிறது.

- இப்படி அந்தச் சாதனைப் பட்டியல் புத்தகத்தில் பிரதமர் கூறியுள்ளார்.

## இலங்கைச் சிங்கள மீனவர்கள் அறுவர் கன்னியாகுமரியில் கைதாகி விடுதலை

கன்னியாகுமரியில் சந்தேகத்துக்குரிய முறையில் ஹோட்டலில் தங்கியிருந்த ஆறு இலங்கை மீனவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கன்னியாகுமரி அருகே விவேகானந்தபுரத்தில் ஹோட்டலில், தமிழ் பேசத்தெரியாத சிலர் சந்தேகப்படும் வகையில் தங்கியிருக்கின்றனர் எனக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார், அவர்களை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் தங்கியிருந்த அறையில் இருந்து 13 கத்திகள், 23 வாள்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

விசாரணையில், அவர்கள் ஆறு பேரும் இலங்கையைச் சேர்ந்த லசாம் லக்சன் (வயது- 20), மஹிந்த திலக சூரியலக்ஸன் ரணில் மதுரங்கா (வயது - 27), மொராவக பிரியதர்சன சதிப் (வயது - 26), மிகிந்த சிந்தக்க அப்புகாமி (வயது - 22), மகேஷ் நளின் (வயது-20), ருக்ஷன் சிந்தக்க (வயது-23) என்பதும், இவர்கள் சென்னையில் இருந்து கன்னியாகுமரியில் மீன்களை வெட்டும் வேலைக்காக வந்தனர் என்பதும் தெரியவந்தது.

இவர்களிடம் கடவுச்சீட்டு, விசா உள்ளிட்ட ஆவணங்கள் சரியாக இருந்ததால் பொலிஸார் அவர்களை விடுதலை செய்தனர்.

இந்தியச் செய்திகள்

# 300 விதமான ஆடைகளுடன் அமெரிக்காவில் ரஹ்மானின் மாபெரும் இசை நிகழ்ச்சிகள்

## ரூ. ஒரு லட்சம் விலையுடைய அனைத்து டிக்கெட்டுகளும் விற்றுத் தீர்ந்தன

நியூயோர்க்,ஜூன்3

அமெரிக்காவில் அடுத்த வாரம் முதல் 11 இசை நிகழ்ச்சிகளை ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மான் நடத்துகிறார். அதற்காக, அவருக்கு 300 விதமான ஆடைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. நிகழ்ச்சியின் டிக்கெட்டுக்கு ரூபா ஒரு லட்சம் என நிர்ணயித்த போதிலும் அனைத்தும் விற்றுத் தீர்ந்து விட்டன.

'ஸ்லம்டாக் மில்லியனர்' படத்தின் மூலமாக இரண்டு ஒஸ்கார் விருதுகளை தட்டிச் சென்ற பிரபல இசையமைப்பாள ரான ரஹ்மான், சர்வதேச அளவில் மிகவும் பிரபலமாகி உள்ளார்.

இந்நிலையில், வரும் 11ஆம் திகதி முதல் அமெரிக்காவில் பல்வேறு இசை நிகழ்ச்சிகளை ரஹ்மான் நடத்தவிருக்கிறார்.

நியூயோர்க், வாஷிங்டன் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் ஜூலை 5ஆம் திகதி வரையிலும் 11 இன்னிசை நிகழ்ச்சிகளை நடத்துகிறார். அதன் பிறகு ஐரோப்பிய நாடுகளிலும் ஜூலை 25 ஆம் திகதி லண்டனிலும் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. பாரீஸ் நகரில் ஜூலை 17 ஆம் திகதி அவருடைய இன்னிசைத் திருவிழா களை கட்டுகிறது.

'பொப் இசை உலகின் பேரரசர்' மைக்கேல் ஜாக்சனுக்கு பிறகு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்தளவுக்கு இசைப் பயணம் மேற்கொள்ளும் பெருமையை ரஹ்மான் பெறுகிறார். அவர் இசை நிகழ்ச்சி நடத்தவுள்ள அரங்குகள் அனைத்துமே மிகவும் பிரபலமானவை.

ரஹ்மானின் இசை நிகழ்ச்சிக்கான டிக்கெட்டின் விலை ரூபா ஒரு லட்சம் (ஆயிரம் அமெரிக்க டாலர்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், அனைத்து இசை நிகழ்ச்சிகளுக்கும் டிக்கெட்டுகள் முழுவதும் விற்றுத் தீர்ந்து விட்டன.

மைக்கேல் ஜாக்சனைப் போலவே கலக்கலான 'பள பள' உடையணிந்து மேடையில் ரஹ்மான் தோன்றவிருக்கிறார். எனவே, ரஹ்மான் மற்றும் அவருடைய குழுவைச் சேர்ந்த பாடகர்கள், நடனக் குழுவினர் அனைவருக்கும் 300 விதமான ஆடைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# ஆந்திராவில் குடிதண்ணீர் பிரச்சினை; உதவுமாறு சாயிபாபாவிடம் கோரிக்கை

## புட்டபர்த்தியில் முதல்வர் ரோசய்யா விடுத்தார்



புட்டபர்த்தி, ஜூன்03

ஆந்திர மாநிலத்தில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க உதவும்படி சத்திய சாயி பாபாவிடம் ஆந்திர முதல்வர் ரோசய்யா கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐதராபாத்திலிருந்து ஹெலிகொப்டர் மூலம் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு புட்டபர்த்தி சாயி பாபா ஆசிரமத்திற்கு வந்த ஆந்திர முதல்வர் ரோசய்யா, அங்குள்ள சாய் குல்வந்த் வளாகத்தில் சத்திய சாயி பாபாவைத் தரிசனம் செய்தார்.

ஆசிரமத்தில் 30 நிமிடங்கள் தங்கியிருந்த ரோசய்யாவை, பாபா ஆசீர்வதித்தார். இருவரும் 10 நிமிடங்கள் தனியாக பேசிக் கொண்டிருந்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரோசய்யா, ஆந்திர மாநிலத்தில் பல முக்கிய நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் குடிதண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. அந்தப் பிரச்சினையைத் தீர்க்க உதவும்படி சத்திய சாயி பாபாவிடம் கோரிக்கை விடுத்தேன் எனத் தெரிவித்தார்.

## பங்களாதேஷில் 4மாடிக் கட்டடம் இடிந்து விழுந்தது

டாக்கா,ஜூன்3

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில், செவ்வாய்க்கிழமை நான்கு மாடித் தொடர் கட்டடமொன்று இடிந்து விழுந்தது. இதில் 10 பேர் பலியாயினர். அநேகர் காயமடைந்தனர். இடிபாடுகளுக்குள் இன்னும் பலர் சிக்குண்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தலைநகரிலுள்ள டெஜ்கான் என்னும் பகுதியில் இந்த நான்கு மாடிக் கட்டடம் இடிந்து, அருகிலுள்ள சேரிப்புற வீடுகளின் மீது விழுந்தது. இடிபாடுகளுக்குள் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். மரணித்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இராணுவச் சிப்பாய்களாலும், தீயணைப்புப் படையினராலும் இடிபாடுகளுக்குளிருந்து ஆறு பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் இடிபாடுகளுக்குள் சிக்குண்டிருக்கலாம் என தீயணைப்புப் படை அதிகாரி அப்டஸ் சலாம் தெரிவித்தார்.

# தலிபான்களின் பிடியிலிருந்த பார்கி மடால் மாவட்டம் மீட்பு

## ஆப்கான் - நேட்டோ படைகள் அதிரடி

காபூல்,ஜூன்3

தலிபான் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்த ஒரு மாவட்டப் பகுதியை ஆப்கானிஸ்தான், அமெரிக்க நேட்டோ படைகள் மீட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான் தீவிரவாதிகளை ஒழிப்பதற்காக ஆப்கானிஸ்தான் இராணுவத்தினருடன், அமெரிக்க இராணுவத்தின் நேட்டோ படைகளும் இணைந்து தாக்குதலை நடத்தி வருகின்றன.

இதற்காக ஆயிரக்கணக்கான அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டு ஏனைய இராணுவச் சிப்பாய்களுக்கு உதவி வருகின்றனர்.

இந்த கூட்டுப் படைக்கு சர்வதேச பாதுகாப்பு உதவிப் படை என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்நிலையில், பாகிஸ்தான் எல்லையை ஒட்டி அமைந்துள்ள நுரிஸ்தான் மாகாணத்திலுள்ள பார்கி மடால் மாவட்டப் பகுதி நீண்ட ஆண்டுகளாகத் தலிபான் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது.

கடந்த சில நாட்களாக ஆப்கன், நேட்டோ படைகள் நடத்திய தொடர் தாக்குதலில் ஏராளமான தலிபான்கள் பார்கி மடால் மாவட்டத்தை விட்டு ஓடிவிட்டனர். அந்த இடங்களில் நேட்டோ-ஆப்கன் கூட்டுப் படைகள் தொடர்ந்து குண்டு மழை பொழிந்தன.

இதையடுத்து, பார்கி மடால் மாவட்டம் மீண்டும் ஆப்கானிஸ்தான் இராணுவத்தின் வசம் வந்துவிட்டது. இத்தகவலை ஆப்கானிஸ்தான் இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மெல்ல மெல்ல தலிபான்களை ஆப்கானிஸ்தானிலிருந்து விரட்டியடிப்பதற்காக அமெரிக்க நேட்டோ படைகளும், ஆப்கன் இராணுவப் படைகளும் இணைந்து தாக்குதலை நடத்தி வருகின்றன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் தெற்கு காந்தஹார் மாகாணப் பகுதியை தங்கள் வசம் கொண்டுவந்துவிட ஆப்கன் இராணுவப் படைகள் திட்டமிட்டுள்ளன. இதற்காக அங்கு 1.50 லட்சம் அமெரிக்க நேட்டோ - ஆப்கன் இராணுவச் சிப்பாய்கள் குவிக்கப்படவுள்ளனர் என்றும் இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலக அரங்கில்

# ஜப்பான் பிரதமர் 'திடீர்' இராஜிநாமா



டோக்கியோ,ஜூன்3

ஜப்பான் பிரதமர் யூகியோ கடோயாமா தமது பதவியை நேற்று புதன்கிழமை திடீரென இராஜிநாமா செய்தார்.

யூகியோ கடோயாமா (வயது-63) கடந்த ஆண்டு (2009) செப்ரெம்பர் மாதம் நடை பெற்ற தேர்தலில் 70 சதவீத வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தார்.

இந்நிலையில், ஒகினாவா தீவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தை அகற்றுவது குறித்து தாம் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற இவர் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என இவர் மீது எதிரணியினரால் முறைப்பாடு கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து இடம்பெற்ற கருத்துக்கணிப்பில் மக்களிடம் இருந்த இவரது செல்வாக்கு 20 சதவீதமாகக் குறைந்துவிட்டமை தெரியவந்தது. இதற்கிடையே எதிர்வரும் ஜூலை மாதம் நாடாளுமன்றத்தின் மேல் சபை தேர்தல் நடைபெறவுள்ளது.

இவரது செல்வாக்கு சரிந்துள்ளதைத் தொடர்ந்து பிரதமர் பதவியை இராஜிநாமா செய்யும் படி ஆளும் ஜப்பான் ஜனநாயகக் கட்சி இவருக்குக் கட்டளையிட்டது. அதை ஏற்று யூகியோ கடோயாமா தனது பிரதமர் பதவியை கண்ணீருடன் இராஜிநாமா செய்தார்.

# 11 வயதில் குழந்தை பிரசவித்த மிடில்டன்



லண்டன், ஜூன் 03

உலகிலேயே மிக இளம் வயதில் குழந்தை பெற்ற பெண் தெரசா மிடில்டன் என்பவர் ஆவார். பிரிட்டனைச் சேர்ந்த இவருக்கு இப்போது வயது 16. இவர் 11 வயதில் கர்ப்பமானார். 2006 ஆம் ஆண்டு 12 வயதில் பெண் குழந்தைக்குத் தாயாரானார்.

குழந்தை பிறந்ததும், அது ஒரு குழந்தை இல் லாத பெற்றோரிடம் தத்துக் கொடுக்கப்பட்டது. அதைப் பார்ப்பதற்கு இவர் அனுமதிக்கப்படவில்லை. இதனால் மனம் நொந்துபோன தெரசா, போதைக்கு அடிமையானார். குடிப்பது, போதைப் பொருட்களைப் புகைப்பது என்று வாழ்க்கையை நரகமாக் கிக் கொண்டார்.

இவர் மைனர் பெண் என்பதால் இவரின் புகைப் படத்தை வெளியிட சட்டம் அனுமதிக்கவில்லை. இவருக்கு இப்போது 16 வயதானதைத் தொடர்ந்து இவரது புகைப் படம் வெளியாகியுள்ளது. இவர் தன் குழந்தையை ஆண்டுக்கு இரு முறை பார்ப்பதற்கு நீதிமன்றத்தில் அனுமதி கோரியிருக்கிறார்.

தெரசா ஒரு வைபவத்தில் கலந்துகொண்டபோது இளைஞர் ஒருவருடன் இவருக்கு நட்பு ஏற்பட்டது. இப்பழக்கத்தில் இவர் கர்ப்பமடைந்தார். இவர் 11 வயதில் கர்ப்பமானதை அறிந்து பிரிட்டனே அதிர்ந்து போனது.

''நடந்த சம்பவத்துக்காக நான் வருந்தவில்லை. நான் இன்னும் பெரியவளான பின் என் குழந்தையை கேட்டுப் பெறுவேன்'' என்கிறார் தெரசா மிடில்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**siat ACADEMY** Leads, Creates, Animates.

*MAG NET ACADEMY* இன் ஆதரவில்
SIAT ACADEMY
**Animation** கற்கை நெறியை
பயில ஓர் அரிய வாய்ப்பு...

சர்வதேச தரத்திலான
இக்கற்கைநெறி இலங்கையில்
யாழ் மண்ணில்




MAIN COURSES

1) MASTER SPECIALIST PROGRAM IN 3D ANIMATION - MAYA : 18 Months
2) MASTER SPECIALIST PROGRAM IN 3D ANIMATION - 3DS Max : 18 Months
3) MASTER SPECIALIST PROGRAM IN DIGITAL ART &2D ANIMATION : 12 Months

SHORT TERM COURSES

1) FOUNDATION COURSE IN 2D ANIMATION : 2 Months
2) CERTIFICATE PROGRAM IN ADOBE PHOTOSHOP : 1 Months
3) CERTIFICATE PROGRAM IN ADOBE FLASH : 2 Months
4) CERTIFICATE PROGRAM IN WEB ANIMATION : 4 Months
5) DIPLOMA IN 2D ANIMATION : 6 Months



முக்கிய கற்கை நெறியினை
(Main Course) பயில்பவர்கள்
இறுதி 3 மாதகால பயிற்சியினை
பெங்களூர் (Bangalore) தலைமையகத்தில்
Live Projects-ல்
அனுபவம் பெறுவதற்கான
ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேலதிக தகவல்களுக்கு Ph:~ 0777497186



REGISTRAR
SIAT ACADEMY JAFFNA CENTRE,
NO: 19, N.THANARAJAH BUILDING,
STANLEY ROAD,
JAFFNA

மக்கள் வங்கி, ஸ்ரான்லி கிளை
கட்டட 3ம் மாடி




## 'வண்.மேற்கு வைத்தியசாலை' இன்று திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்.தட்டாதெரு சந்திக்கு அண்மையில் - ஐயனார் கோயில் வீதியில் புனரமைக்கப்பட்ட 'வண்.மேற்கு வைத்தியசாலை'யின் திறப்புவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக 'வண்.மேற்கு வைத்தியசாலை'யின் நிறுவுனரும் வைத்திய நிபுணருமான ரி.கங்காதரனும், கௌரவ விருந்தினர்களாக 'வனிக்கா மெடிக்கல்ஸ்' நிறுவனத்தின் உரிமையாளர் கே.என். இராஜரட்ணம், ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஒ-1)


**தவறிவிட்டது**

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த மகேந்திரன் சரண்யன் என்பவருடைய தே.அ.அட்டை (இல : 920180400 V) பாடசாலை I.C. என்பன நீர்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கு மிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்த வர்கள் பின்வரும் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.

T.P. 0776699550

**காணி விற்பனைக்கு**

இல. 43, அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, உடுவிலில் 8 பரப்பு வெறுங்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவோ, தோட்டம் செய்யவோ உகந்தது.

தொடர்புக்கு : 0714102174 / 0771622770

**Oriflame உங்களை அழைக்கின்றது**

எங்களுடன் இணைவதன் மூலம் கூடிய வருமானம் பெற்றுக்கொள்ளலாம்.

நாளை 04.06.2010 காலை 9.30 மணிக்கு செல்வச் சந்நிதி ஆலய மகளிர் அமைப்பு மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும். அனைவரும் வருக. அனுமதி இலவசம்.

Independent Consultant
ஜெயா முருகதாஸ்சன்.

**ஆச்சார்ய அபிஷேக (குரு பட்டம்ளிப்பு)**

**அழைப்பு**

அன்புடையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களம் மிகு விகிர்தி வருஷம் வைகாசித் திங்கள் 20ஆம் நாள் (03.06.2010) வியாழக்கிழமை ஷஷ்டித்திதியும், அவிட்ட நக்ஷத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 6.50 மணி முதல் 8.41 மணிக்குள் அமைந்த மிதுன லக்ன சுப முகூர்த்த வேளையில்,

வடகோவை
சிவஸ்ரீ பரம முத்துக்குமாரசாமிக் குருக்களின்
துதீய புத்திரனும்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோவில்,
தில்லையம்பதி சிவகாமி அம்மன் கோவில்
நித்திய அர்ச்சகருமான

**பிரம்மஸ்ரீ முத்து குருபரசர்மாவுக்கு**

சமய, விஷேஷ, நிர்வாண தீக்ஷையும் சிவாச்சார்ய அபிஷேகமும் நிகழ நயினை நாகபூஷணி அம்பாள், கோப்பாய் கேணியடி ஆதிவைரவர் சுவாமி இறை திருவருளும், குரு அருளும் பெரியோரின் ஆசியும் அடியார்களின் விருப்பும் கைகூடியுள்ளதால் மேற்படி கிரியை வைபவம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோவிலில் நடைபெற இருப்பதால் அந்தண விப்ர சிரேஷ்டர்கள் விழாவில் கலந்து ஆசி வழங்கியும், அடியார் பெருமக்கள் குரு ஆசி பெற்றேகுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து

தங்கள் நல்வரவை நாடும்.

வரவேற்பாளர்,
சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்,
ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோயில்,
மருதனார்மடம், இணுவில், சுன்னாகம்.
தொ.பே.எண் : 021 300 6698

சிவஸ்ரீ மு.ப. முத்துக்குமாரசாமிக் குருக்கள்,
(பிரதமகுரு. நயினை ஸ்ரீ நாகபூஷணி,
அம்பாள் தேவஸ்தானம்)
ஸ்ரீமதி பர்வதவர்த்தனி.

(99045)

**கிளாலி அருள்மிகு வீரபத்திரர் ஆலய பொங்கல் உற்சவம்**

கிளாலி அருள்மிகு வீரபத்திரர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் 12 வருடங்களின் பின் நாளை (04.06.2010) வெள்ளிக்கிழமை மிக விமரிசையாக கொண்டாடப்பட இருப்பதால் அத்தருணம் உற்சவத்தை சிறப்பிப்பதற்கு சிறப்பு விருந்தினர்களாக



பாரம்பரிய கைத்தொழில்
மற்றும் சிறுகைத்தொழில்
முயற்சி அபிவிருத்தி
அமைச்சர் கௌரவ
கே.என்.டக்ளஸ்
தேவானந்தா

நாடாளுமன்ற குழுக்களின்
பிரதித் தலைவரும்
நாடாளுமன்ற
உறுப்பினரும் ஆகிய
முருகேசு
சந்திரகுமார்
(அசோக் தோழர்)





முன்னாள் யாழ். மாவட்ட
அமைப்பாளரும் நாடாளுமன்ற
உறுப்பினருமாகிய
சில்வேஸ்திரி
அலன்ரீன்
(உதயன் தோழர்)

யாழ்.மாவட்ட
அமைப்பாளர்
கந்தசாமி
கமலேந்திரன்
(கமல் தோழர்)



இவர்களும் இராணுவ உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ள இருப்பதால் நாளை (04.06.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு கிளாலி வாழ் மக்கள் அனைவரையும் கலந்து கொண்டு பொங்கல் உற்சவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கிளாலி, எழுதுமட்டுவாழ். (99033) ஆலய பக்தர்கள்

**திருமணக் CAR (A/C) வாடகைக்கு**



(99039)

தொடர்பு: ரட்ணம், 22, சோமசுந்தரம் அவெனியூ,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 0777903090/ 0215100150

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



பொன்னர் சின்னப்பிள்ளை

மலர்வு:
12★03★1918

உதிர்வு:
05★05★2010

கடந்த (05.05.2010) அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைப்பு வழங்கியும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (04.06.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை, கொடிகாமம். குடும்பத்தினர்.


## பெண்கள் விழிப்புணர்வு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்.பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் ''பெண்கள் அரசியலில் ஈடுபடுதலை ஊக்குவிப்போம்'' என்னும் தலைப்பிலான விழிப்புணர்வு நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி தயா பீரீஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஒ-1)


**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் ஆசிரியர் M.J.நெல்சன்
அவர்களின் அன்புத் தாய்

**லூர்து மரியலூவிசா**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

(99047)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நெல்சிப்' அபிவிருத்தித் திட்டப் பணிகள்:

# யாழ்.மாநகர சபை எதிரணி உறுப்பினர்களின் ஆலோசனை பெறப்படாதது சரியா, முறையா?

### வடக்கு மாகாணப் பிரதம செயலாளருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூன் 3

யாழ்.மாநகரசபைப் பகுதியில் அமுல் செய்யப்படும் வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத்திட்ட (நெல்சிப்) நடைமுறைப்படுத்தலில், மாநகர சபையின் உறுப்பினர்களில் எட்டுப் பேரின் ஆலோசனைகள் ஏதும் பெறப்படவில்லை இது முறையா, சரியா?

மக்களுக்கான திட்டம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் ஆலோசனை பெறாமல் தன்னிச்சையாக முன்னெடுக்கப்படுவது, மக்கள் பங்கேற்புத் திட்டமாகாது.

இவ்வாறு யாழ்.மாநகர சபையின் எதிர்க்கட்சியைச் சேர்ந்த எட்டு உறுப்பினர்கள் வடக்கு மாகாண பிரதம செயலாளரிடம் முறையிட்டுள்ளனர்.

எட்டு உறுப்பினர்களும் கையொப்பம் இட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டமை வருமாறு-

✱ மேற்படி திட்ட அமுலாக்கம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபை பின்பற்றும் முரண்பாடான அணுகுமுறை பற்றி கீழ்க் கையொப்பமிடும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர்களாகிய நாம் தங்களது அவசரமான கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

✱ எமது மாநகர சபைக்கு இத்திட்டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அறியவந்தபோதும் இந்த விடயம் தொடர்பாக சபைக்கு முறைப்படியான தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மாறாக மாநகர நிர்வாகம் எம்மில் எட்டு உறுப்பினர்களைத் தவிர்த்து, தாம் தன்னிச்சையாகத் தெரிவுசெய்த உறுப்பினர்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்பி கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதாகவும் அதில் அழைக்கப்பட்ட அங்கத்தவர்களை மட்டும் உள்ளடக்கி ஒன்பது மக்கள் திட்டமிடல் கொத்தணிகள் உருவாக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. மக்கள் பிரதிநிதிகளே இல்லாத திட்டமிடல் மக்கள் பங்கேற்புத் திட்டமாகாது.

✱ மக்கள் பங்கேற்புத் திட்டமொன்றில் மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட எம்மை புறக்கணித்து கலந்துரையாடல்களையும் கருத்தறிதல்களையும் நடத்துதல் இத்திட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுக்கே முரணானதும் அவற்றை மீறுவதுமாகும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

✱ இந்தத் திட்டமானது மாநகர சபைக்கு வழங்கப்பட்டதேயன்றி அதன் ஒரு பகுதி உறுப்பினர்களுக்கு அல்ல என்பதையும் இதன் அமுலாக்கம் மற்றும் நிதி நடவடிக்கைகள் மாநகரசபைக் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக இடம்பெறவேண்டும் என்பதையும் குறிப்பிட்டு மாநகர நிர்வாகம் இந்தச் சட்ட விதிகளுக்கு முரணாகவே இவ்விடயத்தில் செயற்படுவதாகவும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எனவே இந்த விடயத்தில் தாங்களும் வடக்கு மாகாண சபை நிர்வாகமும் தலையிட்டு இத்திட்டத்தை ஜனநாயக வழிமுறைகளுக்கமையவும் சட்டவிதிமுறைகளுக்கமையவும் திட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமையவும் நடைமுறைப்படுத்துமாறு மாநகர நிர்வாகத்துக்கு பணிப்புரை வழங்குவதுடன் செயற்பாடுகளை நெருக்கமாக கண்காணிக்குமாறும் வேண்டுகின்றோம். - என்றுள்ளது. (ஒ-1)

# புலிகளின் கீழ் இயங்கினராம் ஆறு சிங்களவர்கள் கைது

கொழும்பு,ஜூன்3

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் முக்கியஸ்தர் ஒருவரின் கீழ் செயற்பட்டு வந்தனர் என்று கூறப்படும் ஆறு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த அறுவரும் சிங்களவர்கள் ஆவர்.

இராஜாங்கனைப் பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட மேற்படி உறுப்பினர்களுள் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரும் கடற்படைச் சிப்பாய் ஒருவரும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள புலிகள் இயக்கத்தின் முன்னாள் முக்கியஸ்தரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்தே இந்த அறுவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ரீ-56 ரகத் துப்பாக்கியொன்று, இரு மகஸின்கள் மற்றும் 60 துப்பாக்கி ரவைகள் போன்றனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி ரீ- 56 ரகத் துப்பாக்கி கடந்த 2003ஆம் ஆண்டு மன்னார் பொலிஸ் நிலையத்திலிருந்து காணாமல் போனது என அடையாளம் காணப்பட்டுள்ளது என்று இராஜாங்கனை பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-சி)

# முன்னாள் போராளிகள் 120 பேருக்கு தொழில் பயிற்சிச் சான்றிதழ்கள்

கொழும்பு,ஜூன்3

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 120 பேருக்கு தச்சுத் தொழில், மேசன், வயரிங், வெல்டிங் போன்ற தொழில்துறைசார் பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கான சான்றிதழ்கள் நேற்று வழங்கப்பட்டன.

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவன கேட்போர் கூடத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கை வர்த்தக சம்மேளனங்களின் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டத்துக்கான நிதியுதவி, ஐரோப்பிய ஒன்றியத்தின் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதியத்தினால் வழங்கப்பட்டது. 'ஒக்ஸ்பாம்' நிறுவனம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

பயிற்சிகளைமுடித்துக்கொண்டவர்களுக்கு இலங்கை வர்த்தக சம்மேளனங்களின் சங்கத்தால் ஜேர்மன் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் வங்கிவைப்புபுத்தகமும்கையளிக்கப்பட்டது.

அதேவேளை, சிறப்பாகப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்குத் தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதேவேளை, பயிற்சியை சிறப்பாகப் பூர்த்தி செய்த இருவருக்கு விசேட விருதுகளும் வழங்கப்பட்டன. (ஒ-சி)

ஐபா கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு இலங்கைக் கிரிக்கெட் அணிக்கும் இந்திய சினிமா நட்சத்திரங்களுக்கும் இடையிலான நட்சத்திரக் கிரிக்கெட் போட்டி நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்வதற்காக வருகை தந்துள்ள ஹிந்தி நடிகர் விவேக் ஒப்ராய், இலங்கைக் கிரிக்கெட் அணித்தலைவர் குமார் சங்கக்கார மற்றும் இலங்கைக் கிரிக்கெட் சபை அதிகாரிகள், புளிசெவ் அதிகாரிகள் ஆகியோருடன் காணப்படுகின்றார்.




## வீடமைப்புத் திட்ட பயனாளிகள் தெரிவு

கிளிநொச்சி கணேசபுரம் கிராமத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 80 நிரந்தரவீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கான பயனாளிகள் தெரிவு இடம்பெற்று வருகிறது.

தலா 3லட்சத்து 25ஆயிரம் செலவில் அமைத்துக்கொடுக்கப்படவுள்ள இவ்வீடுகளின் பயனாளிகளை கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்பு ஆகியவற்றின் துணையோடு தெரிவுசெய்து வருவதாக அப்பகுதியின் கிராம அலுவலர் க.காண்டீபன் தெரிவித்தார். (50-405)

# இன்ஸ்பெக்டரின் கடன் அட்டையை திருடிய பொலிஸ் சார்ஜன்ட் கைது!

கொழும்பு,ஜூன்3

அநுராதபுரப் பகுதியில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரின் கடன் அட்டையை திருடிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த சார்ஜன்ட் கடன் அட்டையைப் பயன்படுத்தி பெருந்தொகையான பணத்தைத் தானியங்கி இயந்திரங்களின் ஊடாகப் பெற்றுள்ளார். அநுராதபுர குற்ற விசாரணைப் பிரிவினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரது வீட்டைச் சோதனையிட்டபோது கற்களுக்கு அடியில் இரண்டு லட்சத்து ஐயாயிரம் ரூபா பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக மூன்று லட்சத்துக்கும் அதிகமான பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது.

கடன் அட்டை காணாமற்போனமையை அடுத்து வங்கியில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும், உரிய கணக்கில் பணம் பெற்றுக்கொண்டவரின் விடியோ காட்சிகளைப் பரிசோதனை செய்ததன் மூலம் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார் என்றும் பொலிஸார் கூறுகின்றனர். (ஒ-சி)

# சட்டவிரோத முகவர் நிலையங்களை நடத்தியோர் சந்தேகத்தில் கைது!

கொழும்பு,ஜூன்3

அனுமதிப்பத்திரமின்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களை நடத்தி வந்த அதன் உரிமையாளர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்குக் கிடைத்த சில முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்தது.

திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட மூன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலையங்களிலிருந்தும் கடவுச் சீட்டுகள், விமான அனுமதிச் சீட்டுகளின் பிரதிகள் மற்றும் வேலைவாய்ப்புகளுக்காகப் பணம் அறவிடப்பட்டதற்கான பற்றுச்சீட்டுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

அத்தோடு, தொழில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தோரின் பெயர்ப்பட்டியல், பயிற்சிச் சான்றிதழ்கள், விசா பிரதிகள், தொழில் ஒப்பந்தங்கள் மற்றும் விண்ணப்பதாரிகளின் புகைப்படங்கள் என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டன என்று பணியகம் தெரிவித்தது.

சுற்றிவளைக்கப்பட்ட 3 முகவர் நிலையங்களுள் 2 நிறுவனங்கள் முன்னரும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காகத் தடைசெய்யப்பட்டிருந்தமை பற்றியும் தகவல்கள் வெளியாகியுள்ளன.(ஒ-சி)

# இந்தோனேஷியாவுக்குச் செல்லும் இலங்கையர்கள் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்

கொழும்பு,ஜூன்3

இந்தோனேஷியாவுக்குச் செல்லும் இலங்கைப் பயணிகள் கடும் சோதனைக்கும், விசாரணைக்கும் உட்படுத்தப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜகார்த்தா விமான நிலையத்தில் இந்தோனேஷிய குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளினால் இலங்கை கடவுச் சீட்டுகளை வைத்திருக்கும் பயணிகள் மாத்திரம் கடும் விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர் என செய்திகள் வெளியாகியுள்ளன.

அண்மையில் வர்த்தகக் கண்காட்சியொன்றில் கலந்துகொள்வதற்காக 200 பேர் கொண்ட தூதுக்குழுவொன்று இந்தோனேஷியாவுக்கு விஜயம் செய்திருந்தது. சுமார் ஒரு மணி நேரம் விமான நிலையத்தில் இவர்கள் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக இந்தோனேஷிய அதிகாரிகளிடம் ஊடகங்கள் வினவிய போது, இலங்கையிலிருந்து தமிழ் அகதிகள் ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்வதற்கு ஜகார்த்தாவை ஒரு தளமாகப் பயன்படுத்துகின்றனர் என இந்தோனேஷிய அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர்.

எனவேதான், தமிழ் அகதிகள் மாத்திரமன்றி இலங்கையின் கடவுச்சீட்டு வைத்துள்ள அனைவரும் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ஒ-சி)

# மாணவியைக் கடத்தியவர்கள் இராணுவச் சீருடையில் இருந்தனராம்

### புலனாய்வு விசாரணைகள் தீவிரம்

கொழும்பு,ஜூன்3

கொழும்பில் மாணவி ஒருவர் இராணுவச் சீருடையில் வந்தவர்களால் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸார் புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

கொழும்பில் தனியார் கல்லூரி ஒன்றில் பயிலும் மாணவி ஒருவர் பாடசாலையை விட்டு வந்துகொண்டிருந்த போது கடந்த மாதம் 18ஆம் திகதி வான் ஒன்றில் வந்த கும்பல் ஒன்றால் கடத்தப்பட்டார்.

மாணவியின் தந்தை 20லட்சம் ரூபாவைக் கப்பமாகச் செலுத்துவார் என்று கடத்தல் காரர்களுக்கு வாக்குறுதி வழங்கியமையை அடுத்து அம்மாணவி அன்றைய தினமே வெள்ளவத்தை சவோய் திரையரங்குக்கு அருகில் வைத்து விடுவிக்கப்பட்டார்.

இக்கடத்தல் சம்பவத்தில் நால்வர் ஈடுபட்டிருந்தனர் என்றும் அவர்கள் இராணுவச் சீருடை அணிந்திருந்தனர் என்றும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வருகிறது. (ஒ- சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஐபா' கிரிக்கெட் போட்டிகள் நாளை



யுனிசெவ்வின் 'சிறுவர்களுக்குக் கிரிக்கெட்' என்ற திட்டத்துக்கு நிதி சேகரிக்கும் நிகழ்ச்சியாக இந்தியாவின் முன்னணி சினிமா நட்சத்திரங்களுக்கும் இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கும் இடையிலான ஐபா கிரிக்கெட் போட்டிகள் நாளை 4ஆம் திகதி நடைபெறவுள்ளன.

கொழும்பில் இடம்பெறவிருக்கும் இந்திய சர்வதேச திரைப்பட விழாவான 'ஐபா' விருது வழங்கும் நிகழ்வில் நாளையதினம் மூன்று அணிகள் பங்குபற்றும் 'ஐபா' கிரிக்கெட் போட்டிகள் பிரமாண்டமான கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெறவுள்ளன.

இலங்கையில் முதன் முறையாக இடம்பெறவுள்ள 'ஐபா' கிரிக்கெட் போட்டிகளுக்கு சங்கக்கார, சுனில் செட்டி மற்றும் ஹிருத்திக் ரோசன் ஆகியோர் அணித்தலைவர்களாகச் செயற்படவுள்ளனர். இப்போட்டிகள் கொழும்பு சுகததாசா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

சல்மான்கான், டினோ மரியா, வினோத் காம்ப்ளி, கிரான் மோரே ஆகியோர் இந்திய அணிகளில் விளையாடுவர். அதேவேளை, சனத் ஜெயசூரிய, முத்தையா முரளிதரன், மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் இலங்கை அணியில் விளையாடவுள்ளனர்.

# பொலிஸ் திணைக்களத்தில் ஊழல் இடம்பெறுவதே இல்லையாம்!

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் இலங்ககோன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 03

பொலிஸ் திணைக்களத்தில் ஊழல் இடம்பெறவில்லை. அவ்வாறு ஊழல் இடம்பெறுவதாகக் கூறுபவர்கள் ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும் எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோன் தெரிவித்தார்.

நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்தவாரம் விளையாட்டுத்துறை அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க இலங்கையில் அதிக ஊழல் இடம்பெறும் அரச நிறுவனங்களாக பொலிஸ் திணைக்களம், இலங்கை கிரிக்கட் சபை மற்றுக் கல்வி திணைக்களம் என்பவற்றை சுட்டிக்காட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை போக்குவரத்து சபை பஸ் அதிகரிப்பு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன், 03

இலங்கை போக்குவரத்து சபையினால் பஸ்களை அதிகரிக்க தீர்மானித்துள்ளமைக்கு இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

போக்குவரத்து சபையுடனான ஒன்றிணைந்த கால அட்டவணையின் கீழ் பஸ் போக்குவரத்து சேவைகளை மேற்கொள்வது தொடர்பாக நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களை அதிகரிப்பதானது சட்டத்திற்கு முரணான செயல் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் அங்குகூறுகையில், ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் பஸ் கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 'சீபா' உடன்படிக்கை தொடர்பாக அடுத்தவாரம் இந்தியப் பிரதமர் – ஜனாதிபதி மஹிந்த பேச்சு

கொழும்பு,ஜூன் 03

சீபா உடன்படிக்கை தொடர்பில் எதிர்வரும் வாரமளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் இடையில் உத்தியோகபூர்வ பேச்சு நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதியில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது என்று வர்த்தகத்துறைப் பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

தற்போதைய காலகட்டத்தில் சீபா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால், அது இலங்கைக்கு சாதகமாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் பிரதானமாக இலங்கையிலுள்ள வர்த்தகர்களுடனும், அனைத்துப் பங்குதாரர்களுடனும் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார் என்றும் நியோமல் பெரேரா குறிப்பிட்டார்.

## இரண்டாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடிக்கப்பட்டது. 500 கிலோ எடையுள்ள அந்தக் குண்டை செயலிழக்கச் செய்யும் நடவடிக் கையில் வெடிகுண்டு நிபுணர்கள் ஈடுபட்டனர். இதற்காக அப்பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

அப்போது எதிர்பாராத விதமாக அந்த குண்டு பயங்கரமாக வெடித்தது. இதில் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 6 பேர் காயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வவுனியா மாவட்ட அரச அதிபர் மற்றும் சிரேஷ்ட உயரதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதனையடுத்து நெடுங்கேணி வைத்தியசாலைக்கும் 'நியாப்' வேலைத்திட்ட அலுவலகத்துக்கும் சென்ற அமைச்சர்கள் அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

அத்துடன், நெடுங்கேணிப் பிரதேச செயலகத்திலுள்ள பொதுமக்களுடன் சந்திப்பொன்றும் இடம்பெற்றுள்ளது. அத்துடன் குறித்த மக்களின் பிரச்சினைகள் அமைச்சர்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)





உங்கள் கடினமான நேரங்களில் ஒரு நண்பனைப் போல் அழையுங்கள். கணனித் திருத்தம், மற்றும் ஆலோசனைகளிற்கு 0212222674/ 0773618586

STP Your Partner in IT Solutions
149, Kasthuriar Road, Jaffna.

வித்னா கல்வி நிறுவனம்
A/L 2012 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
வர்த்தகப் பிரிவு ஆரம்பம் 05.06.2010 Sat
Eco. - திரு. N.B.கஜீதரன் (12-01) B.Stu - திரு.யசோ (2-3)
Acc. - திரு. P. பகீரதன் (11-12)

வித்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2012 கலைப்பிரிவு ஆரம்பம் 05.06.2010

| | |
|---|---|
| Tam திரு.குழந்தை (8-9) | Log திரு.வாகீசன் (7-8) |
| Hic திரு.பத்மராஜா (11-12) | Hist திரு.தாஸ் (10-11) |
| Eco திரு.N.B கஜீதரன் (12-1) | Chri திரு.யூட் (9-10) |
| Pl.Sc. திரு.ஸ்ரீரங்கநாத் (10-11) | Drama திரு.N.கஜீதரன் (9-10) |
| Geo திரு.சுரேன் (10-11) | |

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.


# இடம் பெயர்ந்த மாணவர்கள்

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்கு நிரந்தர பாடசாலை மூலம் விண்ணப்பிக்குக!

யாழ்ப்பாணம், ஜூன் 3

வன்னிப்பெரு நிலப்பரப்பில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்ற மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைத் தமது நிரந்தர பாடசாலைகளில் விண்ணப்பிக்க வேண்டும். பாடசாலைகள் செயற்படாதவிடத்து வலயக்கல்வி அலுவலகங்களில் எதிர்வரும் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் சமுகமளித்து தமது விண்ணப்பங்களைப் பூரணப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் மேலும் தகவல் தெரிவிக்கையில் :-

வடக்கு மாகாணக்கல்வித் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர்களின் கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைய கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மடுக்கல்வி வலயம், வவுனியா வடக்குக் கல்விவலயங்களிலும் கல்வி கற்று தற்பொழுது இடம்பெயர்ந்த நிலையில் கல்விபயிலும் மாணவர்கள் தமது நிரந்தர பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் பாடசாலைகள் செயற்படாதவிடத்து வலயக்கல்வி அலுவலகங்கள் ஊடாக ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குப் பொருத்தமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் தமது சொந்தப் பாடசாலைகளுக்கோ அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா தெற்கு, துணுக்காய் கல்விவலயங்களுக்குச் சென்று தமது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்துகொள்ளலாம்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்தினம் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை என அறிவிக்கப்பட்டிருப்பதால் தமது விண்ணப்பங்களை உரிய திகதிகளில் பூர்த்தி செய்துகொள்வது பரீட்சைப் பெறுபேறுகளை உரிய முறையில் பெற்றுக் கொண்டு உயர்கல்வியைக் கற்பதற்கு வசதியாக இருக்கும்.

தற்பொழுது நலன்புரி நிலையங்களில் தங்கி இருக்கும் மாணவர்களின் விண்ணப்பங்கள் அதிகாரிகள், அதிபர்கள் உள்ளடங்கிய குழு நலன்புரி நிலையங்களுக்குச் சென்று நேரடியாகப் பூர்த்தி செய்து மாணவர்கள் நிரந்தரப் பாடசாலைகளில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதி செய்யப்படும்.

கிளிநொச்சிக் கல்விவலயம் கிளிநொச்சியிலும், முல்லைத்தீவுக் கல்விவலயம் முல்லைத்தீவுக் கச்சேரிக்கு அருகில் உள்ள முல்லைத்தீவு இந்து ஆரம்பப் பாடசாலையிலும் செயற்படுகின்றன.

மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக கல்விகற்றவர் என்ற நிலையில் உயர்கல்வி வசதியிலும் வேலை வாய்ப்பிலும் மாவட்ட நிலையில் முன்னுரிமை வழங்கப்படுவதால் ; வன்னிப்பெரு நிலப்பரப்பில் கல்வி கற்றவர்கள் தமது நிரந்தரப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரணதரம், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றுவது மாவட்ட நிலை முன்னுரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-11-207)

## சர்வதேசத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த ஆணைக்குழு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஏழு சம்பவங்களை விசாரணை செய்தது.

திருகோணமலை மாணவர்கள் படுகொலை, பிரான்ஸின் பட்டினிக்கு எதிரான அமைப்பின் தொண்டர்கள் படுகொலை உள்ளிட்ட பல விடயங்களை இந்தக் குழு விசாரணை செய்தது.

இதற்காக வெளிநாட்டிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் புத்திஜீவிகள் நியமிக்கப்பட்டனர். இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் பகவதியும் உதலாகம ஆணைக்குழுவில் அங்கம் வகித்தார். விசாரணைக்கு சாட்சியமளிக்க முன்வராதவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து செய்மதி ஊடாக சாட்சியமளிக்க வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

அவ்வாறு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட உதலாகம அறிக்கை என்னவாயிற்று என்பதே எனது கேள்வியாக உள்ளது? இது தொடர்பாக யாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யாருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது? என்பதையும் நான் அரசிடம் கேட்கின்றேன். இந்நிலையில் தற்போது புதிய ஆணைக்குழுவை அரசு நியமித்துள்ளது.

சர்வதேசத்துக்குப் பதிலளிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்ட இந்த விசாரணைக் குழு ஒன்றரை, இரண்டு வருடங்கள் கூடி உதலாகம விசாரணைக்குழுபோலவே மறைந்து போகும். - என்றார் கிரியெல்ல.

ஐக்கிய நாடுகள் சபை யுத்தக்குற்றம் தொடர்பாக விசாரணை செய்ய ஆணைக் குழு ஒன்றை நியமிக்கப்போவதாக அறிவித்ததை அடுத்து அரசு எண்மர் அடங்கிய இந்த ஆணைக்குழுவை அமைத்தமை தெரிந்ததே. இலங்கையின் நல்லிணக்கக் குழுவால் எந்தப் பயனும் இல்லை என சர்வதேச அமைப்புகள் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## உரிய தீர்வுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான தகவல்கள் குறித்து அரியநேத்திரன் எம்.பி. விளக்கம் அளித்துள்ளார். கூட்டமைப்புக்குள் எந்தப் பிளவுமே கிடையாது என்று அவர் உறுதியாகக் கூறினார்.

அவர் இது குறித்து தெரிவித்தவை வருமாறு:-

எமது தலைவர் சம்பந்தர் அரசை எல்லா விடயங்களிலும் ஆதரிக்கப்போவதாக ஒருபோதும் கூறவில்லை.

மாறாகத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் , உரிய தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால் அதை நிறைவேற்றுவதற்கு கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவு வழங்கும் என்றே கூறி இருந்தார்.

இது மிகவும் தூர நோக்கும், தெளிந்த சிந்தனையும்,அரசியல் சாணக்கியமும் மிகுந்த நிலைப்பாடாகும்.

எனவே, அவரின் இந்தக் கருத்தினால் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட வேண்டிய அவசியமே இல்லை.

அவரின் நிலைப்பாடே கட்சியின் நிலைப்பாடாகும்.

அவர் ஒரு போதும் கட்சியைத் தவறாக வழிநடத்தவே மாட்டார் என்பதில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெளிவாக உள்ளனர்.

கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுவிட்டது என்பதெல்லாம் வெறும் வதந்திகளே. இன்று, நேற்று அல்ல 2004 ஆம் ஆண்டு முதலே, 'இதோ கூட்டமைப்பு உடைந்துவிட்டது....' என்றெல்லாம் கட்டுக்கதைகளைப் பரப்பி வருகிறார்கள்.

கூட்டமைப்பு உடைந்து விட வேண்டும் என்று பேரினவாதிகளும், தமிழின விரோதிகளும் பேரவாப்படுகின்றார்கள். நாம் இதற்கு ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டோம்.

அரசியல் பேச்சுக்கான காலம் கனிந்து வருகின்ற நிலையில், இவ்வாறான விசமத்தனமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை கவலை தருகிறது. ஆனால் தமிழர்கள் இவ்வாறான பிரசாரங்களை நம்பி ஏமாறவோ, குழப்பம் அடையவோ தேவை இல்லை. - என்றார். (ஒ-சி)


வெளிவந்துவிட்டது
தரம் - 5 புலமைப்பரிசில் 2010
புண்ணியாமின் ஆசிரியரின் 3 ஆவது
4 ஆவது தொகுதி -
10 – வினாத்தாள்கள் – 110/=
யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்
அன்னை புத்தகசாலை
இல. 7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 222 9881 | இல. 23, தனக்களப்பு வீதி, சாவகச்சேரி. 021 227 0003

வெற்றுக்காணி தேவை
யாழ்ப்பாணம் நகரில் 5 கிலோ மீற்றர் சுற்றாடலுக்குள் கட்டடம் அமைக்கக் கூடிய 50 பரப்பு முதல் 70 பரப்பு நிலம் வரை தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.
T.P.: 0777 656918, 0777 726654


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org